www.padippkam.com


# போராட்டம்

2014 ஜனவரி | இதழ் 08 | 30.00 ரூபா


# மக்கள் உரிமைகளுக்கு ஆபத்து!

## ஒடுக்கப்பட்ட மக்களின் அணிதிரள்வு குறித்து அவதானம்

ஆளும் வர்க்கத்தின் அரசியல், சமூக, பொருளாதார உபாயங்களுக்கு எதிராக உருவாகக் கூடிய மக்கள் எழுச்சியை அடக்கி ஒடுக்குவதை நோக்கமாகக் கொண்ட செயற்பாடுகள் தலைதூக்கிக் கொண்டிருக்கின்றன.

முதலாளித்துவத்தின் போலியான அபிவிருத்தியினால மக்கள் வாழ்க்கைக்கும் சுற்றாடலுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்கு எதிராக தோன்றிய மக்கள் போராட்டம் அடக்கப்பட்டதோடு, வெலிவேரிய, ஹபராதுவை மற்றம கொபைகனை மக்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும். மக்களுக்கு செய்யும் இடையூறுகள் மற்றும் கொள்ளைகளுக்கு எதிராக நிந்தவூர் மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது கொடூரமான தாக்குதல் தொடுக்கப்பட்டது. மாணவர் இயக்கங்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்டு வரும் அடக்குமுறை நடவடிக்கைகள் வெளிப்படையாகவே தெரிகின்றன. சுகாதார ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்திற்கு எதிராக நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டதோடு, கடந்த காலங்களில் நடந்த தொழிலாளர் போராட்டங்களை நசுக்குவதற்காக சட்டம் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது.

2014ம் ஆண்டை தேர்தல் ஆண்டாக அறிவித்து ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்காக சித்தாந்த நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவும் அரசாங்கம் தயாராகி வருகிறது. இதற்கிடையில் எதிர்க் கட்சியிலுள்ள முதலாளித்துவக் குழுக்கள் மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்பான கோஷத்தை தாராளமய அரசியலுக்குள் சிறைபடுத்துவதற்கான செயல்களில் இறங்கியுள்ளது. இந்த நிலையில் ஜனநாயகத்திற்கான போராட்டத்தை வர்க்கப் போராட்டத்தோடு பிணைப்பதற்காக ஒடுக்கப்பட்ட சக்திகளை ஒன்றிணைப்பது தொடர்பில் முன்னிலை சோஷலிஸக் கட்சி கவனம் செலுத்தி வருகிறது.

## இடதுசாரிய கருத்தாடலுக்கு உயர்ந்த வரவேற்பு

தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் இடதுசாரி இயக்கம் எதிர்கொண்டுள்ள சித்தாந்த மற்றும் வழக்காற்று சவால்கள் குறித்து கட்சிக்குள் நடக்கும் கருத்தாடலை வர்க்கத்திற்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கையாக இடதுசாரி அரசியல் கட்சிகள், குழுக்கள் மற்றும் செயற்பாட்டாளர்களைக் கொண்ட கருத்தாடல் அரங்கை நிர்மாணிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் 23ம் திகதி ராஜகிரிய MDDR மண்டபத்தில் நடந்த கருத்தாடலில் நவ சமசமாஜக் கட்சி, ஐக்கிய சோஷலிஸக் கட்சி, சோஷலிஸக் கட்சி, மாவோவாத கம்யூனிஸக் கட்சி, இலங்கை முற்போக்குக் கட்சி, மாக்ஸ்- லெனின்வாத புதிய ஜனநாயகக் கட்சி ஆகிய இடதுசாரிய அரசியல் கட்சிகளும், பீபல்ஸ் மார்ச், பெக்ஸிஸ் குழுமம், நாம் 71 இயக்கம் போன்ற இடசாரிய குழுக்களும் மற்றும் இடதுசாரி செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

அதன்போது கருத்தாடலின் முதன்மை வடிவம் குறித்து பேசப்பட்டதோடு, அது குறித்து எழுத்தில் கருத்து பரிமாறிக் கொள்வதற்கு இணங்கப்பட்டது. கருத்தாடல் சம்பந்தமாக முன்னிலை சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சேனாதீர விளக்கமளித்ததுடன், கருத்தாடலை முன்னெடுத்துச் செல்லக்கூடிய முறை குறித்தும், கருத்தாடலின் தொனிப்பொருள் குறித்தும் கருத்து பரிமாறிக் கொள்ளப்பட்டது.

## லலித் - குகனை உடனே விடுதலை செய்!




லலித் மற்றும் குகன் கடத்தப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் அவர்களை விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் துண்டுப் பிரசுரம் விநியோகம் மற்றும் ஆர்ப்பாட்டம் கோட்டை ரயில் நிலையம் முன்பாக நடைபெற்றதுடன் பொரளையில் பொதுக்கூட்டமொன்றும் நடைபெற்றது. கொழும்பு கோடடை ரயில் நிலையத்தின் முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களில் ஒன்று மேலே காணப்படுகிறது.




4 ஆசியாவின் ஆச்சரியம்!





7 சமவுரிமைக்கான அவசியம் என்ன?





11 சிவன் விடு தூது...

# அரசாங்கம் அரத்தை நக்கும் பூனையைப் போன்றது

## நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார

முதலாளித்துவ ஆட்சியாளர்கள் அரத்தை நக்கும் பூனையைப் போன்றவர்கள் என வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார, ஆட்சியின் நெருக்கடியையே ஆட்சியாளர்கள் நக்கிக் கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.



எதிர்க்கட்சி சம்பந்தமாக குறிப்பிடுகையில் குரங்கையும் குரங்காட்டியையும் உதாரணத்திற்கு எடுத்துக் காட்டினர். குரங்காட்டி குரங்குக்கு காலையில் நான்கு அப்பில் பழத்தையும் பகல் வேளைக்கு மூன்று அப்பில் பழத்தையும் இரவிற்கு நான்கு அப்பில் பழத்தையும் கொடுப்பது வழமை. பின்னர் இரவு வேளையை நிறுத்திவிட்டார். அதனால் கோபம் கொண்ட குரங்கு ஆடுவதை நிறுத்திவிட்டது. மீண்டும் குரங்கை ஆடவைப்பதற்காக காலையில் இரண்டு அப்பில் பழங்களும் பகல்வேலைக்கு மூன்று அப்பில் பழங்களும் இரவைக்கு இரண்டு அப்பில் பழங்களும் கொடுத்தார். குரங்கு அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு மீண்டும் ஆடத்துவங்கியது, அது போன்றதுதான் எதிர் கட்சியினர் ஆர்ப்பாட்டங்களும் எனக்கூறினார்.

"கிரேக்க தேவதைகளின் கதையொன்று இருக்கிறது. மனிதர்கள் காட்டுக்குச் சென்று எத்தனை மரங்கள் இருந்தாலும் 'ஓக்' மரங்களை மட்டுமே வெட்டிக் கொண்டு சென்றார்கள். இது குறித்து மர தேவதையான சியுஸிடம் ஓக் மரங்கள் முறையிட்டன. இது விடயத்தில் தன்னால் எதுவும் செய்ய முடியாதெனவும், கோடரிக் காம்பும் ஓக் மரத்தினாலேயே செய்யப்பட்டிருப்பதாகவும் சியுஸ் தேவதை கூறியது. இதைப்போன்றுதான் அரசாங்கத்தினால் மக்களுக்கு எதிரான அடக்குமுறை இயந்திரமும் தயாரிக்கப்பட்டிருக்கிறது" என மேலும் குறிப்பிட்டதோடு, தற்போதைய நெருக்கடி வரவு செலவு மாத்திரமல்ல, அது சமூகமுறையின் நெருக்கடியுமாகுமெனக் கூறினார்.

# வன்னி நிலம் யாருக்கு?

வன்னி மக்களை லயன்களை அடிப்படையாகக் கொண்ட காலனிகளில் அடைத்துவிடுவதே, அரசு அறிவித்து இருக்கும் புத்தாண்டுச் செய்தி. அண்ணளவாக 71 ஆயிரத்து 716 ஏக்கர் நிலம் வன்னியில் சுவீகரிக்க உள்ளதாக, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்துள்ளாா. இதன் பின்புலத்திலேயே இந்திய வீட்டுத்திட்டம் இயங்குகின்றது என்பது அம்பலமாகி இருக்கின்றது.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, செட்டிகுளம், ஓமந்தை, கனகராயன்குளம், நயினாமடு தந்திரிமலை ஆகிய பகுதிகளில் 42 ஆயிரத்து 111 ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு ஆகிய பகுதிகளில் 24 ஆயிரத்து 340 ஏக்கரும், மன்னார் மாவட்டத்தில் மடு, மாந்தை தெற்கு ஆகிய பகுதிகளில் 5185 ஏக்கர் காணியும், கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் பகுதியில் 200 ஏக்கர் (80 ஹெக்டெயர்) காணியும் சுவீகரிக்கப்படவுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் 71 ஆயிரத்து 716 ஏக்கர் காணியை அபகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம், எதிர்வரும் 3ஆம் திகதி ஜனாதிபதியின் தலைமையிலான அமைச்சரவைக்கு வருகின்றது.

மக்களிடம் அபகரிக்கும் நிலத்தை, எந்ததெந்த பன்னாட்டு நிறுவனங்களுக்கு பங்கிட உள்ளனர் என்ற விபரங்கள் இதுவரை வெளிவராத போதிலும், மக்களை நிலத்தில் இருந்து அகற்றி பண்ணையாக்கும் திட்டமே வெளியாகி இருக்கின்றது. 72 ஆயிரம் ஏக்கர் மட்டுமல்ல, வன்னி மண்ணையே பன்னாட்டு நிறுவனங்களுக்கு சொந்தமாக்கும் ஆரம்ப திட்டத்தினை அறிவித்துள்ளனர். கடந்தகாலத்தில் இது பற்றி கூறிவந்திருக்கின்ற இந்த உண்மை, இன்று நடைமுறைக்கு வந்துள்ளது.

மக்களிடம் அபகரிக்கப்படும் வன்னி நிலங்கள் இன்று குறுந்தமிழ் தேசியவாதம் எந்த நவ தாராளமய பொருளாதாரத்தை ஆதரித்து, அதன் தயவில் இயங்குகிறதோ, அவர்களுக்கே வழங்கப்படவுள்ளது- அதாவது இந்திய மற்றும் மேற்கத்தைய அரசுகளின் அனுசரணையுடன் அந்நாடுகளின் சர்வதேசக் கம்பனிகளுக்கு வழங்கப்படவுள்ளது. மேற்படி தமிழ் குறுந்தேசிய அரசியல்வாதிகள் சொல்வது போல, சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கல்ல மஹிந்த அரசின் இந்த நிலஅபகரிப்பு.

# கல்வி தனியார்மயத்திற்காகவே மாணவர்கள் அடக்கப்படுகின்றனர்

பல்கலைக் கழக மாணவர்கள் பலரின் மாணவர் உரிமையை இரத்துச் செய்வதற்கும், மேலும் பல மாணவர்களின் மாணவர் உரிமையை நிறுத்துவதற்கும் ஆளும் வர்க்கம் நீதிமன்றத்தின் துணையை நாடியிருப்பது மாணவர் அடக்குமுறையை தீவிரமாக்குவதற்காகவே என அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் குற்றஞ்சாட்டுகிறது.

எதிர்காலத்தில் இலவசக் கல்வியையும் கல்வியின் சுதந்திரத்தையும் கேட்டு போராடவிருக்கும் மாணவர் அமைப்புகளை பலவீனப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அரசாங்கத்தின் கல்வி அதிகாரிகள் இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதி கூறினார்.

இதுவரை ரஜரட்டை பல்கலைக் கழகத்தில் 57 மாணவர்களின் மாணவர் உரிமை நீதிமன்றத்தின் உதவியோடு ஆட்சியாளர்கள் பறித்துள்ளார்கள். இதற்கிடையில் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் சஞ்சீவ பண்டாரவிற்கு வழங்கப்பட்ட பிணை நிபந்தனைகள் மீறப்பட்டதாகக் கூறி அவரை கைது செய்வதற்கும் முயற்சி நடைபெறுகிறது. இப்படியாக மாணவர் அமைப்புகளின் செயற்பாட்டாளர்களை பல்வேறு முறைகளில் அடக்கி அல்லது அவர்களது வாயை மூட வைத்து கல்வி தனியார்மயத்தை முன்னெடுக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் செயற்படுவதாக அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் சுட்டிக் காட்டுகிறது.

# எரிக்கப்பட்ட இராணுவ யுவதியின் வீடு



வவுனியாவில் உள்ள மீள்குடியேற்ற - சுந்தரபுரம் வீட்டுத் திட்ட பகுதியில் இராணுவத்தில் இணைந்துள்ள யுவதியொருவரின் வீடு கடந்த மாத இறுதியில்,28.12.2013 அன்று அதிகாலை " இனந் தெரியாதோரால் " எரிக்கப்பட்டது.

இவ் எரியூட்டலானது , இராணுவத்தில் பணியாற்றும் அவ் யுவதியை குறிவைத்தே நிகழ்த்தப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர் அவ் வீட்டுக்குத் தீ வைத்தோர் ,மேற் குறிப்பிட்ட யுவதி நத்தார் விடுமுறையைக்களிக்க வீட்டுக்கு வந்திருப்பார் என்ற முடிவுடன் , அதிகாலையில் இக்கொடுமையை நிகழ்த்தியுள்ளனர்.

தற்செயலாக சம்பவம் இடம்பெற்ற வேளை, அவ் யுவதி வீட்டுக்கு விடுமுறையில் வரவில்லை. அவரது தாயார் தனது மகன் வீட்டிற்கு சென்றிருந்ததுடன், ஏனையவர்கள் அருகில் உள்ள வீடொன்றில் அன்றிரவு தங்கியிருந்த நிலையில் குறித்த வீட்டிற்குள் நுழைந்து பெறுமதிமிக்க தளபாடங்கள், ஆவணங்களை தீயிட்டு எரித்துள்ளனர். அத்துடன் வீடும் எரியூட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் நால்வரை வவுனியா பொலிஸார் கைது செய்தனர். வழமைபோல பொலிசார் விசாரணையைத் தொடர்கின்றனர்.

அதி உச்சத்தில் யுத்தம் நடந்த போது கூட புலிகளோ அல்லது அரசோ , யுத்தத்தில் ஈடுபட்ட நபர்களின் குடும்பங்களைத் திட்டமிட்ட முறையில் குறிவைத்துத் தாக்கியது கிடையாது. ஆனால், இன்று யுத்தம் முடிந்த நிலையில், உணர்ச்சி பொங்க உரையாற்றும் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் இருபக்க இனவாதிகளின் செயற்பாடுகளால் தூண்டப்பட்டு, அயலவர்களையும், உறவுகளையும் கொலை செய்யும் நிலைக்கு நம் மக்கள் தள்ளப்படுகின்றனர்.

இராணுவத்தில் இணைந்ததனால் ஒரு குடும்பத்திற்கு எதிராக நடாத்தப்பட்ட வன்செயல் பற்றிய செய்தி , பெரும்பான்மையான இலங்கையின் ஊடகங்களில் எந்த வித கவனத்தையும் பெறவில்லை . குறிப்பாக தமிழ் ஊடகங்கள் அவ் வன்செயல் பற்றி மூச்சுக் கூட விடவில்லை . முற்போக்கு கதைத்தபடி, பெண்ணியம் மற்றும் மனித உரிமைகள் பற்றி உரக்கக் குரல்கொடுப்போரும் ஒன்றும் நடக்காதது போல பாசாங்கு செய்கின்றனர் .

# சம சுகாதார ஊழியர்கள் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உண்ணாவிரதம்




ஏழுவருட சம சுகாதார பட்டப்படிப்பை மூன்று வருடங்கள் வரையில் குறைப்பதற்கு எதிராக ருகுணு சம சுகாதார மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்த சத்தியாக்கிரகம் பொலிஸாரின் தடைகளுக்கு மத்தியில் டிசம்பர் 31ம் திகதி தொடங்கப்பட்டது.

மேற்படி சத்தியாக்கிரகம் லபதுவ மாணவர் வளவில் 31ம் திகதி காலை 10.30க்கு ஆரம்பமாகியது. எதிர்ப்பு நடைப்பயணம் இரண்டு மணி நேரத்தில் காலி பஸ் நிலையத்தை வந்தடைந்தது. மாணவர்களால் அங்கு பிணப்பெட்டி வைக்கப்பட்டு மலர் வலயமும் வைக்கப்பட்டதோடு, அமைச்சர் ஏ. திசாநாயகாவின் உருவப் பொம்மையொன்றும் காட்சிப்படுத்தப்பட்டது. பொலிஸ ில் ாரின் இடையூறுகளுக்கு மத்தியில் பொம்மை கொளுத்தப்பட்டது. இதன்போது பொலிஸாரினால் மாணவர்கள் வீடியோ படமெடுக்கப்பட்டதுடன். அவர்கள் உத்தியோக உடை தரித்த காடையர்களைப் போன்று நடந்து கொண்டார்கள். எவ்வாறாயினும் மாணவர்கள் தமது சத்தியாக்கிரகத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.



# CHOGM மக்களுக்கு கிடைத்தது என்ன?




பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்களின் மாநாடு 2013 ம் ஆண்டின் தனது கூட்டத்தொடரை இலங்கையில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 17 ம் திகதி நடாத்தியிருந்தது. இதனையடுத்த ஒராண்டிற்கான பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைமையினை ஏற்றுக்கொண்டு இம்மாநாட்டின் இறுதி நாளன்று உரைநிகழ்த்திய மகிந்த ராஜபக்ச பலதரப்பட்ட தீர்மானங்களை சமர்ப்பித்திருந்தார். அரசு ஏற்றுப் பிரகடனம் செய்துகொண்ட தீர்மானங்களில் அனைவருக்குமான ஜனநாயகம் மற்றும் மனிதவுரிமை என்பது அவற்றில் ஒன்றாகும். அனைவருக்குமான மனிதவுரிமை மற்றும் ஜனநாயகத்துக்கான தீர்மானம் பற்றிய பிரகடனம் செய்யப்பட்டு மூன்று நாட்கள் கூட ஆகியிருக்கவில்லை, அதற்குள்ளேயே நிந்தவூர் மக்களின் ஆர்ப்பாட்ட எதிர்ப்பு ஊர்வலமானது பொலீஸ் படைகளால் மிருகத்தனமாக தாக்கப்பட்டது. அப்பகுதியில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்களில் இராணுவப்படையின் பிரிவொன்று சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்ததாக கூறி மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமே பொலீஸ் படைகளால் இவ்வாறு மிருகத்தனமாக தாக்கப்பட்டது. கண்ணீர் புகைக்குண்டுகள் மற்றும் பற்றன் தடிகளால் தாக்கப்பட்ட அதேவேளை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட 212 பேர் கைது செய்யப்பட்டார்கள். பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் காரணத்தால் ஜனாதிபதி தனது " பேட்டை ரவுடி" த் தனத்தைக் கைவிட்டாகவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார் என்ற ஒரு சில கட்டுரையாளர்களின் கணிப்புக்கள் இங்கு இச்சூழலில் திரும்பிப் பார்க்கப்பட வேண்டும்.

பல நூறு கோடிகள் செலவாகியிருந்த நிமித்தத்திலும் சில இலாபங்களாவது ஜனநாயக உரிமைகள் என்றடிப்படையில் கிடைக்கும் என இந்த எழுத்தாளர்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் மூன்று அல்லது நான்கு நாட்கள் கூட ஆகவில்லை அரசானது தன்னுடைய உண்மைச் சொரூபத்தை நிந்தவூர் மக்களின் கண்களை ஒற்றை விரலால் குத்தியதின் மூலம் வெளிப்படுத்தியது. இந்த மாநாட்டின் மூலம் ஆட்சியாளர்களின் எதேச்சதிகார பிற்போக்குத்தனத்துக்கு தடைகள் ஏற்பட்டுள்ளன என நம்பியிருந்த இந்த தாராளவாத எழுத்தாளர்களின் நம்பிக்கையும் இதனால் சிதைந்து போனது.

ஆட்சியாளர்களின் அரச ஊடகங்கள் ஜனாதிபதி“கெவும்” (Oil cakes) கேக்குகள் பரிமாறுகிறார் என்று ஆரவாரத்துடன் “தேசப்பற்று” க் கதைகளை தாங்கி வெளிவந்தன.

அரசாங்கம் தானே தனது செலவில் பிரசுரித்து வெளியிட்டிருந்த போஸ்டர்கள் பொதுநலவாய அமைப்பின் “ மகாநாயக்கா” ஜனாதிபதி என்றழைத்திருந்தது.

மகாநாயக்கா எனப்படுவோர் புத்தமதக் கூறுகளிலே காணப்படுபவர்கள் என்றிருக்கின்ற அதேசமயம் பொதுநலவாய நாடுகளின் அமைப்பு ஒரு தலைவரை மட்டுமே கொண்டதாகும். பொதுநலவாய அமைப்பு நாடுகளின் மாநாட்டின் பின்னர் நாட்டில் ஜனநாயகம் பூத்துக் குலுங்கப் போகின்றதென காத்திருந்த தாராளவாதிகள் அதற்குப்பதிலாக வழமைபோலவே

நவ தாராளவாதம் எனும் பிசாசு, பிற்போக்குத்தனங்கள், தேசியவாத மேலாதிக்கம் (சர்வாதிகார) அடக்குமுறை என்கின்றவற்றையே எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

நாடுகளின் அரசதலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்நிபந்தனை, மாநாட்டினை பகிஸ்கரிப்பதன் மூலம் இலங்கையில் ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்க வைக்க அவ் வெளிநாட்டு அழுத்தங்கள் வாய்ப்பளிக்கும் என எதிர்பார்த்தவர்களும் உண்டு.

கனடிய மற்றும் இந்திய பிரதம மந்திரிகளின் பகிஸ்கரிப்பின் மூலம் சில அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட போதிலும் இலங்கை அரசானது மக்களது ஜனநாயக உரிமைகள் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் வான வேடிக்கை, பட்டாசு வெடிகள் போன்றவற்றின் மூலமாக மாநாடானது பிரமாண்ட வெற்றி அடைந்துள்ளது என்ற கதையை விற்க முயல்கின்றது.

இலங்கையில் ஜனநாயகம் என்பது குறித்து நற்சான்றிதழ் ஒன்றினை அனைத்துலக நாடுகளின் தலைவர்களின் மூலம் பெற்றுக்கொண்டால் அதன் மூலம், தன்னுடைய சொந்த அடக்குமுறைகளால் உருவாக்கிக் கொண்ட உலக நாடுகள் மத்தியிலான கரும்புள்ளிகளை துடைத்து ஒரு அரசியல் வெற்றியொன்றினை எட்டிவிடலாம் என்று அரசாங்கம் எதிர்பார்த்தது.

அரசாங்கம் எதிர்பார்த்திருந்தபடி தனது இந்தப் பிரயாசையில் முடிந்தளவு வெற்றிபெறலாம் என்பது சாத்தியப்படாது போய்விட்டது. இருந்தபோதிலும் அரசாட்சியிலுள்ள அதிகார ஆளும் வர்க்கத்தினருக்கான வெற்றிகள் இந்த மாநாட்டின் ஊடாக எட்டப்பட்டுள்ளன. மக்கள் என்ன பெற்றுக்கொண்டார்கள்? இந்த மாநாட்டை நடத்தி முடிப்பததற்கான மிகையாகச் செலவிடப்பட்ட பெருந்தொகை பணத்தின் சுமை மக்களது தலைமேல் சுமத்தப்பட்டுள்ள அதேவேளை நாட்டுக்கு மோசமான விளைவுகளைத் தரும் ஆளும் வர்க்கத்தின் கருத்துநிலைக்கு மாநாடானது பலமளித்திருக்கின்றது.

அழுத்தங்களை பிரயோகித்த நாடுகளின் மத்தியப்புள்ளியாக பிரித்தானிய அரசினை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளாம். இலங்கையில் அரசினால் கடத்தப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், கொலை செய்யப்பட்டவர்கள் எண்ணிறைந்த அளவில் இருக்கும் போது பிரிட்டனுக்கு தனது ஒரு பிரஜை முக்கியமாகப்பட்டது. தங்காலையில் ஒரு வருடத்துக்கு முன்னர் தனது நாட்டு உல்லாசப்பயணி ஒருவர் கொலைசெய்யப்பட்ட சம்பவத்தில் சந்தேகநபரை கோர்ட் விசாரணைக்கு உட்படுத்தாது விடின் பிரிட்டனின் அரச தலைவர் மாநாட்டில் பங்குகொள்ள மாட்டார் என்ற நிபந்தனையை பிரிட்டன் அறிவித்தது.

அதாவது தனது ஒரு ஒற்றைப் பிரஜைக்காக மட்டுமே பிரிட்டன் நீதி கோரியது. இவ்வளவு தான் அவர்கள் பீற்றிக்கொள்ளும் ஜனநாயகத்தின் எல்லை. சம்பவம் நடந்து ஒரு வருடம் மட்டுமே கடந்துபோயிருந்த நிலையிலும் தங்காலை பிரதேச சபைத்தலைவர் கைது செய்யப்பட்டு கோர்ட்டில் ஒப்படைக்கப்பட்டு கொலைக் குற்றம் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னரே பிரிட்டன் திருப்தியடைந்து மாநாட்டில் தனது அரச தலைவரை கலந்துகொள்ள வைத்தது.

அரசாங்கம் மாநாடு தொடங்குவதற்கு முன்னர் தங்காலைப் பிரதேச சபையின் தலைவரைக் கைது செய்து, மாநாடு முடிந்த கையோடு பிணையில் விடுதலையும் செய்தது. இலங்கை மற்றும் பிரித்தானிய ஆளும் வர்க்கங்களால் கையாளப்படும் தந்திரோபாயங்கள் இவை.

இலங்கையின் தேசிய பெருமை உலக மட்டத்தில் இந்த மாநாட்டின் மூலம் உயர்வடையும் என அரசாங்கம் திரும்பத் திரும்பக் கூறி வந்தது. இந்தப் பிரச்சாரத்திற்குள் வீழ்ந்து போன பெரும்பாலானவர்கள் தேசிய பெருமை என்ற பெயரால் எல்லாவகைப்பட்ட கஸ்டங்களுக்குள்ளும் ஆளானார்கள்.

பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் வரலாற்றை ஆராய்ந்து அறிந்துகொள்வோமாயின் இந்த தேசிய பெருமை என்பதின் உண்மை நிர்வாணமாகிவிடும்.

பல வகைப்பட்ட சர்வதேச நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றுள் அங்கம் வகிக்கும் நாடுகள் முறையே தங்களது அரசியல் மற்றும் பொருளாதார நோக்கங்களை அங்கே பிரதிபலித்து உடன்பாடுகள் காண்கின்றன. இவ்வாறான உடன்பாடுகள் மத்தியில் முற்போக்குத்தன்மையுடையன, பிற்போக்குத்தன்மை கொண்டவை என அவைகள் வகைப்படும்.

ஐரோப்பியயூனியன், ஜி-9டபிள்யு. ரி. ஓ, பி.ஆர்.ஜ.சி, இலத்தீன் அமெரிக்க அல்பா ஒப்பந்தம் மற்றும் சார்க் போன்ற சர்வதேச கூட்டு அமைப்புக்கள் பூகோள அரசியலில் தொடர்ந்து செல்வாக்கு செலுத்துபவை. அனைத்துலக அரசியல் விவகாரங்களிலும் நன்மைக்கோ தீமைக்கோ தலையீடு செய்பவை.

பொதுநலவாயநாடுகளின் அமைப்பானது 54 உறுப்புரிமை நாடுகளைக் கொண்டதாகும். இந்த அமைப்பு எத்தனை சந்தர்ப்பங்கில் அனைத்துலக அரசியல் விவகாரங்களில் நன்மைக்காகவோ தீமைக்காகவோ தனது அரசியல் செல்வாக்கை வெளிப்படுத்தியிருக்கிறது எனக் கேட்டால் மிகவும் அரிதெனவே காணலாம். பிரிட்டனின் காலனிநாடுகள் தமக்கிடையில் ஒன்றுகூடி அநுபவிக்கும் ஒரு தேநீர் விருந்து என்பதற்கு மேலாய் வரலாற்றில் வேறு எதுவுமில்லை.

சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஸ் சாம்ராச்சியம் என அழைக்கப்பட்ட ஒரு சாம்ராச்சியத்தின் ஆட்சிக்குட்பட்டிருந்த 54 நாடுகளை இணைத்து பொதுநலவாயநாடுகள் என இன்னொரு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த 54 நாடுகளில் இன்றும் 14 நாடுகள் பிரித்தானியாவின் காலனிய நாடுகளாகவே இயங்குகின்றன.

15ம் பக்கம்

# ஆசியாவின் ஆச்சரியம்!



விடைபெற்றுச் செல்லும் 2013 புதிய செய்திகளையும் ஆச்சரியங்களையும் தந்துவிட்டு விடைபெற்றுச் செல்கிறது. இலங்கையிலே CHOGM ஒரு சர்வாதிகாரத்திற்கு மகுடம் சூட்டியதோடு அதற்கான செலவை நாட்டு மக்களின் தலையில் சூடிவிட்டு நடையைக் கட்டிவிட்டது. அனைத்து சர்வாதிகார, முதலாளித்துவ நாடுகளின் தலைவர்களும், காலனித்துவ எஜமானர்களும் ஆசி வழங்கிவிட்டு சென்று விட்டார்கள். களியாட்டங்களில் குதூகலித்த மக்கள், செய்த தவறுக்காக தலையில் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் நாட்டின் ஏதோவொரு பகுதியில் தேர்தலை நடத்தும் ஒரே நாடான இலங்கையின் வடக்கு மக்கள் தாம் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தருமாறு கேட்டார்கள். அரசாங்கமோ தேர்தலை கொடுத்தது. இனவாதம் நன்றாகவே விலைபோன தேர்தலில் அதிகார வர்க்கத்தோடு இன்னொரு குழுவையும் மக்கள் சேர்த்துக் கொண்டார்கள். இப்போது தங்களை ஆள்வது யார் என்று தெரியாத நிலையில் மக்கள் திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறார்கள். இராணுவம் ஆள்கிறதா, ராஜபக்ஷ ஆள்கிறாரா அல்லது விக்னேஸ்வரன் குழு ஆள்கிறதா என்பதை தெரியாமல் மக்கள் தலையைப் பிய்த்துக் கொள்கிறார்கள். தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற பேதமில்லாமல் எல்லோரது உரிமைகளும் பறிக்கப்படுகின்றன. பணம்படைத்தவனுக்கு மாத்திரமே இனி கல்வி என்ற நிலை உருவாகிவிட்டது.

பொருளாதாரச் சுமையை தாக்குப்பிடிக்க முடியாமல் பல குடும்பங்கள் தத்தளிக்கின்றன. நாட்டில் கலாச்சாரம் சீரழிந்து சின்னாபின்னமாகிக் கிடக்கிறது.

சமீபத்தில் தம்புத்தேகம எப்பாவல பிரதேசத்தில்பெற்றோரால் கைவிடப்பட்டுபலநாட்கள் பட்டினியில் கிடந்து, சாகும் தறுவாயிலிருந்த ஐந்து குழந்தைகள் அயலவர்களினால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். குடும்பச் சுமையை தாங்கமுடியாமல் குடும்பப் பெண்கள் விபச்சாரத்தின்பால் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல குடும்பங்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும்போது சக்கரவர்த்தியின் செல்வப் புதல்வர்கள் பந்தயக் கார் ஓட்டுவதற்காக மக்கள் பணத்தை கோடிக்கணக்கில் வாரி இறைக்கிறார்கள். மனிதர்கள் கடத்திச் செல்லப்படுகிறார்கள், காணமலாக்கப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள். தந்தையே மகளைக் கற்பழிக்கிறார். அண்ணன் தங்கையைக் கற்பழிக்கிறார், தாத்தா பேத்தியை கற்பழிக்கிறார். தாய் மகனிடம் தான் பெற்ற குழந்தைக்காக ஜீவனாம்சம் கேட்டு வழக்குத் தொடுத்ததும் இந்த நாட்டில்தான். கலாச்சாரத்தை சீரழித்த, பண்பாட்டை படுகுழியில் தள்ளிய, மனிதநேயத்தை துச்சமென மதிக்கும், மனிதர்களை விபச்சாரிகளாகவும், சூதாடிகளாகவும் திருடர்களாகவும், பிச்சைக்காரர்களாகவும் ஆக்கிக் கொண்டிருக்கும் நாட்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வெட்கமாக இல்லையா? இந்த சர்வாதிகாரத்தின் கீழ் எல்லாமே விற்கப்படுகின்றன. சூறையாடப்படுகின்றன. மக்கள் சிந்திக்க வேண்டும்.

காலனித்துவ அடிமைகளின் மாநாடு முடிந்த கையோடு அரை நித்திரையிலிருந்த இனவாதம் தன்னைத் தானே சுதாகரித்துக் கொண்டு எழுந்துவிட்டது. வடக்கில் மக்களுக்குச் சொந்தமான காணிகள் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டு, மக்களின் காணி உரிமை மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், தெற்கில் நூற்றாண்டுகளாக முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து அவர்களை வெளியேற்றும் நடவடிக்கை சூட்சமமாக நடந்தேறி வருகின்றன. கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த தெவனகலை என்ற இடத்தில் காணி உறுதியுடன் நான்கு நூற்றாண்டுகளும் மேலாக வாழ்ந்து வரும் முஸ்லிம் மக்களை அவ்விடத்திலிருந்து விரட்டுவதற்காக புனித பூமி என்ற நாடகம் இனவாதிகளால் அரங்கேற்றப்படுகிறது. புனித பூமியில் கள்ளச் சாராயம் காய்ச்சலாம், விபச்சார விடுதிகளை நடத்தலாம், போதைப் பொருட்களை தாராளமாக விற்கலாம், சூதாட்ட நிலையங்களை அமைக்கலாம். ஆனால் மக்கள் குடியிருக்கக் கூடாது. வடக்கில் காணிகள் இராணுவத்திற்கு சொந்தமாகின்றன. தெற்கில் காணிகள் புனித பூமிகளாகின்றன. புத்தரின் போதனைகளை கடைபிடிப்பதை கைவிட்டு விட்டு புத்தரை வணங்கத் தொடங்கியதால் வந்த விளைவுதான் இது. இது தான் ஆசியாவின் ஆச்சரியம்!

“ தெஹிவளை பிரதேசத்தில் மூன்று பள்ளிகளில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடக் கூடாதென பொலிஸார் கூறுமளவிற்கு நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது. கோயில்கள் உடைக்கப்பட்டு அங்குள்ள பொருட்கள் திருடப்படுகின்றன. இவற்றையெல்லாம் நியாயப்படுத்த நாடாளுமன்றத்தில் கோமாளிகளும் உள்ளனர். ”

தெஹிவளை பிரதேசத்தில் மூன்று பள்ளிகளில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடக் கூடாதென பொலிஸார் கூறுமளவிற்கு நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது. கோயில்கள் உடைக்கப்பட்டு அங்குள்ள பொருட்கள் திருடப்படுகின்றன. இவற்றையெல்லாம் நியாயப்படுத்த நாடாளுமன்றத்தில் கோமாளிகளும் உள்ளனர்.

சமீபத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து அரசியலில் நுழைந்த ஒரு கவர்ச்சி நடிகை இந்த “சிஸ்டத்தை” மாற்றுவதற்காகவே தான் அரசியலுக்கு வந்ததாகக் கூறுகிறார். ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றை மாற்றியது எப்படி என்பதை இந்நாட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தெரியும். இவர் எந்த “சிஸ்டத்தை” மாற்றப் போகிறார் என்பது அவருக்கே வெளிச்சம்.

நாட்டில் நீதி செத்து எத்தனையோ ஆண்டுகளாகிவிட்டன. நீதி தேவதையின் கண்ணை கட்டிவிட்டு அவளை நிர்வாணமாக்கி விட்டார்கள். இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் இரத்தினபுரியில் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் இன்றைய அமைச்சரொருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அந்தக் கொலையை கண்ணால் கண்ட சாட்சியாக அன்றைய நாடாளுமன்ற உறுப்பினரும் இன்றைய அமைச்சருமான ஒருவர் இருக்கிறார். 27 வருடங்களுக்குப் பின்னர் வழக்கின் தீர்ப்பு வருகிறது, சாட்சிகள் திருப்தியாக இல்லாததால் சந்தேக நபர் நிரபராதி என்று விடுதலை செய்யப்படுகிறார். 1987ல் மூன்று பல்கலைக்கழக மாணவர்கள் தலையில் ஆணியடித்துக் கொல்லப்படுகிறார்கள். ஆணியடித்தவர் மேற்படி சந்தேகநபர் தானென்பதை நாடே அறியும். குற்றத்தை நிரூபிக்க முடியவில்லை. உறுப்பினர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு செத்திருக்கிறார். மாணவர்கள் தமது தலையில் தாமே ஆணி அடித்துக் கொண்டு செத்திருக்கிறார்கள். அவ்வளவுதான்.

பிராந்தியத்தை எடுத்துக்கொண்டால் இந்திய முதலாளித்துவ ஊடகங்களின் முக்கிய செய்தியாக இருப்பது தேவயானி என்ற அமெரிக்காவுக்கான துணைத்தூதுவர் கைது செய்யப்பட்டு சிலையில் அடைக்கப்பட்டிருப்பதுதான். தமது வீட்டில் வேலை செய்த சங்கீதா ரிச்சட் என்ற பெண்ணை மும்பையில் சந்தித்து தமது பணியாளாக அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்வதாகவும்,அதற்காக அவரது திறமையை பரீட்சிப்பதற்கு என்று கூறி வீட்டில் தங்கவைத்து சம்பளம் கொடுக்காமல் வேலை வாங்கியிருக்கிறார். 25,000 ரூபாய் சம்பளமும் மேலதிக வேலைக்காக 5000 ரூபாயும் தருவதாகக் கூறி அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்று உரிய சம்பளத்தையும் கொடுக்காமல்,அமெரிக்கத் தொழில் சட்டத்தை மீறி தொழில் ஒப்பந்தத்தையும் மீறி நீண்ட நேரம் வேலை வாங்கியிருக்கிறார். அங்கிருந்து தப்பிச் சென்ற சங்கீதா அமெரிக்க வழக்கறிஞரொருவரிடம் தஞ்சமடைந்துள்ளார். அமெரிக்க விசா விதிமுறைகளையும் மீறிய தேவயானி அமெரிக்க பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார். அவருக்காக இந்திய ஊடகங்களும், காவல்துறையும், அரசாங்கமும் வரிந்து கட்டிக் கொண்டு அமெரிக்காவிற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளன. ஆனால் பாதிக்கப்பட்ட அந்த அபலைப் பெண்ணுக்காக, அவளுடைய உரிமைகள் பறிக்கப்பட்டதற்கெதிராக யாருமே குரல் கொடுக்கவில்லை. அமெரிக்காவின் கொள்கைகளை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோமோ இல்லையோ. துணைத் தூதுவரின் செயலை நியாயப்படுத்த முடியாது. இந்த சம்பவத்தை வைத்து அமெரிக்காவிற்கு எதிராக இந்தியாவில் ஆர்ப்பாட்டங்கள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கையில், இந்தியாவிற்கு நான்கு போர்க்கப்பல்களை அமெரிக்கா வழங்கியிருக்கின்றது. மக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் முதலாளித்துவத்தின் வியாபாரங்களும் செவ்வனே நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

போதைப் பொருள் கடத்துபவர்களும், பாலியல் வன்முறையில் ஈடுபடுபவர்களும், உழைப்பைச் சுரண்டுபவர்களும், சூதாடிகளும் அதிகாரத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நவ தாராளமய முதலாளித்துவம் உலகெங்கும் செய்துவரும் அநியாயங்களுக்கும் அநீதிகளுக்கும் எதிராக ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களும் ஒன்று சேரவேண்டும். ஓரணியில் திரள வேண்டும். மீட்பர் வரும் வரை காத்துக் கொண்டிருக்க முடியாது. தானாய் எல்லாம் மாறும் என்ற பழைய பொய்யை துடைத்தெறிந்துவிட்டு புதிய பாதையில், சமவுடைமை நோக்கிய பாதையில் பயணிக்க தயாராக வேண்டும். அதற்காக திடசங்கற்பம் பூணுவோம். இன்னும் பல ஆச்சரியங்கள் 2014 புத்தாண்டில் காத்துக் கொண்டிருக்கின்றன. சவால்களை சந்திப்போம்! சாதிப்போம்!!

# மனித உழைப்புக்கு என்ன நடக்கின்றது என்ற அறிவே மார்க்சியத்தின் சாரம்



மார்க்சியம் - 08

உழைப்புக்கு என்ன நடக்கின்றது என்று தெரியாது மனிதன் வாழ்கின்ற போது, தனிவுடமை வீரியம் பெற்று மனித இனத்தை நுட்பமாக அடிமை கொள்வதே நவீன சமூகமாகின்றது. மனிதன் இந்த சமூக அமைப்பில் தன்னிலை அறியாது வாழ்தல் முறையே, தனிவுடமை அமைப்பின் சாரமாகும். மனித அறியாமை எந்தளவுக்கு வீரியமாகின்றதோ, அது தனியுடமையின் ஆற்றலாக மாறுகின்றது. தன் உழைப்பை நுகராது உழைப்பில் இருந்து அன்னியமாகிவிடும் மனிதன், இது ஏன் எப்படி நடக்கின்றது என்ற அறிவை இதன்பால் கொண்டு இருப்பதில்லை. மனித உழைப்புக்கு என்ன நடக்கின்றது என்ற அடிப்படை அறிவை தருவது தான் மார்க்சிய தத்துவம். வேறு எந்த தத்துவமும் இதைச் செய்வதில்லை.

அனைவரும் தத்தம் உழைப்பைக் கொண்டு வாழ்கின்ற அமைப்பாக மனித சமூகம் நீடித்து இருந்திருந்தால், மார்க்சியம் தோன்றி இருக்காது. தன் உழைப்பைக் கொண்டு வாழும் சமூகம் என்பது, உழைப்பைப் கொண்டு ஒருவரை ஒருவர் கட்டுப்படுத்தும் அவசியத்தை உருவாக்கி இருக்காது. மாறாக உழைப்பே மனிதனாக இருப்பதற்கான உயரிய செயலாக, சமூக நடத்தையாக, மனிதனின் இயல்பாக இருந்திருக்கும். இதற்கு மாறானதே இன்றைய சமூக அமைப்பு. இதன் அர்த்தம் அனைவரும் உழைத்து வாழக் கூடிய பொதுவுடமை சமூகத்துக்கு மார்க்சியம் ஒளியூட்டுகின்றது. உழைப்புச் சாதனங்கள் அனைவருக்கும் பொதுவானதாகவும், உழைக்கும் அனைவரும் சுதந்திரமாக உழைப்பில் ஈடுபட கூடியதாக இருக்குமானால், யாரும் யாரையும் சுரண்ட முடியாது. யாரும் யாரையும் அடிமைப்படுத்தவும் முடியாது. இதன் அர்த்தம் தனிவுடமைக்கு இடமில்லை. இதனால் தனியுடமைக்கேயுரிய சமூக அமைப்பின் முரண்பாடுகளும், யுத்தங்களும் தோன்றுவதற்கு கூட இடமில்லாமல் போய்விடும்.

இந்த அடிப்படை உண்மை உழைப்பவனிடம் இருந்து பறித்த உழைப்பின் சாதனங்களை மீள பொதுவுடமையாக்கக் கோருகின்றது. இதன் மூலம் அனைவரையும் உழைத்து வாழுமாறு வேண்டுகின்றது. மார்க்சிய அறிவியல் என்பது இதன் பாலானது.

மனிதன் தோன்றியது முதல் இன்றைய வாழ்வியல் எதார்த்தம் வரை, உழைப்பு சார்ந்த மிக சிக்கலான வாழ்வின் முழுத் தோற்றத்தையும், ஒருங்கிணைந்த வகையில் முரணற்ற வகையில் ஆராய்கின்றது மார்க்சியம். இதைப் பற்றிய தெளிவும், அதன் பாலான செயற்பாடும் மார்க்சிய அறிவாகவும், மனித சாரமாகவும் இருக்கின்றது.

இந்த அறிவியல் உள்ளடக்கத்தை விரித்துப் பரப்பினால் மனித உழைப்பு பற்றியும், உழைப்பிலான பயனை நுகருகின்ற முறை பற்றியும், நுகர்வால் உருவாகும் சமூக அமைப்பு பற்றியுமான ஒருங்கிணைந்த முழு அறிவே மார்க்சிய அறிவாகின்றது. மனிதனின் வாழ்வைப் பற்றிய அறிவு தான், மார்க்சிய அறிவாகின்றது. எது மனிதனின் உண்மையான வாழ்வோ, அதை முரணற்ற வகையில் விளக்குவது தான் மார்க்சியம். மற்றைய எந்த அறிவும் குரங்கில் இருந்து மனிதனை உருவாக்கிய உழைப்பில் இருந்து, உழைப்பை அதற்குரிய உண்மையான இடத்தில் நிறுத்தி பிறப்பதில்லை. மாறாக உழைப்பை இடமாற்றி, அதை நுகர்கின்ற முறையை முன்னிறுத்தியே பிறக்கின்றது.

உழைப்பு என்னும் மனிதச் செயற்பாடு தான் மனிதனை உருவாக்கியது. உழைப்புக்கு வெளியிலான வாழ்வு என்பது, இயற்கை மீதான மிருகத் தன்மையைக் குறிக்கும். உற்பத்தி செய்யும் திறன் தான் மனித குணம். ஆனால் இன்று அவனுக்கு சொந்தமில்லை. அவன் அதை மிருகங்களிடம் பகிர்ந்து கொள்கின்றான். மிருகத்துக்கு என்றுள்ளது மனிதனைச் சார்கின்றது. இது இந்த தனிவுடமை சமூக அமைப்பின் ஆன்மாவாக இருக்கின்றது.

"மானிடக் குரங்கிலிருந்து மனிதனாக மாறும் இடைக் காலத்தில் உழைப்பின் பங்கு" பற்றி ஏங்கெல்ஸ் கூறும் போது" விலங்கு இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்தி, தன்னுடைய இருப்பின் மூலமாக அதில் சில மாற்றங்களைக் கொண்டுவருகின்றது. மனிதன் தன் நடவடிக்கையின் மூலமாக இயற்கையைத் தனது விருப்பத்திற்கு ஏற்றாற் போன்று சேவை புரிய வைத்து, அதனுடைய எஜமானன் ஆகிறான்" என்றார். மனிதனை மிருகத்தில் இருந்து பிரித்த செயல் உழைப்பு. ஆனால் உழைப்பு இன்று அவனுக்கு சொந்தமில்லை. மிருகத்துக்குரிய நிலைக்கு உழைக்கும் மனிதன் தாழ்த்தப்பட்டு, உழைப்பு மிருகத்துக்குரிய தன்மையுடன் அபகரிக்கப்படுகின்றது. வேட்டையாடும் உணவை பறிக்கும் மிருகத்தின் நிலையில் தனியுடமை அமைப்பு இயங்குகின்றது.

மிருகத்தில் இருந்து மனிதனின் உழைப்புத் தான் மனிதனை பிரித்தது. உழைப்பில் இருந்து விலகிய மனிதனின் தன்மை, மிருகத்தனத்துக்குரியதாகின்றது. இப்படி மனிதத் தன்மையை அழித்த சமூக அமைப்புத் தான் இன்று வாழும் சமூக அமைப்பு. மனிதனின் சமூகத் தன்மையையொட்டி "பொருளாதாரம் - தத்துவம் குறிப்புரைகளில்" மார்க்ஸ் கூறுகின்றார் "விலங்கு தன் வாழ்வுச் செயற்பாடுகளை உடனடியாக தன்னோடு சேர்த்து எண்ணிக் கொள்கின்றது, அதனின்று தன்னைப் பிரித்துக்கொள்வது கிடையாது. மனிதன் தன் வாழ்வுச் செயற்பாடுகளை தன் விருப்பம், உணர்வு ஆகியவை வினைபுரியும் பொருளாக ஆக்கிக் கொள்கின்றான்! அவன் உணர்வு பூர்வமான வாழ்வுச் செயற்பாடுகள் கொண்டுள்ளான்" என்றார். "கூலி உழைப்பும் மூலதன"த்தில் இது பற்றி "உற்பத்தியில், மனிதர்கள் இயற்கையின் மீது மட்டும் வினையாற்றுவதில்லை, தங்களுக்கிடையிலும் வினை புரிந்து கொள்கின்றார்கள்" என்றார்.

உயரிய சமூக கூட்டுச் செயல் மனிதனை உருவாக்கிய இடத்தில் இருந்து தனி மனித செயலாக்கிய போது மனிதனுக்கு எதிரான தனியுடமையானது. தனியுடமை என்பது மனிதனுக்கு மனிதன் எதிரான சாரத்தைக் கொண்டது.

மனித உழைப்பு, உழைப்புக்கு இடையில் உள்ள சமூகத் தன்மையை அடிப்படையாகக் கொண்ட மனித சாரத்தை மறுக்கின்ற இன்றைய தனியுடமை சமூக அமைப்பு, மனிதனின் வாழ்வதற்கான உரிமைகளையே இல்லாதாக்கி மறுக்கின்றது. மனிதன் உழைத்து வாழ்வதற்கு ஏற்ற இயற்கையை மறுத்து, அதை தனியுடமையாக்கி இருக்கின்றது. இயற்கை தனியுடமையாவதால் மனிதன் மட்டுமல்ல, இயற்கையின் பிற உயிர்கள் கூட வாழமுடியாது அழிகின்றது. இயற்கையை தனியுடமையாக்குதல் மூலம், உழைப்பில் இருந்து அன்னியமாகின்றான். மனிதனும் பிற உயிர் இனங்களும், இயற்கை இன்மையால் உயிர் வாழ முடியாது என்ற எதார்த்தம் உருவாகின்றது. மனிதன் உழைத்து வாழவும், உயிரினங்கள் பூமியில் வாழவேண்டுமென்றால், இயற்கை பொதுவுடமையாவது மட்டும் தான் வாழ்வதற்கான இடத்தை வழங்குகின்றது. இந்த உண்மையே மார்க்சியத்தின் சாரமாக, இதை அறிவுபூர்வமாக விளக்கி மனித செயல் மூலம் மாற்றக் கோருகின்றது.

இயற்கை என்னும் பொதுவுடமை மீதான உழைப்பைச் சுரண்டியதன் மூலம், இயற்கை தனியுடமையாக்கப்பட்டது. இந்த உண்மையை காணமுடியாத தனியுடமை பற்றிய பிரமை மற்றும் அச்சத்தை மார்க்சியம் போட்டு உடைத்தது. கடவுள் சொத்துடமையைக் கொடுத்தான் என்ற பொய்யையும், உழைத்துக் கிடைத்ததே சொத்து என்ற புரட்டையும் மார்க்சியம் தகர்த்து இருக்கின்றது. உழைப்பை சுரண்டியும் களவாடியும் சேர்த்ததே சொத்து தான், இன்றைய பாரிய சொத்துடமை என்பதை மார்க்சிய அறிவு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

மனிதனை உருவாக்கியது தனியுடமையல்ல, உழைப்புத்தான் என்ற உண்மையை பிரகடனம் செய்தது. மனிதனுக்குரிய சமூக உணர்வாக்கத்தை உழைப்பு தான் வழங்குகின்றது என்ற எதார்த்தத்தை எடுத்துக் காட்டியது. மனிதாபிமானம், இரக்கம், அன்பு என எதுவாக இருந்தாலும், தனியுடமை அமைப்பின் பொது வெளிப்பாடே ஒழிய, உழைப்புச் சார்ந்த சமூக உருவாக்கத்தின் வெளிபாடல்ல என்பதை உழைப்பு பற்றிய அடிப்படை உண்மை எடுத்துக் காட்டுகின்றது.

மனிதன் உழைப்பு சார்ந்த சமூக உணர்வாக்கத்தை மாற்றி வந்த தீர்மானகரமான அனைத்து மாற்றங்களிலும், உழைப்பில் இருந்து அன்னியமாதலே அடிப்படையாக இருக்கின்றது. இயற்கை தனியுடமையாதல் மூலம் உழைப்பில் இருந்து அன்னியமாதல் மனிதனின் வாழ்வாகி வந்திருக்கின்றது. சமூகத்துக்கான பொது உழைப்பில் இருந்து அன்னியமாதல், சமூக உணர்வாக்கம் கொண்ட மனிதத் தன்மையை அகற்றி வந்துள்ளது. உழைப்பே மனிதனுக்குரிய சமூக தன்மையின் மிகத் தீர்மானகரமான வரலாற்றில், உழைப்பை இழப்பதும் உழைப்பை அபகரிப்பதும் என இருவேறு செயற்பாடுகள் நடக்கின்றது. இதனால் மனிதத் தன்மையில் இருந்து, மனிதன் அன்னியமாகின்றான். ஆக உழைப்பு மீது இரு நேர் எதிரான செயல்முறை, உழைப்பில் இருந்து உருவான மனிதசாரத்தையே இன்று இல்லாதாக்கியுள்ளது. இதுவே தனியுடமை சமூகத்தின் சாரமாகின்றது. இப்படி மனித உழைப்பை உழைப்பவனிடம் பிடுங்கி, அன்னியமாக்கிய அமைப்பு முறைதான், இந்த தனியுடமைச் சமூக முறைமை.

அடிப்படையாக இருந்த இடத்திலிருந்து, பொது உழைப்பும், தனிமனித உழைப்பும் மனிதனுக்கு அன்னியமாகி இருக்கின்றது. உழைப்பு என்னும் மனிதனுக்கே உரிய உயரிய உயிரியலின் செயற்பாட்டுத் தன்மையில் இருந்து விலகி, மற்றவன் உழைப்பை நுகர்வது என்னும் செயற்பாடு மனிதத் தன்மையின் உயரிய சமூகத் தன்மையை அழித்தது. உழையாது மற்றவன் உழைப்பை நுகர்ந்து வாழும் மிருகத் தன்மையும், அதை அடையும் வழிமுறைகளும் மனிதனுக்கு எதிரான பொது செயற்பாடாகியது. இதுவே சட்டம், நீதி, பண்பாடு.., என அனைத்துமானது. இதன் விரிவான பொதுமைப்படுத்திய செயற்பாடுகள் தான், வர்க்க முரண்பாடுகளினதும், சமூக முரண்பாடுகளினதும் அடிப்படையாக இருக்கின்றது. மனித உழைப்பு உழைப்பவனுக்கு சொந்தமில்லை என்ற அடிப்படையில் கட்டமைக்கப்பட்டதே, இந்த தனியுடமைச் சமூகக் கட்டமைப்பு. இதற்கு மாறாக உழைப்பு உழைப்பவனுக்கே சொந்தமானது என்ற அடிப்படையில் இருந்து, மார்க்சியம் பிறக்கின்றது. உழைப்பு யாருக்கு சொந்தம் என்பதே, அடிப்படையான கேள்வியாகின்றது.

இன்று உழைப்பு உழைப்பவனுக்கு சொந்தமாக இருப்பதில்லை. உழைப்பை உழைப்பவன் இழப்பதால், இரு வேறுபட்ட சமூக அன்னியமாதல் உருவாகின்றது. உழைப்பு மனிதனை உருவாக்கிய மனிதனின்

மனிதனை உருவாக்கிய உழைப்பில் தொடர்ந்து ஈடுபடுபவன் கூட, உழைப்பை இழக்கின்றான். இதனால் மனிதனுக்குரிய சமூக சாரத்தை இழப்பதன் மூலம், அவனும் அன்னியமாக்கப்படுகின்றான். உழைப்பில் இருந்து அன்னியமான சூழலில், மனித சாரம் திரிக்கப்பட்டு விடுகின்றது. உழைப்பவனின் உழைப்பை பிடுங்கும் இந்த அமைப்புக்கு ஏற்றனவே, மனித அறங்களாக்கப்படுகின்றது. இன்றைய மனித அறங்கள் அனைத்தும், இந்த உழைப்பை பிடுங்கி வாழும் சமூக அமைப்புக்கு உட்பட்டவை. உழைப்பவனுக்கே உழைப்பு சொந்தமான அமைப்பில், இன்றைய மனித அறங்கள் தானாகவே அர்த்தமற்றுப் போய்விடும்.

இன்று உழைப்பில் ஈடுபடுபவன் தன் உழைப்பை நுகர முடியாத வண்ணமும், உழைப்பில் ஈடுபடாதவன் உழைப்பை நுகரும் வண்ணமும், இந்தத் தனியுடமைச் சமூக அமைப்பு உள்ளது. உழைப்பு உழைப்பின் தேவையில் இருந்து அன்னியமாகி இருக்கின்றது. இதன் பொது வெளிப்பாடே தனியுடமையின் சாரமாகி இருக்கின்றது. இதைப் பேணுகின்ற வடிவம் தான் ஜனநாயகம், சுதந்திரம் என்று அனைத்தும். இந்தச் சமூக அமைப்பில் உழைப்பை சுரண்டி நுகரும் முறையையே,

15ம் பக்கம்






# மனித உரிமை தினத்திலே கடத்தப்பட்ட செயல்வீரர்கள்

**2011 டிசம்பர் 9ம் திகதி மனித உரிமை தினத்தை யாழ்ப்பாணத்தில் நினைவு கூருவதற்கான ஏற்பாடுகளை செய்வதில் ஈடுபட்டிருந்த லலித் மற்றும் குகன் ஆகிய இருவரும் கடத்தப்பட்டார்கள். அவர்கள் கடத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அவர்களை விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் கூட்டமொன்று கொழும்பில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் உரையாற்றிய முன்னிலை சோஷலிஸக் கட்சியின் தோழர் சமீர கொஸ்வத்தையின் உரையின் சாராம்சம்.**

2011ம் ஆண்டு டிசம்பர் 09ம் திகதி யாழ்ப்பாணத்தில் இரண்டு இளைஞர்கள் தங்களது அரசியல் கடமைக்காக வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார்கள். அப்படி புறப்பட்டுச் சென்றவர்கள் இன்றுவரை திரும்பவில்லை. முதலாளித்துவ அரசாங்கத்தின் ஏவலாளர்கள் அவர்களை கடத்திச் சென்றுவிட்டார்கள். லலித் குகன் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட விடயத்தை பார்க்கும்போது கடைசியாக கடத்தப்பட்டவர்களும் இவர்களாக இருக்கப்போவதில்லை. காணாமலாக்கப்பட்ட முதலாவது நபர்களும் இவர்களல்ல. நான் இப்படிக் கூறுவதனால் லலித் மற்றும் குகன் தோழர்கள் மேற்கொண்டஅரசியல் செயற்பாடுகளையும் அவர்கள் செய்த தியாகத்தையும் குறைத்து மதிப்பிடுவதாக ஆகாது.

இந்த முதலாளித்துவ முறைக்குள், இவை அரிதான சம்பவங்களல்ல. லலித் - குகன் கடத்தப்பட்டது சம்பந்தமாகவும்,மனிதர்கள் கடத்தப்படுவது மற்றும் கொலை செய்யப்படுவது சம்பந்தமாகவும், அவர்களை விடுதலை செய்யுமாறு கோரியும் இன்று பகல், கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்திவிட்டு இந்த இடத்திற்கு வந்துள்ளோம். ஆர்ப்பாட்டங்களை செய்வதனாலும், இப்படியான கூட்டங்களை நடத்தி எதிர்ப்பைக் காட்டுவதனாலும் இப்படியான சம்பவங்கள் நிறுத்தப்படப்போவதில்லை. இந்த முதலாளித்துவ முறை மாற்றுக் கருத்துள்ளவர்களை சகிக்காது. கொழும்பில் மாத்திரமல்ல இலங்கை பூராவுமுள்ள மக்களை அழைத்து மண்டபங்களை நிறைத்து வாய் கிழியக் கத்தினாலும், கோஷ ங்களை எழுப்பினாலும், ஆர்ப்பாட்டங்களை நடத்தினாலும் முதலாளித்துவத்தின் காதுகளுக்கு அது எட்டப்போவதில்லை. அந்த நம்பிக்கையோடு நாங்கள் இங்குவந்து கூடவுமில்லை. இந்த முதலாளித்துவம் இவற்றையெல்லாம் நிறுத்திவிடும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இல்லை.

இந்த முதலாளித்துவ சிஸ்டத்திற்குள் இலங்கையைப் போன்ற பிற்போக்கு நாடொன்றில் மனிதர்கள் ஏன் கடத்தப்படுகிறார்கள்? ஏன் கொலை செய்யப்படுகிறார்கள்? மாற்றுக் கருத்துள்ளவர்களை ஏன் கொலை செய்கிறது? இந்த சிஸ்டத்திற்கு எதிராக, அடக்குமுறைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்பவர்களை கண்ணீர்ப்புகை குண்டுகளையும், குண்டாந்தடிகளையும், குண்டர்களையும் ஏன் பயன்படுத்துகிறது? அதுதான் இந்த முதலாளித்துவமுறையின் இயல்பு. தன்னை காப்பாற்றிக் கொள்வதற்கு, தனது இருப்பை உறுதி செய்து கொள்வதற்கு மக்களை அடக்கி ஆளப்பார்க்கிறது.

2011ம் ஆண்டு லலித் - குகன் கடத்தப்பட்டார்கள். காணாமலாக்கப்பட்டார்கள். இந்த கடத்தலுக்கு மாத்திரம் நாம் அவற்றை மட்டுப்படுத்த முடியாது. அத்தோடு சர்வாதிகாரத்தின் செயற்பாடுகள் நின்றுவிட்டனவா, இல்லை. குடிப்பதற்கு சுத்தமான தண்ணீர்கேட்டு ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் மீது இராணுவத்தை ஏவிஉயிர்ப்பலி எடுத்ததுஎதற்காக? தமது உரிமைக்காகப் போராடும் சானக போன்ற தொழிலாளிகளையும் மீனவர்களையும் ஏன் சுட்டுத் தள்ளுகிறது.? வடக்கு கிழக்கில் துன்பப்படும் மக்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். மீள் குடியேற்றம் என்ற பெயரில் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

வடக்கிலே துன்பப்படும் மக்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். வடக்கு கிழக்கில் இடம் பெயர்ந்த மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன். மீள் குடியேற்றம் என்ற போர்வையில் வடக்கில் நடக்கும் அநியாயங்கள், சிறைபடுத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் குடும்பங்கள் படும் வேதனைகள், அதைத் தவிர கடத்தப்பட்டவர்கள் உயிரோடு இருக்கிறார்களா இல்லையா என்பது தெரியாமல் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் என ஏராளம். இந்த இடத்தில் தான் இந்த உரையாடலின் ஆழம் இருக்கிறது என நான் நினைக்கிறேன். அவர்களைப் பற்றிய நினைவுகளை மட்டுமே கூறாத, அதற்கும் அப்பால் சென்ற அரசியலைப் பற்றி நாங்கள் பேச வேண்டியுள்ளது. ஏன் அவர்களை அடக்குமுறை செய்கிறார்கள்? அதை நாங்கள் தேடிப்பார்க்கவேண்டியுள்ளது. ராஜபக்ஷ இருந்தாலும் வேறு யாராக இருந்தாலும் இதைத்தான் செய்வார்கள். ராஜபக்ஷ ஆகட்டும், ராஜபக்ஷ சர்வாதிகாரத்தைச் சேர்ந்த யாராக இருந்தாலும் இதற்குள் செய்யும் அனைத்தையும் நியாயப்படுத்த முடியுமா? பிரச்சினை எங்கிருந்து ஆரம்பிக்கிறது? ஏன் லலித் குகனை கடத்தினார்கள்? ஏன் அடக்குமுறை செய்கிறார்கள்? ஏன் கொலை செய்கிறார்கள்? இது ஜனநாயகம் சம்பந்தமான பிரச்சினை. இந்நாட்டில் ஜனநாயகம் இல்லை. அதனை பெற்றுக் கொடுக்க வேண்டும். இந்த முதலாளித்துவத்தினால் மக்களுக்கு வாழ்க்கையைப் பெற்றுக் கொடுக்கமுடியுமா? வடக்கு கிழக்கு மத்திய மலைநாட்டு மனிதர்களுக்கு வாழ்க்கையைப் பெற்றுக் கொடுக்க முடியுமா? இவர்கள் எல்லோரும் கேட்பது வாழ்க்கையை. உரிமையை கேட்கும் மக்களுக்கு வேட்டுக்கள் கொடுக்கப்படுகின்றன. அப்படியாக போராடும் மனிதர்களை, பல்வேறு உரிமைகளைக் கேட்டு போராடும் மக்களை அணிதிரளச் செய்யும் செயற்பாட்டாளர்களை அமைதியாக்குவதற்கு வேட்டுக்களை பயன்படுத்தவேண்டும். அப்படியாகக் கொல்லப்படுபவர்கள் மத்தியிலிருந்து மீண்டும் குரல் எழும்பும்போது, அதற்கு பயப்படுகிறார்கள். ஆகவே முதலாளித்துவம் மனிதர்களை கொல்லவும் பயப்படுகிறது. ஏன்? மக்களின் உரிமைகளுக்காக போராடி அவ்வாறு கொல்லப்படும் மனிதர்கள் அந்த மக்கள் மத்தியில் மீண்டும் போராட்ட வடிவில் உயிர்பெறுகிறார்கள்.

எமது மண் சிறப்புமிக்கது. வெட்டப்பட்டாலும் மீண்டும் மீண்டும் துளிர்க்கக் கூடியது. தனக்கு சவாலாக இருக்கும் மனிதர்களை கொல்ல முதலாளித்துவம் பயப்படுகிறது. இந்த அடக்கு முறைகளுக்கு எதிராக,அநீதிக்கு எதிராக, ஒடுக்கப்பட்டமக்கள் அணிதிரளவேண்டும் என்ற செய்தியை எடுத்துக் கொண்டுதான் லலித் வடக்கிற்குச் சென்றார். ஆகவே இந்த முதலாளித்துவம் நினைப்பதைப் போன்று, அல்லது அதனை ஏற்றவர்கள் நினைப்பது போன்று அது தேவையற்ற விடயமாக இருக்கலாம். இநதச் செய்தியை எடுத்துக் கொண்டு தான் செய்த தொழிலையும் விட்டுவிட்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் வாழும் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்று சேர்ந்தால் மட்டுமே இநத அடக்குமுறைகளிலிருந்து விடுதலையடைய முடியும். இந்தச் செய்தியை எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்ற இளைஞர், ஒருகாலத்தில் ஆயுதக் குழுக்களோடு இணைந்து செயற்பட்ட இன்னொரு இளைஞரை சந்திக்கிறார். அவர் செயற்பட்ட ஆயுதக்குழுவில் நிலவிய இன குலபேதங்களை எதிர்த்து அந்த ஆயுதக்குழுவிலிருந்து வெளியேறுகிறார். வெளியேறிய அவர் அரசாங்கத்தின் ஆயுதப்படைகளிடமிருந்தும், தான் இருந்தஆயுதப்படையிடமிருந்தும் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல்களிலிருந்து தப்பித்து பிழைத்த மனிதன். லலித்துடன் சேர்ந்து இந்தச் செய்தியை வடக்கிலும், கிழக்கிலும். எட்டுத்திக்கிலும் எடுத்துச் செல்வதற்காக லலித்தோடு குகனும் சேர்ந்துகொண்டார். அவ்வாறு வெளியேறிய மக்களுக்கு அரசாங்கம் பயப்படுகிறது. அடக்குமுறை இராணுவம் இருந்தாலும்,

15ம் பக்கம்

# சமவுரிமைக்கான அவசியம் என்ன?

சமவுரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் அதற்காக இன்று போராடும் நிலையில், அதைக் கொடுக்கக் கோரி போராடும் மக்களும், ஒன்றிணையும் ஒடுக்கப்பட்ட மக்கள் இயக்கம் தான் சமவுரிமைக்கான இயக்கம்.

சமவுரிமையை ஒடுக்கும் இனம் "தரமாட்டாது" என்ற இனரீதியான பிரச்சாரத்தையும், ஒடுக்கப்பட்ட இனத்துக்கு சமவுரிமையை "கொடுக்க முடியாது" என்ற இனரீதியான செயற்பாட்டை, சமவுரிமை இயக்கம் நடைமுறை ரீதியாக மறுதளிக்கின்றது. மாறாக சமவுரிமையை அனைவருக்கும் கொடு என்ற போராட்டத்துடன், சமவுரிமை மறுக்கப்பட்ட மக்களை ஒன்றிணைந்து போராடுமாறு அறைகூவுகின்றது.

இன்று சமவுரிமைகளற்ற நிலை காணப்படுகின்றது. இனத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும் மக்களை ஒடுக்குவதன் மூலம், மக்கள் சமனற்றவராக ஆக்கப்படுகின்றனர். மக்களை உயோர்ந்தோராகவும், தாழ்ந்தவராகவும் பிரித்து, சமவுரிமைகள் அற்றவராக மக்களை பிளந்து ஒடுக்குவதே, அரசின் கொள்கையாகி இருக்கின்றது. அனைவரும் சமன் என்ற சட்ட சிவில் வடிவத்தில் இருந்து வேறுபட்ட வடிவில், மக்களை பிரித்தாளுகின்றது. இன மத மூலம், நாட்டின் ஒரு பகுதி மக்களை சமவுரிமைகளற்றவராக மாற்றி, அனைவருக்குமான சட்டத்தின் ஆட்சியை மறுத்து அரசு செயற்படுகின்றது.

இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால் இலங்கை மக்களின் ஒரு பகுதியினர் தொடர்ந்து ஒடுக்கப்படுகின்றனர். இதற்கு எதிராக தனித்து போராட வைப்பதன் மூலம், தனிமைப்படுத்தி அடிமைகளாக்குகின்றனர். அரசின் கொள்கை இதுவாக இருக்க, ஒடுக்கப்பட்ட இனம், மதம் சார்ந்து போராடுபவர்களின் கொள்கையும் தனித்துப் போராடுவதை முன்வைக்கின்றது. ஒரு நாணயத்தின் எதிரான இரு பக்கங்கள் ஒன்றாக இருப்பது போல், இனம், மதம் சார்ந்து ஒன்றாக ஒரு புள்ளியில் இவை இயங்குகின்றது. கடந்த வரலாறு முழுக்க, இன மத ஒடுக்குமுறையில் இருந்து விடுபட முடியாத புதிர் இதுவாகவே இருக்கின்றது.

இந்த ஒடுக்குமுறையில் இருந்து விடுபடுவதற்கான வழி என்ன?

ஒடுக்கும் இனம், மதம் சார்ந்த மக்கள் இதற்கு எதிராகப் போராட்டம் நடத்தினால் மட்டுமே, இதற்கு தீர்வுகாண முடியும். இதற்கு ஒடுக்கப்பட்ட இன மத மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதும், ஒடுக்கும் இன மத மக்கள் எப்படி எதை செய்ய வேண்டும் என்பதிலும் இருந்து தான், இதற்கு நாம் தீர்வுகாண முடியும். ஒன்றுபட்ட அரசியல் வழிமுறைக்கு வந்தடைய வேண்டும். ஒடுக்கப்பட்ட இன மத மக்களும், ஒடுக்கும் இன மத மக்களும் ஒன்றிணையும் புள்ளி என்பது, அனைவருக்குமான சமவுரிமை தான். சமவுரிமையற்ற எந்த புள்ளியிலும், அனைவரும் ஒன்றிணைய முடியாது.

சமவுரிமை தான் ஒடுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றிணைக்கும் மையப் புள்ளி. ஒடுக்கும் இன மதம் சார்ந்த மக்கள் மத்தியில் இருந்து, சமவுரிமையை கொடுக்கக் கோரியும், ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடுவற்கான அரசியல் செயற்பாடே சமவுரிமை இயக்கம்.

இந்த வகையில் ஒடுக்கப்பட்ட இனங்களுக்கு சமவுரிமையை வழங்கக் கோரி ஒடுக்கும் இனங்கள் போராடுவதும், இந்தப் போராட்டத்துடன் ஒடுக்கப்பட்ட இனங்கள் ஒன்றுபட்டு, சமவுரிமையை பெற்றுக் கொள்வதற்கான போராட்டமே, சமவுரிமையின் அரசியல் உள்ளடக்கம்.

எந்த (ஒடுக்கும் - ஒடுக்கப்பட்ட) இனத்துக்கும் தனிச் சலுகைகள் கிடையாது. இதுவே அதன் மையமான அரசியல் கூறு. ஒரு இனம் அனுபவிக்கக் கூடிய உரிமைகள் அனைத்தும், எல்லா இனத்துக்கும் உண்டு. இதுதான் சமவுரிமையின் கொள்கை விளக்கம். தேசங்கள் கொண்டு இருக்கக் கூடிய தன்னாட்சியும் கூட, சமவுரிமையின் அடிப்படையிலானதே. ஒரு இனத்திற்கான, ஒரு தேசத்துக்கான, ஒரு மதத்திற்கான விசேட சலுகையின் பாலானதல்ல எந்த செயற்பாடுகளும் தீர்வுகளும். அதை எதிர்த்துத் தான் சமவுரிமைக்கான போராட்டம்.

சமவுரிமை கோருவதன் ஊடாக, சமமற்ற ஒடுக்குமுறைகளையும், விசேட சலுகைகளையும் எதிர்த்துப் போராடுவதே இதன் செயற்பாட்டுப் புள்ளி. இந்த வகையில் வடக்கு கிழக்கு மக்கள் சந்திக்கின்ற சிறப்பான இன மத ஒடுக்குமுறையாகட்டும், நாட்டில் சிறுபான்மை மதங்களின் வழிபாட்டு உரிமைக்கு எதிரான செயற்பாடுகளாகட்டும், இதை எதிர்த்துப் போராடுவதற்கு ஒடுக்கும் இனம் மதம் சார்ந்த மக்களை அணிதிரட்டுவதற்கான அமைப்புத் தான் சமவுரிமை இயக்கம். சமவுரிமை மறுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடும் வெகுஜன இயக்கம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகம் என, இனரீதியாக மக்களை இன்று பிளந்துவிடுகின்றனர். பௌத்தம், சைவம், முஸ்லிம், கிறிஸ்தவம் என்று மக்களை மதரீதியாக பிளந்து விடுகின்றனர். இன மத ரீதியாக சமமற்றவராக காட்டுகின்ற அரசியல் செயற்பாடுகள் தான் அரசின் கொள்கை. இதை அமுல்படுத்துவதற்காகவே, அரச ஒடுக்குமுறைகளை ஏவிவிடுகின்றனர். கடந்தகாலம் முதல் தொடரும் இன முரண்பாடுகளும், நடந்த யுத்தங்களும் இதன்பாலானது.

இனம் மற்றும் மதத்தை முன்னிறுத்தி விசேட சலுகைகள் கொண்ட மக்கள் கூட்டமாக மக்களைப் பிளந்து ஒடுக்குவதன் மூலம், மக்களைப் பிரித்தாளுகின்றது அரசு. இதற்கு எதிராக ஒடுக்கப்பட்ட சமூகங்களின் போராட்டங்கள், தமக்கான சமவுரிமை மறுக்கப்படுவதை எதிர்த்து ஜனநாயகத்தைக் கோருவதாக இருந்தது. இந்த ஜனநாயகக் கோரிக்கைக்கு பதில், விசேட சலுகைக்கான கோரிக்கைகள் என்பது, ஒடுக்குபவன் பிரித்தாளக் கையாளும் சமமற்ற விசேட சலுகைக்கு நிகரானது.

விசேட சலுகைகளை கோராத சமவுரிமைக்கான போராட்டங்கள், அதன் ஜனநாயக எல்லைக்கு உட்பட்ட ஒன்றாகவும், அனைவரும் ஆதரிக்க வேண்டிய ஒன்றாகவும் இருக்கின்றது. இந்த வகையில் சமவுரிமைக்கான இந்தப் போராட்டத்தை, ஆதரித்துப் போராடும் இயக்கம் தான் சமவுரிமைக்கான இயக்கம்.

சமமற்ற செயற்பாடுகள் மூலம் சலுகை பெற்ற சமூகங்களாக யாரை அரசு முன்னிறுத்துகின்றதோ, அங்கிருந்து சமவுரிக்கான போராட்டம் தொடங்கப்படுகின்றது. இதை ஆதரிப்பதன் மூலம், இதைக் கொடுக்கக் கோருவதன் மூலமும், அனைவருக்குமான பொதுவான ஜனநாயகத்தை வந்தடைய முடியும்.

அரசு சமவுரிமைகளை மறுப்பதாக இருக்க, மக்கள் சமவுரிமையைக் கோருவதாகவும் இருக்கின்றது. இதுதான் இன மத ஒடுக்குமுறையினதும், இதற்கு எதிரான போராட்டத்தினதும் உள்ளடக்கம். இதில் இருந்தே சமவுரிமைக்கான







ஜனநாயகக் கொள்கைக்கு பதில், சமமற்றவராக அவர்களை மாற்றிவிடுகின்றனர்.

இப்படி இன மத சமவுரிமையை மறுப்பதன் மூலமே, மக்களை பிரித்து ஒடுக்குகின்றது. இந்த செயல் மூலம் ஒடுக்கும் இன மத மக்களை, ஒடுக்கப்பட்ட இன மத மக்களுக்கு எதிராக அணி திரட்டுகின்றது. ஒடுக்கும் இன மதம் சார்ந்த மக்கள் மத்தியில் இருந்து, இந்த ஒடுக்குமுறைக்கு எதிரான குரல்கள் எழாத வண்ணம் தடுத்து நிறுத்துகின்றது. இதை தொடர்ந்து அனுமதிக்கப் போகின்றோமா? இதை மாற்றி அமைக்க என்ன செய்யப் போகின்றோம்? சமவுரிமைக்காகப் போராடப் போகின்றோமா? அல்லது இல்லையா? என்ற கேள்வி எழுகின்றது.

சமவுரிமை மறுப்பின் அரசியல் சாரம் என்ன? ஒடுக்கப்பட்ட இன, மத மக்கள் சமவுரிமையை இழந்தவராக, ஒடுக்கும் இன மத மக்கள் விசேட உரிமையுள்ளவராக முன்னிறுத்துகின்றது. இங்கு சமவுரிமையைக் கோரும் போது, கொடுக்கக் கோரும் போது, விசேட உரிமையை மறுக்கும் போராட்டமும் ஒருங்கிணைந்து தான் சமவுரிமைக்கான போராட்டம்.

இங்கு சமவுரிமையை மறுத்த அரசின் இன மத செயற்பாடுகளே, இனம் மதம் சார்ந்த ஒடுக்குமுறை வடிவங்களாக தொடர்ந்து காணப்படுகின்றது. இங்கு ஒடுக்குவதன் நோக்கம் வர்க்க நலன் சார்ந்ததாக இருந்தாலும், இன மத அடக்குமுறைகள் மூலமே அவை திசை திருப்பப்படுகின்றது.

இனவொடுக்குமுறை மூலம் கையாளும் சமச்சீரற்ற இன்றைய ஆட்சி முறை, நாட்டின் பொது சிவில் சட்ட வடிவங்களுக்கே முரணானது. வடக்குக் கிழக்கில் கையாளும் ஆட்சி வடிவங்கள், மற்றைய பிரதேசங்களில் இருந்து வேறுபட்டது. சமச்சீரற்ற இச் செயற்பாடுகள் மூலம், மக்களை பிரித்தாளுகின்றனர்.

உதாரணமாக வடக்குக் கிழக்கில் இராணுவத்தைக் குவித்து, இராணுவ ஆட்சியைத் திணித்து இருக்கின்றது. திட்டமிட்ட இனக் குடியேற்றங்களையும், மத ஆக்கிரமிப்புக்களையும் நடத்துகின்றது. நாடு தழுவிய அளவில் அரசு முன்னெடுக்கும் நவதாராள பொருளாதாரக் கட்டமைப்பை, வடக்கு கிழக்கில் விசேடமான இராணுவ இன அடக்குமுறை வடிவங்களில் முன்னெடுக்கின்றது.

வடக்கு கிழக்குக்கு வெளியில் சிறுபான்மை மதங்களின் வழிபாட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு, வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றது. நாட்டில் சமச்சீரற்ற சட்டத்தின் ஆட்சி முறை, இனம் மதம் சார்ந்து முன்னெடுக்கப்படுகின்றது. பொதுவான மக்களின் ஜனநாயகக் கோரிக்கையை வழங்கக் கோரியும், மறுக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்கக் கோரி போராடுவதுமே சமவுரிமை இயக்கத்தின் இன்றைய மையச் செயற்பாடாகும்.

பல்தேசிய இனங்களும், பல மதங்களும் உள்ள நாட்டில், எந்த இனமும் மதமும் தனிச்சலுகை கொண்டு இருப்பதை எதிர்த்துப் போராடுவது அனைவரதும் பொதுவான ஜனநாயகக் கடமை. இது சமவுரிமையின் அடிப்படையுமாகும். மனிதனுக்கு இடையில் இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால் காணப்படும் சமமற்ற வாழ்க்கை முறையை மாற்றி அமைத்தல், சமவுரிமையின் முரணற்ற செயற்பாடாகும்.

சமவுரிமை அல்லாத எந்த அரசியல் வடிவத்திலும், ஒடுக்கும் இன மத மக்களை அணிதிரட்ட முடியாது. அது தனக்கான விசேட சலுகைகளை எதிர்த்தும், அனைவருக்குமான பொதுவான ஒன்றை முன்னிறுத்தியும் போராடும் இயக்கம் தான் சமவுரிமை இயக்கம். தனது சிறப்பு சலுகையை எதிர்க்கும் அதே நேரம், தனக்கு வெளியில் அதைக் கோருவதையும் எதிர்க்கும்.

சமவுரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் அதற்காக போராடும் நிலையில், அதைக் கொடுக்கக் கோரி ஒன்றிணையும் மக்கள் இயக்கந்தான் சமவுரிமை இயக்கம். சமவுரிமை அல்லாத எந்தச் செயற்பாட்டையும், கோரிக்கையையும் நிராகரித்து நிற்பதன் மூலம், அதற்காக ஒன்றிணைந்து போராடுவதன் மூலம், அனைவருக்குமான பொது ஜனநாயகத்தை கொண்டு வருவதற்கான வெகுஜன இயக்கமே சமவுரிமைக்கான இயக்கம்.

# 2014 வரவு–செ

# நவ தாராளமய முதலாளித்துவ

2014ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் ஜனாதிபதியால் கடந்த நவம்பர் 21ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக தற்போது பல்வேறு திறனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்திறனாய்வுகளை புள்ளிவிவர அடிப்படையில் விளங்கிக் கொள்வதற்கு முன்னர் வேறொரு கண்ணோட்டத்தில் அதனை அணுக வேண்டியுள்ளது. 1978ல் நவ தாராளமய முதலாளித்துவத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர், அரசை மையமாகக் கொண்ட வடிவமொன்று நாட்டில் நிலவியது. அக்காலத்தில் வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது நாட்டு மக்களின் கவனம் அதன் பக்கமே திரும்பும். பெரும்பாலான மக்கள் அது குறித்தே விவாதித்துக் கொண்டிருப்பார்கள். அடுத்து வரும் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தில் எப்படியான மாற்றங்கள் ஏற்படும் என்பதைப் பற்றியே அவர்களுடைய கவனம் திரும்பியிருந்தது. என்றாலும் நவ தாராளமய பொருளாதாரத்தின் கீழ் நாட்டின் பொருளாதாரம் முற்றாக உலக பொருளாதாரத்தோடும், உலக மூலதன திட்டங்களோடும் முடிச்சுப் போடப்பட்டிருப்பதால் இலங்கை என்ற தேசிய அரசின் எல்லைக்குள் அதனை ஒழுங்குபடுத்தும் ஆற்றல் முதலாளித்துவ அரசாங்கத்திடம் இல்லை. ஆகவே, வரவு செலவுத் திட்டம் என்பது அரசாங்கத்தின் செலவீனங்களைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பதை எடுத்துக் கூறும் சம்பிரதாய வரவு - செலவுத் திட்டமாக இருக்கின்றதேயல்லாமல், குறிப்பிட்டுக் கூறும்படியான பொருளாதார உத்திகளை முன்வைக்கும் திட்டமாக இல்லை. இதன் மூலம் ஆளும் வர்க்கத்திற்கு பொருளாதார உபாயங்கள் கிடையாது என்பது அர்த்தமல்ல. மூன்றரை தசாப்த காலமாக இந்நாட்டில் நவ தாராளமய முதலாளித்துவமே அமுலில் இருந்தது. 2014இகான வரவு செலவு திட்டத்தின் மூலமும் அது மேலும் ஓரடி முன்னேறியுள்ளது. என்றாலும், இந்த வரவு செலவுத் திட்டத்தை பகுப்பாய்வு செய்யும்போது ஆளும் சர்வாதிகாரத்தின் பொருளாதாரப் பாதையும், அரசியல் பாதையும் சம்பந்தமான சைகைகளை காண முடிகின்றது. இது அதற்கான ஒரு அணுகுமுறையாகும்.

அரசியல் அணுகுமுறை

இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் தேர்தலை இலக்காகக் கொண்டதாகவே தெரிகிறது. சமூகத்தின் மூலை முடுக்கெல்லாம் நுழைந்து எல்லோருக்கும் நத்தார் பரிசு கொடுப்பதற்காகவே ஆளும் சர்வாதிகாரம் முயன்றுள்ளது. அது நத்தார் தாத்தாவோடு பலவழிகளிலும் ஒத்துப் போகின்றது. நத்தார் தாத்தா பிள்ளைகளுக்கு எதிர்பார்ப்பை கொடுத்தாலும் பிள்ளைகளின் எந்தப் பிரச்சினையையும் தீர்ப்பதில்லை. மனதை மகிழ்விப்பதற்காக இனிப்புப் பண்டமொன்றை அல்லது சிறு விளையாட்டுப் பொருளொன்று கிடைக்கும். வரவு செலவுத் திட்டமும் அதைப் போன்றது தான். ராஜபக்ஷ சர்வாதிகாரம் மூலை முடுக்கெல்லாம் நுழைந்து அவர்களது பிரச்சினைகளை மேலோட்டமாக தொட்டுப் பார்த்துள்ளது. எந்தவொரு பிரச்சினையை தீர்ப்பதற்காகவும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை. மனதை மகிழ்விப்பதற்காக சந்தோசம் வழங்கியிருக்கிறது அவ்வளவுதான்.

சில உதாரணங்களைப் பார்ப்போம். அரச ஊழியர்களுக்காக 1200 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதாவது நாளொன்றுக்கு 40 ரூபா. இன்றைய நிலையில் ஒரு தேங்காயின் விலை 50 - 55 ரூபாவையும் தாண்டியுள்ளது. வர்த்தகச் சந்தையைப் பொறுத்த வரை 40 ரூபா என்பது ஆகக் குறைந்த பெறுமதியாகும். வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட துரித அதிகரிப்போடு இந்த சம்பள அதிகரிப்பு கேலிக்கூத்தாக இருக்கிறது. வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பதாகவே போக்குவரத்துக் கட்டணம் 8 வீதத்தால் அதிகரிக்கப்பட்டதுடன், வரவு செலவு திட்டத்தின் மீதான விவாதத்தின் பின்னர் வீட்டுப் பாவனைக்காக எடுக்கப்படும் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படவிருப்பதாகத் தெரிய வருகிறது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது சம்பள அதிகரிப்பு என்பது ஒன்றுக்கும் உதவாததாகவே இருக்கின்றது. ஓய்வூதியம் பெறுநர்களின் ஓய்வூதியம், 2006க்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்காக 500 ரூபாவும், புதிதாக ஓய்வூதியம் பெறுபவர்களுக்காக 350 ரூபாவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்காக 1200 ரூபா ஓய்வூதியம் வழங்கப்படவிருப்பதாக கூறப்பட்டது. அது ஓய்வூதியம் பெறுநர்களுக்கு வழங்கும் சொச்சத்தை விட மோசடியாகும். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இன்றைய

> “ அரசாங்கம் தொலைபேசி மீதான வரியை 25 வீதத்தால் அதிகரித்திருப்பதுடன், தொலைபேசி கட்டணங்கள் ஊடாக 4,425 மில்லியன் ரூபாயை வருமானமாக எதிர்பார்க்கிறது. ”

சர்வாதிகாரத்தினால் விவசாயிகளுக்கான ஓய்வூதியம் நிறுத்தப்பட்டதோடு, அப்போதைக்கு ஓய்வூதியத்திற்கான வயது பூர்த்தியடைந்த விவசாயிகள் 50,000க்கு ஓய்வூதியம் வழங்குவதற்காக மாத்திரம் 2120 மில்லியன் ரூபா தேவைப்பட்டது. ஆனால், இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் 1000 மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது, சம்பள நிலுவையை வழங்குதற்குக் கூட அது போதுமானதாக இல்லை. இதற்கிடையில் அரசாங்கம் சுய தொழில்களில் ஈடுபடவிருக்கும் பெண்களுக்காக 250,000 ரூபா வட்டிக் கடன் முறையொன்றை ஆலோசித்துள்ளது. தவிரவும் சிறு உணவகங்கள், சலூன், தையற்கடைகள் போன்றவற்றுக்காகவும், முச்சக்கர வண்டிகளுக்காகவும் உள்ளூராட்சி நிறுவனங்களால் அறவிடப்படும் வரிகளை நீக்கி அதனை 500 ரூபாவுக்கு மட்டுப்படுத்தியுள்ளது. அது மட்டுமல்லாது வன விலங்குகளுக்கு நீரருந்துவதற்காக வனாந்தரங்களின் நடுவில் குளங்களை தோண்டுவதற்கும் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கேற்ப ஒவ்வொரு பிரச்சினையையும் நுனிப்புல் மேய்ந்திருப்பதுடன், எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு வழங்கப்படவில்லை. மக்களுக்குள்ள பிரச்சினை என்னவென்பது அரசாங்கத்திற்குத் தெரியும். எந்த ஒரு பிரச்சினைக்காவது தீர்வு கிடையாது. அதற்குக் காரணமாக இருப்பது ராஜபக்ஷ அரசாங்கத்தின் கையாலாகாத்தனம் மாத்திரமல்ல, ஒட்டுமொத்த முதலாளித்துவத்தினதும் கையாலாகாத்தனமேயாகும். எவ்வாறாயினும் இம்முறை வரவு செலவு திட்டத்தின் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாகக் கூறி, சிறு சந்தோசங்களைக் கொடுத்து சமூகத்தை ஏமாற்ற முயற்சித்திருப்பது தெரிகிறது. இப்படியான வரவு - செலவு திட்டத்தின் மூலம் 2014ம் வருடம் தேர்தல் வருடம் என்பதாக சமிக்ஞை செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார அணுகுமுறை

பொருளாதார செயற்பாடுகள், நவ தாராளமய கொள்கைகளை முன்னெடுப்பதற்கான அடிப்படைகள் இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் உணர்த்தப்பட்டிருக்கின்றன. நாட்டின் எதிர்பார்த்த ஒட்டுமொத்த வருமானம் 1469.5 பில்லியன் ரூபாயாக இருப்பதோடு, செலவீனங்கள் 1985.6 பில்லியன் ரூபாயாகும். அதன்படி 2014ஆம் வருடத்திற்கான வரவு - செலவுப் பற்றாக்குறை 516.1 பில்லியன் ரூபாயாகும். அது மொத்த தேசிய உற்பத்தியில் 5.2 சத வீதமாகும். 2013ஆம் வருடத்தின் வரவு செலவு பற்றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியில் 5.8 சதமாக இருப்பதுடன், அது இம்முறை 5.2 சத வீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தனது உரையில் அதனை 2015இல் 4.5 வீதமாகவும், 2016இல் 3.8 வீதமாகவும் குறைப்பதற்கான இலக்கு இருப்பதாகக் குறிப்பிட்டார். வரவு செலவு பற்றாக்குறையை 5 வீத வரையறைக்குள் கொண்டு வருவதாக அரசாங்கம் உறுதியளித்திருப்பதுடன், கடன் கொடுப்பதில் அது முக்கிய நிபந்தனையாகவும் உள்ளது. வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் அல்லது செலவீனங்களை குறைப்பதன் மூலமாகவே வரவு செலவு திட்டத்தின் பற்றாக்குறையை கீழிறக்க முடியும். இல்லையாயின் இரண்டையுமே செய்ய வேண்டும். இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள விடயங்களைப் பார்க்கும்போது அடுத்த வருடமும் செல்வந்தர்களுக்கு உல்லாசபுரியாகவும், ஏழைகளுக்கு நரகக் குழியாகவும் இருக்கப்போகிறது.

2014ஆம் வருடத்திற்கான ஆலோசனைகளுக்கேற்ப பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகளின் மூலமாக 688.5 பில்லியன் ரூபாயை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய வருமானத்தில் 86.74வீத அதாவது 1284.6 பில்லியன் ரூபாயை வரி அறவீட்டின் மூலம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றில் 54 வீதம் பொதுமக்களின் நுகர்பொருட்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்படும் வரிகளின் ஊடாக பெறப்படவிருக்கிறது. ஆனால் செல்வந்தர்களுக்கு போதுமான அளவிற்கு வரி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த வரி வருமானத்தில் 22.2 வீதம், அதாவது 283.3 பில்லியன் ரூபா கூடிய வருமானம் பெறுபவர்களிடமிருந்து அறவிடப்படுகிறது. எஞ்சியவை இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்படும் வரியாக இருப்பதோடு, எஞ்சிய 23.78 வீதம் மக்கள் மீதே சுமத்தப்படுகிறது. இது விடயத்தில் வரவு செலவுத் திட்டத்திலுள்ள



# சலவுத் திட்டம்,

# வத்தின் இன்னொரு பாய்ச்சல்

ஆலோசனைகளின் பக்கம் பார்வையைச் செலுத்துவோம். சாதாரண பொது மக்கள் பாவிக்கும் பொருட்களுக்கு 2 ரூபாயிலிருந்து 28 ரூபா வரை வரி விதிக்கப்பட்டள்ளது. இவற்றில் வெங்காயம், சீனி, கருவாடு, பருப்பு, கடலை, பயறு, ஏனைய தானியங்கள், கொத்தமல்லி, சீரகம், பெருஞ்சீரகம், கடுகு, உளுந்து மா, யோகட், பட்டர், மாகரின். மரக்கறி எண்ணெய் போன்றவற்றின் விலைகள் குறிப்பிட்டளவு அதிகரிக்கக் கூடும். இந்த நிலைமையில் அரச ஊழியர்களுக்கு கிடைக்கும் 1200 ரூபாயும், ஓய்வூதியம் பெறுவோர்க்கு கிடைக்கும் 500 ரூபாயும் மாயமாகிவிடும். இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் ஒருவார்த்தை கூட பிரஸ்தாபிக்காத தனியார் துறை ஊழியர்களினதும், தோட்டத் தொழிலாளர்களினதும் வாழ்க்கை நிலை மேலும் மோசமடையக் கூடும். சிறப்பு வர்த்தக நிலையங்கள் மீது விதிக்கப்படும் 15 வீத மேலதிக வரி விதிக்கப்பட்டமையால் இந்த நிலை ஏற்படலாம். இந்த வர்த்தக நிலையங்கள் “சிறப்பாக” இருந்த போதிலும் அவற்றின் நுகர்வாளர்கள் பெரும்பாலும் தொழிலாளர்கள் தான். இதனால் வாழ்க்கைச் செலவு மேலும் அதிகரிக்கும்.

அரசாங்கம் தொலைபேசி மீதான வரியை 25 வீதத்தால் அதிகரித்திருப்பதுடன், தொலைபேசி கட்டணங்கள் ஊடாக 41,415 மில்லியன் ரூபாயை வருமானமாக எதிர்பார்க்கிறது.

இதற்கிடையில் செல்வந்தர்களுக்காக போதுமானளவு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்காக அநீதியான முறையில் வரிவிதிக்கும் இந்த வரவு செலவுத் திட்டம் உயர் தரத்திலான பேனாக்கள், கழுத்துப் பட்டிகள், போன்றவற்றுக்கான வரியை நீக்கியுள்ளது. கழுத்துப் பட்டிகள், பேனா போன்றவற்றுக்கு வரிவிலக்களிப்பதனால் சாதாரண பொதுமக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. அதேபோன்று சிறப்பு அதிவேக வாகனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த 30வீத வரி குறைக்கப்பட்டுள்ளது. நிதி மூலதன நகர்வை துரிதப்படுத்தும் நவ தாராளமய வேலைத் திட்டத்திற்கேற்ப பங்குச் சந்தையில் புதிதாகச் சேரும் நிறுவனங்களுக்காக 50 வீத வரி விடுப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு தேர்தலை இலக்கு வைத்து நத்தார் தாத்தாவைப் போன்ற பரிசுகள் கொடுத்தாலும் அடிமட்ட வர்க்க மக்களுக்கு இனிப்புப் பண்டத்தைக் கொடுத்து பாக்கெட்டிலுள்ள பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. முதலாளிகளுக்கு பல்வேறு வரி நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் பராமரிப்புக்கான மொத்தச் செலவும் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் வெளிநாட்டு செலாவணியை சம்பாதிக்கும் பிரதான வழியாக வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் உழைப்பாளிகள் மற்றும் ஆயத்த ஆடைகள், தேயிலை ஏற்றுமதி ஆகியவை முக்கிய இடத்தை வகிப்பதாக ஜனாதிபதி கூறுகிறார். 2014ஆம் ஆண்டில் வெளிநாடுகளுக்குச் செல்லும் உழைப்பாளிகளின் மூலம் 8 பில்லியன் டொலரும், ஏற்றுமதியின் மூலம் 10 பில்லியன் டொலரும் வருமானமாகப் பெறுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் குறிப்படப்பட்டுள்ளது. ஆனால் வெளிநாட்டிலுள்ள இலங்கை உழைப்பாளிகளின் பிரச்சினைகள் குறித்து எதுவுமே குறிப்பிடப்படவில்லை. விஷே டமாக மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாக இருக்கும் பெண்கள் அதிகளவு வெளிநாட்டுச் செலாவணியை அனுப்புபவர்களாக இருந்த போதிலும் அவர்களது நலன்புரிகளுக்கான எந்த ஆலோசனைகளும் இல்லை.

> “இதற்கேற்ப ஒவ்வொரு பிரச்சினையையும் நுனிப்புல் மேய்ந்திருப்பதுடன், எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு வழங்கப்படவில்லை. மக்களுக்குள்ள பிரச்சினை என்னவென்பது அரசாங்கத்திற்குத் தெரியும். எந்த ஒரு பிரச்சினைக்காவது தீர்வு கிடையாது.”

வெளிநாட்டில் வேலை செய்யும் பெண்கள் அடிமைகளாக, வதைகளுக்கும், பாலியல் துன்புறுத்தல்களுக்கும் ஆளாவதோடு சில சந்தர்ப்பங்களில் கொலையும் செய்யப்படுகிறார்கள். இது சம்பந்தமான எந்தப் பிரச்சினைக்கும் முதலாளித்துவ ஆட்சியாளர்களிடம் தீர்வு கிடையாது. அவர்கள் மூலம் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணி குறித்து மட்டுமே பேசப்படுகிறது.

வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுத்தரும் அடுத்த துறையாக ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியே இருக்கிறது. அவற்றில் வேலை செய்பவர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர். அவர்கள் பல்வேறு நிபந்தனைகளின் கீழ், தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைத் தொழிலில் ஈடு பட்டுள்ளனர். அவர்களது சம்பளம் அடிமட்டத்திலேயே இருக்கிறது. அதைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசாத ஜனாதிபதி ஆடைத் தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்களுக்கு நிவாரணங்களை வாரி வழங்கியிருக்கிறார். ஆயத்த ஆடைத் தொழிற்துறையில் புதிய ஆய்வுகளுக்கான செலவீனங்களை விட மூன்றுமடங்கு வரிச் சலுகைகளை வழங்குவது, வெளிநாடுகளில் அறிவுசார் சொத்துக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் தொழிற்சாலை உரிமையாளர்களுக்காக வரிவிடுப்பு சலுகையை வழங்குவதற்கான பல ஆலோசனைகள் இதில் அடங்குகின்றன.

தேயிலைத் தொழிற்றுறையை எடுத்துக் கொண்டாலும் நிலைமை இதுதான். ஆகக் கீழ்மட்ட வாழ்க்கையை வாழும், நாளாந்த சம்பளத்தை மட்டுமே பெறும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு ஒரேயொரு ஆலோசனை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதாவது தோட்டத் தொழிலாளர்களுக்காக நிரந்தர வீடுகளமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மாத்திரமேயாகும். ஆனால், வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வும் கிடையாது. இதற்கிடையில் சுற்றுலாப் பயணத்துறையை விருத்தி செய்வதற்காக பெருமுயற்சி எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 15 லட்சத்திலிருந்து 25 லட்சமாக 66.6 வீதத்தால் அதிகரிக்கவிருப்பதாக வரவு செலவுத் திட்ட உரையில் கூறப்பட்டது. அரசாங்கம் கஸினோ போன்ற சூதாட்டங்களையும், போதைப் பொருட்கள் மற்றும் விபச்சாரத்தையும் விரிவாக்கும் புதிய சட்டங்களை தயாரிப்பதற்கு முன்வந்துள்ளது அதற்காகத்தான். மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் சீனி, வெங்காயம், பருப்பு மற்றும் கருவாட்டின் மீது வரி விதிக்கும் அரசாங்கம், ஜேம்ஸ் பக்கர் போன்ற சூதாடிகளுக்கு வரிவிலக்களிக்கிறது.

அரசாங்கத்தின் செலவீனங்கள் குறித்து சுருக்கமாகவேனும் கூற வேண்டியுள்ளது. நவ தாராளமய கொள்கைக்கு ஏற்ப மக்கள் சேவைகளுக்கான ஒதுக்கீடுகள் வெட்டப்பட்டுள்ளதோடு, இலவசக் கல்வி மற்றும் இலவச சுகாதார சேவையை ஒழித்துக் கட்டுவதற்கான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இம்முறை வரவு செலவு திட்டத்தில் (பாதுகாப்புக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களை அடக்குவதற்காகவும்) 253 பில்லியன் ரூபா ஒதுக்கப்படுகையில், கல்விக்காக 68 பில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. சுகாதாரத்திற்காக 118 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய பல்கலைக் கழகத் தொகுதியை விரிவாக்குதலை நிறுத்திவிட்டு தனியார் பல்கலைக் கழகங்களுக்காக புதிய சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக கல்விக்கான முதலீட்டுச் செலவீனம் இம்முறை வரவு செலவு திட்டத்தினால் சென்ற வருடத்தையும் விட குறைக்கப்பட்டுள்ளது. பாடசாலைக் கல்வியின் மீண்டெழும் செலவீனம் வெட்டப்பட்டுள்ளதனால் பாடசாலைகளை தற்போதுள்ள நிலையிலேயே நடத்திச் செல்வதற்கான சுமையும் பெற்றோரின் தலையில் விழுந்திருக்கிறது.

இவ்வாறு மக்கள் சேவைகள் வெட்டப்பட்டு செலவுகளைக் குறைப்பதனாலும், மக்கள் மீது சுமையேற்றி வரி வருமானங்களை அதிகரித்துக் கொண்ட பின்னரும் 526.1 பில்லியன் துண்டு விழுகிறது. கடன் வாங்குவதன் ஊடாக அதனை நிவர்த்தி செய்து கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்திருக்கிறது. அதன்படி, தற்போது நிலவும் 63 ட்ரிலியன் அதாவது 6,30,000 கோடி ரூபா கடன் சுமை மேலும் அதிகரிக்கக் கூடும். இது மொத்த தேசிய உற்பத்தியில் 80 வீதத்துக்கும் மேற்பட்டதாகும். 2015 வரவு செலவு திட்டத்திலும் கடன் தவணை மற்றும் வட்டிக்காக மொத்த செலவீனத்தில் ஐந்தில் ஒன்றையும் விட அதாவது 445 ட்ரிலியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்முறை புதிதாக கடன் எடுத்தமையால் 2016 ஆகும்போது தவணைப் பணம் மேலும் அதிகரிக்கப்படும். ஆகவே, 2016ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை எங்களால் அனுமானிக்க முடியும். பெருமளவு கடன் வட்டி தவணையை செலுத்துவதோடு, வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை குறைப்பதற்காக மக்கள் சேவைகளை அதிகமதிகமாக வெட்டி, ஒடுக்கப்பட்ட மக்கள் மீது மேலும் மேலும் வரிகள் சுமத்தப்படும். அதாவது நவ தாராளமய முதலாளித்துவம் இன்னொரு அடியை முன்னெடுத்து வைக்கும். ஆட்சியாளர்கள் அழிவுக்கான பாதையில் இன்னொரு அடியெடுத்து வைத்துள்ளார்கள். ஆகவே ஒடுக்கப்பட்ட மக்கள் சோஷலிஸத்துக்கான பாதையில் இரண்டடிகள் முன்னெடுத்து வைக்க வேண்டும். இம்முறை வரவு செலவு திட்டத்தின் சவால் அதுதான்.



# பெண்கள் — சிறுவர்கள் பற்றிய கள ஆய்வு உடன் தேவை!

யுத்தம் நடக்கும் போது உண்மை முதலில் கொல்லப்படுகிறது என்பது போல, யுத்தத்தால் அதிகளவு பாதிப்புக்கு உள்ளாகுபவர்கள் பெண்களும் குழந்தைகளுமே என்பது நிருபிக்கப்பட்ட ஓர் உண்மை. இவ் உண்மைக்கு இலங்கையில் நடந்து முடிந்த போர் விதிவிலக்காக நடக்கவில்லை. பல்லாயிரம் மக்களைப் பலி கொண்ட போரில், பெருந்தொகையில் - நேரடியாகவும் மறைமுகமாகவும் கொல்லப்பட்டவர்கள், வன்முறைக்கு ஆளாக்கப்பட்டவர்கள் பெண்களும் குழந்தைகளுமே.

இன்று போர் முடிந்து 5 வருடங்களாகும் நிலையிலும், அதன் சமூகரீதியான பின்விளைவுகளால் பெருமளவில் பாதிப்படைபவர்களாக இருப்பவர்களும் பெண்களும் சிறுவர்களும் குழந்தைகளுமே. பொருளாதார வறுமை, உடல் - உளப் பிணிகள், பாலியல் வன்முறை, வன்கொடுமைகள், உரிமைகள் மறுப்பு, காணி - மற்றும் வளங்கள் பறிக்கப்படல் போன்ற இயல்பான சமூகவியல் காரணிகளும், போரின் பின்விளைவுகளும் இவர்கள் அல்லலுறும் பிரச்சனைகளாக இருக்கின்றன.

இவர்களின் இந்நிலை பற்றி இன்றுள்ள தமிழ் அரசியல்சார் நிறுவனங்களும், கட்சிகளும் விபரமாகக் கதைப்பதில்லை. போரின் போது நடைபெற்ற வன்கொடுமைகள், கொலைகள் பற்றி சர்வதேசத்தை விசாரணை செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடும் தமிழ் அரசியற்கட்சிகள், மற்றும் அவை சார்ந்த ஊடகங்கள், புலம்பெயர் அமைப்புக்கள், யுத்தத்தில் கொல்லப்பட்ட புலிகளின் தலைமை மற்றும் பிரபலங்கள் மீது நடாத்தப்பட்ட மனித உரிமை மீறல்களை முன்னிறுத்தியே சர்வதேச விசாரணைகளுக்கான செயற்பாட்டை முன்னெடுக்கின்றனர். சர்வதேசம் நிறுவனங்களை, உரிமைமீறல் ஆய்வுகளைச் செய்யக் கோருவது சரியா பிழையா என்ற விவாதம் ஒருபக்கமிருக்க, மேற்படி தமிழ் அரசியல் நிறுவனங்களின் தொடர்பில் உள்ள சில நாடுகள், மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சில பிரிவுகளுக்கு வெளியில் இன்று வரை இவர்களின் கோரிக்கை பிரபலமாக்கப்படவில்லை. அதாவது சர்வதேச நாடுகளின் சிவில் மக்களிடையே தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றி பிரச்சாரப்படுத்தப்படவில்லை. இதற்கு முக்கிய காரணிகள் ஒன்று சரியான முறையில் சிவில் மக்கள் சார்ந்த அழிவுகளை - குறிப்பாக பெண்கள், சிறுவர்கள் சார்ந்த மனித உரிமை மீறல்களை பதிவு செய்து, வகைப்படுத்தி, ஆய்வு செய்யாமையே. ஆனால், தமது நலன் சார்ந்த நோக்கில் மேற்படி அரசியற் கட்சிகளும், தமிழ் ஊடகங்களும் அவ்வப்போது பெண்கள் சார்ந்த வன்கொடுமைகள், கொலைகளை பிரச்சாரம் செய்தனர். உதாரணமாக, சனல் 4-இனால் வெளியிடப்பட்ட புலிகளின் ஊடகம் சார்ந்த சகோதரியின் காணொளிகளைக் கூறலாம்.

மேலும், ஊடகங்களின் வருவாயை முன்னிறுத்தி - அல்லது இலங்கை அரசை ”மானம் கெடுக்க” வேண்டுமென்ற நோக்கில், இலங்கை அரச இராணுவத்தின் பெண்கள் மீதான வன்முறைகளை(விபச்சாரம், பாலியல் வன்புணர்வு, கொலைகள்) மேலெழுந்தவாரியாக - அநேகமாக கொச்சைத்தனமான முறையில் பிரசுரித்து - தமிழ் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்கின்றனர். இவற்றில் பெரும்பான்மையான சம்பவங்களை இவர்கள் பிரசுரித்து, பிரச்சாரம் பண்ணும்போது பாதிக்கப்பட்டவர்களின் கருத்தையும், அவர்களின் பாதுகாப்பையும், எதிர்கால வாழ்க்கை சார்ந்த நலனையும் கருத்திற் கொள்ளவதில்லை.

உதாரணமாக, தமிழ் தேசிய நலனை முன்னிறுத்திப் போராடுவதாகக் கூறியவர்கள், வன்னியைச் சேர்ந்த 100 தமிழ் பெண்பிள்ளைகள் இராணுவத்தில் இணைத்துக் கொண்ட விடயத்தை எவ்வாறு தமது பிரச்சாரத்துக்கு உபயோகித்தனர் என்பதை ஆராய்ந்தால் விளங்கிக் கொள்ள முடியும்.

இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட அப் பெண்பிள்ளைகளில் பலர் பொருளாதார வறுமை காரணமாவும் - அதனால் ஏற்பட்ட பொருளாதார அழுத்தத்தினாலும் படையில் சேர்ந்தனர். அதாவது, அவர்களுக்கு பொருளாதார வறுமையிலிருந்து மீள வேறு தெரிவுகள் இல்லாமையினாலேயே படையில் இணைந்தனர். இதனடிப்படையில், முற்றுமுழுதான விருப்பின் அடிப்படையில் அவர்கள் இணையவில்லை. அவர்களில், சிலருக்கு இராணுவப் பயிற்சியின் போது, போர் அனுபவம் சார்ந்த மனவடுக்களால், மன நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களை, வடபகுதியின் மிகவும் அனுபவம் வாய்த்த உளப்பிணி வைத்தியர் நேரடியாக சந்தித்து, உளவள ஆலோசனை வழங்கினார். ஆனால், தமிழ் தேசியசக்திகள் எனத் தம்மை அழைப்போரும், அவர்களின் ஊடகங்களும், அப்பெண்பிள்ளைகள் இராணுவத்தால் பாலியல்வதைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் - மனநிலை பாதிக்கப்பட்ட இராணுவத்துக்கு அவர்கள் ”பலி” யாக்கப்பட்டதாகவும் பிரச்சாரம் செய்தனர். உளப்பிணி வைத்தியர் தமிழ் தேசியத்தின் துரோகியாக்கப்பட்டார். நேரடியாக அப்பெண்கள், ஊடகங்களில் தமக்கு என்ன நடந்தது எனப் பகிரங்கமாகக் கூறியும் அவர்கள் குரல் ஏற்கப்படவில்லை. பனையால் விழுந்தவரை மாடேறி மிதித்தது போல, சொந்த இன அரசியலின் தேவைக்கு அவர்கள் பலியாக்கப்பட்டனர். இது நடந்து கிட்டத்தட்ட ஒருவருடத்துக்கு மேலாகிறது. அவதூறுப் பிரச்சாரம் முடிந்த பின்பு இன்றுவரை மேற்படி தமிழ்த்தேசிய காவலர்களும், அவர்களின் ஊடகங்களும் இராணுவத்தில் இணைந்தவர்களைப் பற்றி எதுவும் எழுதவில்லை. தம் தவறுக்கு எதுவித பிராயச்சித்தமும் செய்யவில்லை. தவறான பிரச்சாரத்தால் அப் பெண்பிள்ளைகள் தனிப்பட்ட வாழ்க்கையில் எவ்வாறான விளைவுகள் ஏற்பட்டதென்று கரிசனையும் கொள்ளவில்லை.



உண்மையில் மேற்படி தமிழ்தேசிய காவலர்கள், இலங்கை அரசின் இராணுவ வன்முறையை அம்பலப்படுத்த விரும்பினால், சரியான முறையில் ஆய்வு செய்து, அப்பெண் பிள்ளைகளின் குடும்பங்கள், ஊர்கள், சமூகம் எப்படி போரினால் பாதிக்கப்பட்டதென்று சரியான தகவல்களின் அடிப்படையில் பிரச்சாரம் செய்திருந்தாலே போதுமானது. அவர்கள், எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தும் மாற்றுத் தெரிவுகள் எதுவும் இல்லாமல் இராணுவத்துக்கு போக வேண்டி வந்தது என ஆராய்ந்து எழுதியிருந்தாலே போதுமானதாக இருந்திருக்கும். அவ்வாறு எழுதியிருந்தால், அதன் உள்ளடக்கங்களே, இலங்கை அரசின் கொடியபோரும், ஒடுக்குமுறையும் எவ்வாறு அவர்களின் வாழ்க்கையைச் சீரழித்தது என்ற மனச்சஞ்சலத்தையும் ஏற்படுத்துவதுடன், சமூகமனச்சாட்சியையும், கொடுங்கோன்மை அரசியலையும் அம்பலப்படுத்தும் உண்மைகளை வெளிக்கொண்டு வந்திருக்கும். அவதூறுகளையும், பாலியல் சார்ந்த குற்றங்களுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டதாக பிரச்சாரம் செய்திருக்கத் தேவையில்லை.

அதேவேளை, இதே தமிழ்த்தேசிய காவலர்களின் கட்சி சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் அனுசரணையுடனும், சிபாரிசின் பேரிலும் இலங்கைப் போலிஸ் சேவையில் தமிழ் பெண்களும், ஆண்களும் இணைக்கப்படுகின்றனர். இலங்கைப் போலீஸ் மட்டுமென்ன எந்தக் குற்றமும் இழைக்காத

“
இன்று போர் முடிந்து 5 வருடங்களாகும் நிலையிலும், அதன் சமூகரீதியான பின்விளைவுகளால் பெருமளவில் பாதிப்படைபவர்களாக இருப்பவர்களும் பெண்களும் சிறுவர்களும் குழந்தைகளுமே.
”

சம்மனசுகளா?

இதேவேளை, இடதுசாரிய அரசியல் இயக்கங்கள் கூட மேற்படி மக்களின் அழிவுகளை - பெண்கள் சிறுவர்கள் மீதான யுத்தக் கொடுமைகளை சர்வதேச சிவிலியன் மக்கள் சார்ந்து பிரசாரப்படுத்தவில்லை. இவர்கள் சர்வதேச மக்களிடம் போக வசதிகள் இல்லையென்றாலும், குறைந்தது இலங்கையில் வாழும் சகோதர இன மக்களிடமாவது, விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சிக்கவில்லை. ஆரம்பத்தில் குகன் - லலித் போன்றவர்களால் சில ஆரம்ப முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், அது எவ்வாறு முடிவடைந்ததென்று யாவரும் அறிவர். இதற்கு வெளியில், சொல்லக்கூடியதான எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

சுய விமர்சன அடிப்படையில் கூறுவதானால், பெண்கள் மற்றும் சிறுவர்கள் சார்ந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடுவதில், தமிழ் அரசியல் தளத்தில் உள்ள பெண்ணிய செயற்பாட்டாளர்கள் - மற்றும் இடதுசாரிகள் மேற்படி தமிழ்த்தேசிய பாதுகாவலர்களை விட, நடைமுறையில், பண்பில், ஊடக தர்மத்தில் சிறந்தவர்கள் அல்ல. கொடுமைப்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட சிறுவர்கள், பெண்களின் உடல்களின் படங்களை இவர்களும் போட்டி போட்டுக் கொண்டு பிரசுரித்தனர்.

விக்கிலீக்ஸில் சில தமிழ் அரசியல்வாதிகள் பெண்களை விபச்சாரத்தில் தள்ளியதாக எழுதியபோது, இடதுசாரி இணையங்கள் போட்டி போட்டுக் கொண்டு ஏதோ இலங்கை வாழ் அனைத்து தமிழ் பெண்களும் விபச்சாரத்தில் தள்ளப்பட்டதான பிரமையை ஏற்படுத்தும் வகையில் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளினார்கள். சிலர் இன்னும் மேலே போய், ஒரு கிழக்கு அரசியல்வாதி ”தம்மிடம் இருந்த போராளிகளை கொண்டு பாலியல் தொழிலையும் நடத்தியதாகவும் விக்கிலீக்ஸ ில் தெரிவிக்கப்பட்டுள்ளது” என்று பொய்ப் பிரச்சாரம் செய்தனர். இன்றும் கூட மேற்படி தான்தோன்றித்தனமான செயற்பாடுகளில் இருந்து இடதுசாரிய சக்திகள் மீளவில்லை.

இந்நிலைக்கு மிக முக்கிய காரணிகளில் ஒன்று இடது - வலது என்ற அரசியலுக்கு அப்பாற்பட்டு மக்கள் நலம் சார்ந்து இயங்கும் எவரிடமும் கள ஆய்வு முறையில் பெறப்பட்ட யுத்தத்தில் செய்யப்பட்ட கொடுமைகள் பற்றிய சரியான தகவல்கள் இல்லாததே.

இதனாலேயே தொடர்ந்தும், சனல் 4 மற்றும் சில சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் தகவல்களின் அடிப:படையில் அரசியல் செய்ய முயல்கிறோம். மேலும், களஆய்வின் அடிப்படையில் தகவல்கள் திரட்ட முடியாதென யாராவது கூறுவார்களானால், அது தமது இயலாமையை மறைக்க கூறப்படும் காரணியாகவே இருக்கும். காரணம், இன்று வடக்கு - கிழக்கில் சர்வதேச தொண்டு நிறுவனங்கள், மேற்படி தரவுகளை ஏதோவொரு விதத்தில் களஆய்வு சார்ந்து பெற்றுக் கொள்கின்றனர். ஆனால், அவர்கள் தரவுகளை உபயோகிப்பது தமது நலன், மற்றும் அவர்களின் நிதி வழங்கும் எசமானர்களின் தேவைக்காக மட்டுமே. நீண்ட காலப் போக்கில் இது மக்கள் நலம் சார்ந்த அரசியலுக்கு எதிரானதாகவே உபயோகிக்கப்படும்.

ஆதலால், இன்று கள ஆய்வின் அடிப்படையில் வடக்கு - கிழக்கில் சிவிலியன் மக்கள் மீதனா போர்க் குற்றங்கள் - குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான மனித உரிமை மீறல்கள் பதிவு செய்யப்படவேண்டிய பொறுப்பு இடது சக்திகள் மற்றும் அல்லது ஒடுக்கப்பட்ட மக்கள் நலன் விரும்பிகளின் முன்னாலுள்ளது.

# சிவன் விடு தூது...

## சிறுகதை...



எதிர்பாராமல் வந்த பயணம். அப்படி இப்படி என்று ஒரு மாதிரி வெளிக்கிட்டுப் புறப்பட்டு வந்து விட்டேன்.

மூவாயிரம் அடி உயரத்துக்கு மேலே பிளேன் பறந்து கொண்டிருந்தது. ஏதோ நல்ல காலம், யன்னல் அருகே இடம் கிடைத்ததாலும் எனது பக்கத்தில் யாரும் இல்லாதனாலும் பெரிய வசதியாகவும் ஆறுதலாகவும் இருந்தது.

வெளியே எட்டிப்பார்க்கிறேன் எல்லாம் நல்ல வெண்பஞ்சு மேகம். போட்டோ எடுக்கப் பாவிக்கிற லைற்றுக்கள் பூட்டிய மாதிரி நல்ல வெளிச்சம். பார்ப்பதற்கு நல்ல அழகாகவும் ரம்மியமாகவும் இருந்தது.

அப்படியே நடந்து போய்க் கொண்டிருக்கிறேன். பஞ்சு மேகங்களுக்குள்ளே மிரிச்சுக் கொண்டு நடக்க சிலவேளை கீழே விழுந்து விடுவேனோ என்று பயந்தாலும், ஏதோ நல்ல மணற்தெருவிலே வெறுங்காலோடு நடப்பது போன்று... நடக்க ஆசையாக இருந்தது.

இப்ப சாமத்திய வீடுகளில் பிள்ளை வரும் போதும், கலியாண வீடுகளில் மாப்பிளை பெம்பிளை வரும் போது புகையடிப்பது போல வழியெல்லாம் புகை புகையாய் வந்து கொண்டிருந்தது.

என்னாலே நம்ப முடியாமல் இருந்தது. எனக்கு முன்னாலே கழுத்திலே ஒரு கிற்றாரைக் கட்டித் தொங்கியபடி ஒரு ஆள் வந்து கொண்டிருந்தார்.

அது வேறு யாருமல்ல... நாரதரே தான்... பார்ப்பதற்கு சிவாஜி கணேசனைப் போலவும். இடைக்கிடை ரீ.ஆர். மகாலிங்கத்தைப் போலவும் காட்சியளித்தார்.

என்ன, நான் காண்பது கனவா... அல்லது நினைவா... ஐயோ....! அல்லது நான் செத்துத்தான்..... மேலே வந்திட்டேனோ...?

வணக்கம் மானிடா! வணக்கம்... நீ இப்போது என்ன நினைக்கின்றாய் என்பது எனக்கு நன்றாகவே புரிகின்றது. நீ செய்த புண்ணியத்தினாலும் நீ செய்த தவத்தின் பயனாலுமே தான் இங்கே வந்திருக்கிறாய் பக்தா... ஒன்றும் கவலை கொள்ளத் தேவையில்லை உரிய இடத்திலும், சரியான நேரத்திலும் தான் வந்திருக்கிறாய்.

கொஞ்சம் மனது சந்தோசப்பட்டது.

ஒரு சின்ன வேண்டுகோள்.... உங்களை நான் எப்படி அழைப்பது. ஏனென்றால் பொதுவாக தமிழாக்கள், முதலில் ஒரு கொஞ்சம் வயது கூடியவர் போல் தெரிந்தால் அண்ணை என்றும் இளையவர் போல் தோன்றினால் தம்பியென்றும் அழைப்பது தானே வழக்கம்... அது தான்..... உங்களை நாரதர் அண்ணா என்று அழைக்கவா......?

இல்லை பக்தா... நீ நாரதா என்றே அழைத்துக் கொள். ஏனென்றால் இங்கே எல்லா இடங்களிலும் சம உரிமை நிலைத்திருக்கிறது. இப்ப புலம்பெயர் நாடுகளிலும் ஒருவரையொருவர் பெயர் சொல்லி, அழைப்பது தானே ஸ்ரையில்...

நீ ஒரு அதிஸ்டசாலி பக்தா... இன்று எல்லாத் தெய்வங்களையும், மும்மூர்த்திகளையே ஒன்றாய் சந்திக்கும் வாய்ப்பு உனக்கு மட்டும் தான் கிட்டியிருக்குப் பக்தா.... எத்தனையோ முனிவர்களும் ரிசிகளும் காலம் காலமாக தவங்கிடந்தும், அவர்களுக்கே கிடைக்காத அந்தப் பாக்கியம் உனக்கு கிடைத்திருப்பது உன் முன்னோர் செய்த புண்ணியம் பக்தா....

இந்த வருடத்துக்கான தேவலோகத்து கொம்பியூட்டர் தேர்வில் உன் பெயரல்லவா தெரிவு செய்திருக்கின்றது. இந்தத் தேவலோகமே உன் வரவுக்காய் காத்திருக்கின்றது.

அப்ப..... எங்கள் மூத்த கடவுள் முக்கண்ணன், மூத்த பரம்பொருள் மிஸ்ற்ரர் சிவபெருமானையும் சந்திக்கலாமா.....?

என்ன பக்தா இப்படிக் கேட்டுவிட்டாய்.....? சிவன் தானே இன்றைய கூட்டத்துக்கே தலைமை தாங்குகின்றார்.

நல்லது நாரதரே, முதலிலே எனக்கு பசியாயும் தாகமாயும் இருக்கிறது. உந்த றயன் எயாரில் குடிக்க ஒரு தண்ணி கூடத் தரவில்லை. இங்கே ஏதாவது பக்கத்திலே மக்டோனால்ஸ்..... பேக்கர் கிங் போன்று ஏதாவது இருக்குமா.... நாரதரே...

மகனே என்ன....? இந்தக் கேள்வி கேட்டு விட்டாய், இந்தத் தேவலோகத்தில் எல்லாம் கிடைக்கும் போது போயும் போயும் ஒரு மக்டோனால்ஸ்..... எனக்குச் சிரிப்புத் தான் வருகின்றது.

நாங்க தான் விட்டாலும் உந்த அமெரிக்கா சும்மா விடுமா...? பிறகு ஏதாவது... இரசாயனம் என்றும் கெமிக்கல் ஆயுதங்கள் என்றும் பொய்ச்சாட்டுக்களை எம்மீது சுமத்திப் போட்டுவிட்டு இந்தத் தேவலோகத்திலுமல்லவா சண்டையைக் கிளப்பி விடுவார்கள்.

இன்னும் இரண்டு நிமிடங்களுக்குள் கூட்டம் நடக்கும் இடத்தை அடைந்து விடுவோம், அங்கேயே உனக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். நீ விரும்பியது போல் கேள்விகளை கேட்டு உனது சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம்.

நாரதருடன் போய் உள் நுழைய அது ஒரு பெரிய மண்டபம். திருவிளையாடல், சரஸ்வதிசபதம் கந்தன்கருணை போன்ற படங்களில் பார்த்த மாதிரியான தோற்றம் கொண்ட பெரிய அரச சபை. பெரிய பெரிய அலங்காரங்கள் கொண்ட தூண்களால் மண்டபம் தாங்கி உயர்ந்து நின்றது.

ஒவ்வொருவரும் சோடி சோடிகளாய் பக்கத்தில் அமர்ந்திருக்கிறார்கள்.

சிவனுக்குப் பக்கத்திலே பார்வதி. உமையவளைப் பார்க்க முடியாமல் இருந்தது. அவ்வளவும் ஒரே நகை. சாமத்தியவீடு கலியாண வீடுகளில் எங்கடை பெண்கள் போடுவது போலவே.... பார்வதியும் கழுத்து நிறைய அள்ளி நிறைத்திருந்தாள்.

அவ்வளவும் சிங்கப்பூர் நகைகள் போலிருக்க வேண்டும். லேற்ரசாய் வந்த டிசைன் நகைகள். சிவனின் உழைப்பு முழுவதும் பார்வதியின் உடம்பிலே ஜொலித்துக் கொண்டிருந்தது. நிச்சயமாய் சிவன் இரண்டு வேலை செய்ற ஆளாய் தான் இருக்க வேண்டும். இல்லையேல் நல்ல சீட்டுப்பிடிக்கிறவராய் இருக்க வேண்டும்.

அதுக்குப் பக்கத்திலே சரஸ்வதி. பாக்கிறதுக்கு அவ கொஞ்சம் லுக்காத்தான் இருந்தா. முந்திப் பார்த்த மாதிரி அப்படியே இருந்தா. நான் சொல்லுறது, முந்தி எங்கடை ஊரிலே தோசை சுட்டுவிக்கிற வள்ளியாச்சியின்றை தங்கையான அந்தச் சரஸ்வதியல்ல இவ எல்லாருக்கும் கல்வியை அள்ளி வழங்கிய மனுசி.

ஏதோ ஜிம்முக்குப் போவது போல உடம்மை நல்லா தான் வைச்சிருந்தா. எனக்கு அந்த மனுசியிலே சொல்ல முடியாத கோபமும்., ஆத்திரமும். இந்த மனுசி சரியா இருந்து, அந்த நேரத்திலே எனக்குப் ஒரு நல்ல படிப்பைத் தந்திருந்தால்... நான் எங்கேயோ........போயிருப்பேன்... சரி சந்தர்ப்பம் கிடைச்சா இது சம்பந்தமாகவும் கேட்டுவிட வேண்டும். மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

அடுத்ததாக கிருஷ்ணன் இருந்தார் அவற்றை கையிலே இப்பவும் அந்தக் டிஸ்க் சுழண்டு கொண்டிருந்தது. கடைசியாய் வர இருக்கிற ஏதோ புதிய தமிழ்ப் படம் ஒன்றின் சீடி போல இருக்க வேண்டும். சரஸ்வதியை விட இவரிலே தான் எனக்குச் சரியான கோபம். இவர் தானே ராமராக வந்து ஒழிச்சிருந்து சுக்கிரீபனைச் சுட்டவர்.. அவர் இதுவரையும் தானோ, அல்லது தன்ரை இயக்கத்தாலேயோ, இன்னும் உரிமை கோராதது எனக்கு இன்னும் ஆத்திரமாயிருக்கு.

இவராலே தான் முந்தி, முத்துவேலு மாஸ்ரர் என்னை வகுப்புக்கு வெளியாலே பிடிச்சு விட்டவர். ஏனெண்டால் அவர் ஏதோ சந்தேகம் கொண்டு தன்ரை மனிசி சீதாவை தீக்குளிக்கச் சொன்னவர் என்று மாஸ்ரர் படிப்பிச்சுக் கொண்டிருக்கும் போது, அவற்றை தகப்பனுக்கு மூன்று மனைவிகள் இருந்தும் சந்தேகம் வரவில்லை. ஒரு மனைவியை வைச்சுக் கொண்டு இவர் சந்தேகப்படுவது நியாயமோ....? அல்லது கடவுள் எண்டு இருக்கிற இந்த ராமனுக்கு.... அந்த உண்மை பொய் தெரியாமல் போச்சோ, எண்டு கேட்டதுக்குத் தான் முத்துவேலு மாஸ்ற்ரர் கோவிச்சது மட்டுமல்ல தன்ரை பாடத்துக்கு இனிமேல் வகுப்பில் இருக்கக் கூடாது எண்டு கலைச்சு விட்டவர்.

எனக்குத் தெரிந்த கன கடவுள்மார் சுற்றிவர இருந்தனர். யார் யாரண்டு அடையாளம் காண முடியாமல் இருந்தது. இந்த இந்துக் கடவுள்களில் எல்லாமாக எத்தனை பேர் என்ற புள்ளிவிபரம் எனக்கு இதுவரையிலும் தெரியாது.

எல்லோரும் முன்பு சின்னனிலே கண்டது போல அப்படியே இருப்பது ஆச்சரியமாய் இருந்தது. ஒருவருக்கும் தலையில் மயிர் கொட்டியிருப்பது போலவோ.. அல்லது ஒருவராவது கண்ணாடி போட்டது போலவே தெரியவில்லை.

ஓ...ஓ அப்படியே மாறாமல் இருந்தார்கள். இவர்கள் கடவுள் அல்லவா....

பக்தனே... இந்த வருடத்தில் எங்கள் கொம்பியூட்டர் உன்னைத்தான் தேர்ந்தெடுத்திருக்கின்றது. எங்களுக்குள் வேறு பல விடையங்கள் கதைக்க இருந்தாலும் உனக்கு இங்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. நீ எது வேண்டுமானாலும் கேட்டுக் கொள் என்று சிவபெருமான் வேண்டிக் கொள்ள மண்டபம் எங்கும் சிவனின் குரல் கணீரெண்டு ஒலிக்க நானும் எழும்ப முயன்றேன்.

பக்தா.... நீ இருந்து கொண்டே உன் பேச்சைத் தொடரலாம். கேள்விக் கணைகளையோ சந்தேகங்களைக் கேள் குழந்தாய்...

இல்லை எனக்கு கொஞ்சம் கவலையாகவும், பயமாகவும் இருக்கின்றது. முத்துவேலு மாஸ்ரர் என்னைப் பிடிச்சு வெளியாலே விட்டது போல் பிடித்துத் தள்ளிவிடுவீர்களோ என்று எண்ணத் தோன்றுகிறது....

இல்லை அப்படியொண்டும் நடக்காது. இன்று உனக்குத் தான் முதலுரிமை. நீதான் சிறப்பு விருந்தினர்...

இல்லை எங்கடை நாட்டிலே உங்களுக்காக வீதிக்கு வீதியும் ஒழுங்கைக்கு ஒழுங்கையும் ஒரே கோயில்களும் கோபுரங்களும் தானே இருக்கிறது. அத்துடன் வீடுகளிலுமல்லவா உங்களுக்கென்று பிரத்தியேக பூசை அறைகள். எங்கடையாக்கள் தங்களுக்கு சாப்பிட வழியில்லாவிட்டாலும் மற்றவனும் அயலவனும் பட்டினியாலே செத்துக் கொண்டிருந்தாலும் உனக்காக நாலு காலபூசையும் நைவேத்தியங்களும் வைக்க ஒரு போதும் தவறியதில்லையே.

ஆனால் நீங்களோ.... போரெண்டு, தொடங்கி முள்ளிவாய்க்கால் வரையிலும் வந்து முடிஞ்சு போய் எவ்வளவோ அழிவுகளும் அக்கிரமங்களும் நடந்து முடிந்தும் இன்று வரையிலும் ஒன்றுமே செய்யவில்லை. நீங்கள் எல்லாம் எங்கே போனீர்கள்......? என்ன செய்து கொண்டிருந்தீர்கள்......?

உங்கடை பெயரிலே குடம் குடமாய் பாலூற்றி அபிசேகம் செய்து கொண்டிருக்கும் போது உலகத்தின் இன்னொரு மூலையில் நிமிடத்துக்கு நிமிடம் வினாடிக்கு வினாடி பாலின்றி பச்சைக் குழந்தைகள் மடிந்து கொண்டிருக்கின்றார்களே. ஏன்.....,? இந்தப் பாகுபாடுகள்....?

உங்கடை பேராலே மதம் என்றும், சமயம் என்றும் சொல்லி.... எத்தனை அழிவுகளையும், இழிவுகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

மாடாய் உழைத்து உழைத்து மண்டியிட்டுக்கொண்டிருக்கிறது ஒரு கூட்டம். மந்திரம் சொல்லியே மடியை நிரப்பிக் கொண்டிருக்கிறது இன்னொரு கூட்டம். எது இன்று என்னுடையதோ அது நாளை மற்றவர்களுடையதாகின்றது என்று நீங்கள் தானே சொல்லியிருக்கின்றீர்கள்.... ஆனால் ஆட்சியும் இந்த அதிகாரங்கள் கொண்ட இந்த அரசுகளும், இந்த முதலாளித்துவத்திடமே எப்போதும் இருந்து கொண்டிருக்கு.... இது தொழிலாளர்களது கைக்கு எப்போ மாறும்...

இந்தப் பாகுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் ஏன் படைத்தீர்கள்.... இறைவா....?

ஒரே அமைதி.... எல்லோரும் அமைதியானார்கள், சீ... இப்படி இங்கே தான் வருவேன் என்று தெரிந்திருந்தால், ரண்டு பெக் போட்டிட்டு வந்திருந்தால் இன்னும் கொஞ்சம் விளாசியிருக்கலாம் என்று மனம் நினைத்துக் கொண்டது.

பக்தா நீ ஆவேசப்படுவது எங்கள் எல்லோருக்கும் நன்கு விளங்குகின்றது. ஆனால் எதற்கும் ஒரு எல்லையிருக்குத் தானே.... என்று முடிக்க முதல்.....

நிறுத்துங்கள்...... என்ன.... கதைக்கின்றீர்கள்.... எதற்கு காலம்... அப்போதே நான் சொன்னனான், இது நான் விட்ட தவறு, உங்கள் எல்லோர் ஆலோசனைகளையும் எதிர்பாராமல் போருக்குப் புறப்பட வேண்டியது என் கடமை. தமிழ் கடவுள் என்று நான் இருப்பதில், இருந்ததில் எந்த விதப் பிரயோசனமும் இல்லாமல் போய் விட்டதே. எனது அப்பாவிப் பொது மக்கள் அநியாயமாய் மடிந்து கொண்டிருந்ததை சும்மா பார்த்துக் கொண்டிருந்து விட்டேனே என்ற பழிச்சொல் எனக்கு வந்து விட்டதே....

சிவனும் உமாதேவியும் மகன் முருகன் கலங்குவதைக் கண்டு ஒருகணம் நிலைகுலைந்து போனார்கள்.

முருகா... சாந்தம் கொள்... அன்று ஈழத்திலே ஜேவிபி கிளர்ச்சி என்று வந்தபோது எத்தனையோ ஆயிரமாயிரம் அப்பாவி சிங்கள மக்களும், இதே போல்த் தான் கொல்லப்பட்டு, ஆற்றிலேயும் குளங்களிலேயும் வீசியெறியப்பட்ட போது, அப்போதும் நாங்கள் மௌனம் தானே காத்தோம், ஒருவரும் போய் ஆவன செய்யவில்லைத் தானே..

அவர்களும் உங்களைப் போலவே என் குழந்தைகள் தான். இதை யாரும் மறந்து விடக்கூடாது. மறுத்து விடவும் முடியாது.

பக்தா!! கவனமாகக் கேள்... நீங்கள் மாறி மாறி சண்டைப்பட்டுக் கொண்ட போதெல்லாம் இதெல்லாம் சகோதரச் சண்டை என்று தான் நான் எண்ணியிருந்தேன். உங்களுக்குத் தெரியாமலே உங்கள் பாதுகாவலராய் இருக்கின்றோம் என்று சொல்லித்திரியும் உங்கள் இருபக்கத் தலைவர்களும் தான் தங்கள் சொத்துக்களை சேர்ப்பதற்காகவும் தங்கள் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதற்காகவும் உங்களை எதிரியாக்கி, இந்த நாசவேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எதிரிகள் அல்ல. நீங்கள் சகோதரர்கள் என்பதை மறவாதே.

சகோதரராகிய நீங்கள் இருபகுதியினரும் ஒன்றுபடுவதன் மூலம் தான், உங்கள் எதிரியை விரட்ட முடியும். உங்கள் ஒற்றுமை மூலம் தான் நீ ஏற்கனவே கேட்டுக் கொண்ட ஆட்சியதிகாரங்களைப் பிடித்துக் கொள்ளலாம். இன்று அவர்களுடையது என்றிருப்பது நாளை உங்களுடையதாக மாறும், இது தான் வரலாறு,

15ம் பக்கம்



# வடபகுதி மீனவர்களின் பட்டினியுடனான போராட்டம்

ஆண்டாண்டு காலமாக, வாடைக்காற்றுடன் கூடிய பருவமழை பொழியும் ஐப்பசி முதல் சித்திரை வரையான மாதங்கள் இலங்கையின் வடபகுதி மீனவர்களின் வசந்தகாலம். இக்காலத்தின் சமூக நிகழ்வுகள், வாய்வழிக் கதைகளாகவும், திண்ணைப் பேச்சுக்களின் சாரங்களாகவும் நவீனகாலத்தில் புத்தகங்கள், ஏன் திரைப்படமாகவும் கூடப் பதியப்பட்டுள்ளன. முப்பது வருட யுத்தமும்,இடப்பெயர்வும் மீன்பிடிக் கருவிகளின் அழிவும் வடபகுதி மீனவர்கள் வாழ்க்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய போதும், வாடைக்காற்று வீசும் போது வடகடல் அவர்களை எப்போதும் ஏமாற்றியதில்லை.

இக்காலத்தில் தான் காதல் பிறப்பதும், திருமணம் நிச்சயிக்கப்படுவதும், பெண்களின் காது கழுத்தில் தங்கம் மின்னுவதுடன், ஆண்களின் கழுத்திற் கூட மீன்பொறித்த இரட்டைவடம் கழுத்திற் தொங்கும்.

யுத்தம் முடிந்து- கார்த்திகை வரை தடுப்பில் இருந்து ஒட்டாண்டிகளாக ஊர் திரும்பிய பின் சில மாதங்களிலேயே ஓரளவேனும் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்ய, உடனடியாக அள்ளிக் கொடுத்தது வடகடல் தான். எது நடந்தாலும் அவர்கள் வாழ்க்கையின் இயற்கைபின் ஒரே ஒரு தொடர்ச்சியாக இருப்பது, கச்சான் காற்று புரட்டாதியில் ஓய்ந்து போக, வீரியத்துடன் வீசும் வாடை ஒவ்வொரு வருடமும் செல்வத்தை அவர்கள் கரை கொண்டு வருவதாகும். மீனவர் வாழ்வில் செல்வம் என்பது மீன் மட்டும் தானே ?!

யுத்தம் முடிந்து இப்போ ஐந்து வருடங்கள். ஆனால் இன்னும் மீனவர் வாழ்க்கை முற்றுமுழுதாக வழமைக்கு திரும்பபவில்லை. பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல, 2009 இற்குப் பின் சிறுகச் சிறுக வழமைக்குத் திரும்ப எடுத்த முயற்சிகள் அனைத்தும், 2013இன் வாடைவீசும் பருவமழைக் காலத்துடன் மறுபடியும் சீரழியும் நிலைக்கு வந்துள்ளது.

செல்வம் கொழிக்க வேண்டிய இந்தப் பருவ காலத்தில், வடபகுதி மீனவ சமூகம் பட்டினியால் வாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எந்தவகை வலை போட்டாலும் வெறும் பறியுடன் வீடு வந்து சேருகின்றனர் மீனவர்கள். தொழிலுக்குப் போக அவசியமான உணவு, இயந்திர எண்ணை போன்ற செலவுக்குக் கூட வருவாய் இல்லாமல் மீன் பிடிபாடு அருகியுள்ளது.

மீனவ சமூகம் இவ்வாறு வருவாய் இல்லாமல் தவிக்கும் நிலை, சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது கூட இருக்கவில்லை. ஐப்பசி தொடக்கம் வடகடலின் கரைவரும் மீன்களால் பெறும் வருவாயே, சித்திரைக்குப் பின் வரும் காலத்தில் வாழ்க்கையைக் கொண்டோட உதவியாக இருந்து வந்தது. ஆனால் இன்றுள்ள நிலையில் வருவாய் வர வேண்டிய காலத்திலேயே மக்கள் பட்டினியில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை தொடருமானால் 2014-சித்திரைக்குப் பின்வரும் காலம் வடபகுதி மீனவர்களின் வாழ்க்கை மாபெரும் துன்பகாலமாகவே இருக்கப் போகிறது. இன்னிலைக்கு முக்கிய காரணியாக இருப்பது, இந்திய பெரும் மூலதனத்தின் - இலங்கை வடகடலில் நடாத்தப்படும் கடல் வளக் கொள்ளையாகும்.

இலங்கையின் கடல்சார் பிரத்தியேக பொருளாதார பிரதேசத்திலும், கரையோரத்திலிருந்து சில கடல் மைல்கள் தூரத்திலும் கடல்வளக் கொள்ளையை மேற்கொண்ட இந்தியப் படகுகள் இப்போ, கரையிலிருந்து அரைக் கிலோமீற்றர் வரையான தூரத்திலும், வடக்கின் தீவுகளைச் சுற்றியும் எந்தவித தடையும் இல்லாமல் மீன் பிடிக்கின்றன.

இக் கொள்ளை பற்றிப் வெவ்வேறு கோணங்களில் பல கட்டுரைகளில் போராட்டம் பத்திரிகை வெளியிட்டுள்ளது. இம்முறை இக்கொள்ளைக்கும், கச்சதீவு உரிமத்துக்குமான தொடர்பு பற்றியும் எழுதத்திட்டமிட்டிருந்தாலும், வடகடல் சார் மீன்பிடிச் சமூகங்களில் நிலை கவலைக்கிடமான நிலையில் உள்ளதால், இந் நிலைக்கான காரணிகள் பற்றிப் பேச வேண்டியுள்ளது. இதனடிப்படையில் மேற்படி இந்தியக் கொள்ளை எவ்வாறு- நேரடியாக மீனவர் வாழ்க்கையை பட்டினிச் சாவுக்கு உள்ளாக்குகிறது என்பதை கள ஆய்வுத் தகவல்களின் அடிப்படையில் பேச முனைகிறது.

இந்திய நாசகார மீன்பிடியால் இலங்கை வடகடல்சார் தொழிலாளிகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் - சில உதாரணங்கள்

உதாரணம் 1

இந்திய இழுவைப்படகுகள் எழுவைதீவுக்கும், காரைதீவுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் மீன்பிடிப்பதனால், ஊர்காவற்துறை, பருத்தியடைப்பு, மெலிஞ்சிமுனை, கெட்டில் போன்ற பிரதேசங்களில் கார்த்திகை மாதத்திலிருந்து சித்திரை மாதம் வரை களங்கண்டி மூலம் கணவாய் பிடிக்கும் தொழில் பெரும் வீழ்ச்சியை அடைந்துள்ளது. மேற்கூறிய கிராமங்களில் 2011 ம் வருட கணக்கெடுப்பின்படி மொத்தமாக 287 கடல்தொழிலாளர்கள் களங்கண்டியை தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்கள் 2010 கார்த்திகை மாதத்திலிருந்து சித்திரை 2011 வரையான காலத்தில் மாதாந்தம் ஒவ்வொருவரும் சராசரி 56 கிலோ கணவாய்களை பிடித்துள்ளனர். இவர்களின் மீன்பிடிச் சங்கங்களின் தகவலின்படி 2012 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 22 கிலோ கணவாயே மாதாந்தம் பிடித்துள்ளனர். அதுவும் இப்பிடிபாடு கணவாய் அதிகமாகப் பிடிபடும் மார்கழி மற்றும் தை மாதத்திலேயே பிடித்துள்ளனர்.

பெரும்பான்மையானோர், பிடிபாடு குறைந்ததால் தை மாதத்தின் பின் களங்கண்டித் தொழிலை நிறுத்தி விட்டனர். இவ்வாறு கணவாய்த் தொழில் படுத்துப்போனதற்கு நேரடிக் காரணமாக தொழிலாளர்கள் இந்திய இழுவைப்படகுகளையே குற்றம் கூறுகின்றனர். எழுவைதீவுக்கும், காரைதீவுக்கும் இடைப்பட்ட கடற்பிரதேசத்தில் உள்ள கடற்தாளைக் காடுகளிலும், சாட்டாமாறுப் புதர்களிலும் கணவாய்கள் முட்டையிடுகின்றன. ஐப்பசி மாதத்தில் தொடங்கும் வாடைக்காற்று காலத்தில் ஏற்படும் நீரோட்டத்தால் முட்டைகள் தீவுகளுக்கும் ஊர்காவற்றுறை தீவுக்கும் இடைப்பட்ட குடாவுக்குள் அடித்துச் செல்லப்படுகின்றன. அவை மேற்கூறிய கிராமங்களில் களப்பிரதேசத்தை அடைந்து அங்கு குஞ்சு பொரிக்கின்றன. அவை வளர்ந்து சில மாதங்களில் மீனவர்களால் பிடிக்கப்படுகிறது. ஆனால் இழுவைப்படகுகள் முட்டையிடும் கணவாய்களை வகை தொகையின்றி பிடிப்பதுடன், அவைகளின் வாழ்வாதாரமான கடற்தாளைகளையும், சாட்டாமாறுகளையும் அழிப்பதனால் கணவாய்களின் உற்பத்தி குறைகின்றது. இது அப்பகுதி மீனவர் கருத்து மட்டுமல்ல, இது செனகல் நாட்டின் கரையோரம் நடாத்தப்பட் ஆய்வுகளிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

உதாரணம் 2 .

சிறையா இன மீன்கள் கரையோரம் பிறந்து கடற்தாளைகளைக் கொண்ட ஒருபாக ஆழத்திற்கு மேற்பட்ட பிரதேசத்தில் சீவிக்கும். இழுவைப்படகுகள் இதன் வாழ்விடமான கடற்தாளைகளை அழித்து அவற்றிடையே மீன் பிடிக்கின்ற போது, நீரின் மேல்தளத்தில் நீந்தக் கூடிய தன்மை கொண்ட சிறையாக்கள் இழுவை மடியில் இருந்து தப்பித்து விடும். ஆனால் அவற்றின் வாழ்விடம் அழிக்கப்படும் போது அவை வேறு பகுதிக்கு புலம் பெயரும் அல்லது கரையோரமாக ஒதுங்கி இறந்து விடும். செட்டிபுலம், துறையூர், கெட்டில், நாவாந்துறை, சாவற்கட்டு போன்ற கிராமத்து தொழிலாளர்கள் பல பரம்பரையாக வேலணைக்கும் புங்குடுதீவுக்கும் இடைப்பட்ட பகுதியில், அதாவது வேலணையையும் புங்குடுதீவையும் இணைக்கும் பாலதிற்கு கிழக்காக உள்ள கடற்பரப்பில் விடுவலை, மற்றும் சிறையாவலை பாவித்து சிறையா மீன் பிடிப்பது வழக்கம். இந்திய இழுவைப்படகுகள் சிறையாக்களின் வாழ்விடமாமான வேலணைக்கும் புங்குடுதீவுக்கும் இடையிலுள்ள கடற்பரப்பில் நாசகார மீன்பிடியில் ஈடுபடுவதனால் தற்போது விடுவலை தொழில் முற்றாக அழிந்து விட்டது. சிறையாவலை சிலரால் பாவிக்கப்பட்டாலும் முன்னைய காலம் போல் பெரிய அளவில் உழைக்க முடியாதுள்ளது என அப்பகுதி கடற்தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உதாரணம் 3.

காரைதீவு கற்கோவளம் தொடக்கம் பருத்தித்துறை வரையான பகுதியின் கடலடித்தளம் சிங்கறால் வளர்ச்சிகான சாதகமான தன்மை கொண்ட பகுதி. இப்பகுதியில் சாட்டாமாறும் முருகைகளும் அதிகமாவுள்ளது. இப்பிரதேச முருகைகள் பதுங்கி இருக்கும் பொந்துகளை கொண்டதனால் சிங்கறால்கள் உற்பத்தியாகும் இடமாக அமைந்துள்ளது. அதேபோல் மன்னார் விடத்தல்தீவு, இலுப்பைக் கடவை, வெள்ளாம்குளம், நாச்சிக்குடா ஊடாக கவுதாரிமுனை வரைக்குமான கடற்பிரதேசமும் சிங்கறால் உற்பத்தியாகும் இடங்களாகும்.

சிங்கறால் ஏற்றுமதி இலங்கையில் எண்பதுகளிலேயே ஆரம்பித்தது. மீன்பிடி குறைந்த சோழகக்காற்று வீசும் காலத்தில் தொழிலாளிகள் வள்ளங்களில் சென்று நீரில் குழிபுகுந்து கைகளாலேயே இந்த சிங்கறால்களை பிடிப்பர். ஒரு றால் பிடித்தால்ஒருநாள் சீவியதிற்கு காணும் என்பார்கள் இப்பிரதேசத்தில் தொழில் செய்யும் தொழிலாளிகள். இன்று சிங்கறால் இந்தியாவிலிருந்தும் சிங்கபூர்,மலேசியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் பல கோடி அந்நிய செலவாணிகளை இந்தியர்கள் சம்பாதிகின்றனர். ஆனால் சிங்கறால் உற்பத்தியாகும் கடல் பிரதேசம் பெருமளவில் இலங்கையின் வட பகுதியிலேயே அமைந்துள்ளது.

இதனாலேயே மீனை விட பெறுமதி வாய்ந்த சிங்கறாலைக் குறிவைத்து பல நூற்றுக்கணக்கான இந்திய நாசகார இழுவைப்படகுகள் மேற்கூறிய பிரதேசங்களில் இழுவைமடியை உபயோகித்து சிங்கரால்களைப் பிடிக்கின்றனர். ஏற்றுமதிக்கு தகுதியான சிங்கரால்கள் உயிருடன் பிடிக்கப்படல் வேண்டும். ஆகவே கையால் பிடிப்பது அல்லது இழுவைமடி மூலம் பிடிப்பது போன்ற இரண்டு முறைகளே உண்டு. வலை மூலம் முயன்றால் கால்கள் உடைந்து அவை இறந்து விடும். இலங்கையில் இழுவைப்படகு தடைசெய்யப்பட்டுள்ளதனால் தொழிலாளிகள் கைகளாலேயே சிங்கறால் பிடிப்பது வழக்கம். இது இயற்கை சார்ந்து, கடல்வளதிற்கு பங்கமேற்படாமல் செய்யப்படும் தொழிலாகும். எல்லை கடந்து இந்தியர்கள் இழுவைமடி மூலம் சிங்கறால் பிடிக்கும் போது பல லட்சம் பெறுமதியான ரால்களை பிடிக்கின்றனர். அதேவேளை தான் பிடித்திருக்கும் மரக்கொப்பை வெட்டுபவனைப் போல கண்மூடித்தனமான சிங்கறால் பிடி மூலம் அதன் எதிர்கால உற்பத்தியையும் அதற்கு ஆதரமான கடலடித்தள தாவரவியலையும் முருகைகளையும் அழிகின்றனர் . இழுவை மடிமூலம் பருத்தித்துறை முனைப் பிரதேசதில் சிங்கறால் பிடித்த இந்திய இழுவைப்படகுகளையே அப்பகுதி தொழிலாளிகள் சிறைப்பிடித்தனர் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டியதொன்று.

உதாரணம் 4 :

மேற்கண்ட உதாரணத்தில் கூறியது போல சிங்கறால் பிடிப்பதற்காக இந்திய இழுவைப்படகுகள் இலங்கையின் வடகரையில் கரையோரத்தில் மடியிழுப்பதால் பாதிப்படைவது சிங்கறால் வளர்ச்சியும், கடலடித்தள தாவரவியல் மட்டுமல்ல, இந்தியர்களின் மடியிழுப்பால் பாதிக்கப்படுபவர்கள் ஐப்பசி மாதத்திலிருந்து சித்திரை வரையான மாரிக்கும், வசந்தத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் கரையோரம் வரும் கட்டா, பாரை, சூபாரை, கருங்கண்ணிப்பாரை, காலை, அறக்குளா, போன்ற பதினைந்து வகை இன மீன்களை நம்பி அறக்கொட்டியான்வலை பாவித்து தொழிலில்ஈடுபடும் கிட்டத்தட்ட

15ம் பக்கம்

# மண்டேலாவின் தென்னாபிரிக்காவும் மண்டேலா இல்லாத தென்னாபிரிக்காவும்

தென்னாபிரிக்காவின்முதலாவது கறுப்பின ஜனாதிபதியும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸின் பெருமதிப்புக்குரிய தலைவர்களில் ஒருவருமான நெல்சன் மண்டேலா 95 வருடங்கள் வாழ்ந்து டிசம்பர் 5ஆம் திகதி காலமானார். தென்னாபிரிக்காவில் பிறப்பிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் 58 வயதாக இருப்பதுடன், உலகில் குறைந்த ஆயுட்காலத்தைக் கொண்ட மக்கள் வாழும் நாடுகளில் தென்னாபிரிக்காவும் ஒன்று. மண்டேலாவின் மரணத்திற்குப் பின்னர் நிறபேதத்திற்கும் இனவாதத்திற்கும் எதிரான போராட்டத்தின் அடையாளமாக அவரைத் தூக்கிப்பிடிக்கும் நடவடிக்கைகளை உலக ஏகாதிபத்தியமும் அடிவருடிப் பத்திரிகைகளும் ஆரம்பித்துள்ளதுடன் அவரது புகழ்பாடவும் தொடங்கியுள்ளன.

டிசம்பர் 15ஆம் திகதி நடைபெற்ற மண்டேலாவின் இறுதிச் சடங்கில் பராக் ஒபாமா, பில் கிளின்டன், மற்றும் ஜோர்ஜ் புஸ் ஆகிய ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதிகளும் கலந்து கொண்டிருந்தனர். அவருடைய மரணச் செய்தியை கேள்விப்பட்டவுடன் ஒபாமா,“இந்த மண்ணில் எங்களுடன் காலத்தைப் பகிர்ந்து கொண்ட, மிகவும் வற்புறுத்தக்கூடிய துணிவுமிக்க மனிதம்” என்பதாக அவரை அறிமுகப்படுத்தினார். ஐரோப்பிய ஒன்றியத்தின் அனைத்து நாடுகளும் தமது தேசியக் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்கவிட்டன. ஐக்கிய நாடுகள் சபையும் தனது கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிட்டது. அனைத்து ஏகாதிபத்திய அமைப்புகளும், தலைவர்களும் மண்டேலாவை பாராட்டுவது எதற்காக என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். கேந்திர நாடுகளின் தலைவர்கள் மட்டுமல்ல வளர்முக நாடுகளின் பிற்போக்குவாதிகளும் மண்டேலாவின் புகழ்பாடத் தொடங்கியுள்ளனர். உதாரணமாக இனவாதத்தை தனது ஆட்சிக்கான உபாயமார்க்கமாக வைத்துக் கொண்டிருக்கும் இலங்கையின் ஜனாதிபதி இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக தென்னாபிரிக்காவுக்குச் சென்றது மட்டுமன்றி இலங்கையில் இரு நாட்களை துக்கதினமாகவும் அறிவித்தார். அனைத்துவித பிற்போக்குவாதிகளும், வர்த்தகமயமாகியுள்ள ஊடகங்களும் மண்டேலாவை தூக்கி வைத்துப் புகழ்வதற்குக் காரணம், தென்னாபிரிக்காவின் சோஷலிஸப் புரட்சியை ஒடுக்குவதற்கு அவர் முழுப்பலத்தையும் பிரயோகித்தமை தான்.

மண்டேலா ஆற்றல்மிக்க துணிவுமிக்க நபர் என்பதில் சந்தேகம் கிடையாது. அன்று பிரித்தானியாவின் ஆட்சியின் கீழிருந்த தென்னாபிரிக்காவின் கேப் பிராந்தியத்தில் 1918 ஜுலை 18ஆம் திகதி மண்டேலா பிறந்தார். 1939இல் ஹாரே பல்கலைக்கழகத்துக்குச் சென்றதோடு, ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் எதிர்கால தலைவர்களில் ஒருவரான ஒலிவர் டெம்போவை அவர் அங்குதான் சந்தித்தார். டெம்போ அவருக்கு அரசியல் சம்பந்தமாக ஆர்வமூட்டியதுடன் அவருக்கு ஒரு தொழிலையும் தேடிக் கொடுத்தார். பிற்காலத்தில் மண்டேலா ஜொஹனஸ்பர்க் நகருக்குச் சென்று கறுப்பினத்தவர்களுக்கான அனுமதிச்சீட்டு இல்லாமலேயே சட்டவிரோதமான சுரங்கத் தொழிலாளியாக வேலை செய்தார். அவர் அங்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் இன்னொரு தலைவரான வால்டர் சிசிலுவை சந்தித்ததோடு,வெள்ளையர்களின் சட்டநிறுவனமொன்றில் மண்டேலாவுக்கு வேலையும் பெற்றுக் கொடுத்தது மாத்திரமல்லாது, விட்வோடர்ஸ் பல்கலைக் கழகத்தில் சட்டத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் வழிசமைத்துக் கொடுத்தார். 1943இல் ஆபிரிக்க காங்கிரஸில் சேர்ந்த மண்டேலா ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் இளைஞர் அமைப்பின் ஆரம்பகால தலைவராகவும் செயற்பட்டார்.

அங்கு தனது அரசியல் வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்தே தீவிர வலதுசாரியாக இருந்த மண்டேலா மார்க்ஸியவாதிகளின் எதிரியாக பிரபலமடைந்திருந்ததுடன், ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் இளைஞர் இயக்கத்திற்குள் இடதுசாரிகள் வலுப்பெறுவதற்கு தடையாக இருந்தவர் தான் மண்டேலா. 1950இல் தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியும் சம்பந்தப்பட்டு ஜொஹனஸ்பர்க் நகரில் நடைபெற்ற மேதினத்திற்கு சமாந்திரமாக வேலைநிறுத்தமொன்றும் நடந்தது. மண்டேலா அதனை கடுமையாக எதிர்த்தார். இந்தக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டங்களை சீர்குலைப்பதற்காக அவர் தனிப்பட்ட முறையில் பங்கெடுத்ததாக கூறப்படுகிறது. ஆனால், வேலைநிறுத்தம் கிராமப்புறங்களுக்கும் பரவி வெற்றியடைந்த பின்னர் பகிரங்கமாக இடதுசாரிகளை எதிர்ப்பதை நிறுத்திக் கொண்டார். இக்கால கட்டத்தில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸிற்குள் இடதுசாரிகளும் வலதுசாரிகளும் இணைந்து செயற்பட்டனர். தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சி இரு புரட்சிகரக் கட்டங்களாக பிரித்து முதல் கட்டத்தில் சுதந்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு தேசிய முதலாளித்துவத்தோடு கூட்டு சேர்வதும், சோஷலிஸத்தை இரண்டாம் கட்டத்திற்கு தள்ளிப்போடவுமான கருத்தாடலில் ஈடுபட்டது. 1956இல் காங்கிரஸின் “சுதந்திர பிரகடனம்” கம்யூனிஸக் கட்சியின் உறுப்பினரான ரஸ்டி பர்ன்ஸ்டீனால் தயாரிக்கப்பட்டது. அந்தப் பிரகடனத்தில் சுரங்கங்கள், காணி மற்றும் வங்கிகள் ஆகியவற்றை மக்கள்மயப்படுத்தும் திட்டமும் அடங்கியிருந்தது.அப்போது மண்டேலா உடனடியாக அந்தப் பிரகடனம் சோஷலிஸத்திற்கான அணுகுவழியல்ல என்று கூறியதுடன், வலதுசாரி கண்ணோட்டத்துடன் அந்தப் பிரகடனத்திற்கு உடன்பட்டார். மக்கள்மயப்படுத்துவதன் ஊடாக வெள்ளையர்களின் ஏகபோகத்தை உடைத்தெறிவது புதிய கறுப்பு முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சிக்கு பின்புலமாக இருக்கும் என்பதே அவரது கருத்தாக இருந்தது.இவ்வாறாக அவரது ஒட்டுமொத்த அரசியலும்ஆபிரிக்காவிற்குள் தேசியவாத முதலாளித்துவ கருத்தை நிலை நாட்டுவதையேஅடிப்படையாகக் கொண்டிருந்தது.

1961இல் தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சி மண்டேலாவின் மேல் வழக்கைத் தொடுத்தது. வழக்கில் குற்றவாளியாக்கப்பட்ட அவர் 1964இல் ஆயுட்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு ரொபென் தீவில் சிறைவைக்கப்பட்டார். வழக்கின்போது சாட்சியமளித்த மண்டேலா தான் கம்யூனிஸவாதியல்ல எனக் கூறினார். தனக்கு புரட்சியின் மீது நம்பிக்கை இல்லை என்றார். தனது நோக்கம் கறுப்பின முதலாளித்துவத்தை உருவாக்குவதே என்று கூறினார். எவ்வாறாயினும் அவர் சிறைத்தண்டனையிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

1980களில் நிறவெறி அரசியலுக்கு எதிராக மக்கள் எழுச்சி தீவிரமடைந்ததோடு, போராடும் இருந்ததோடு, அவருடைய மகளின் திருமண விழாவிற்கு உலகப் பிரசித்திபெற்ற கஸினோ சூதாடியான சோல் கர்ஸ்டன் அனுசரணை வழங்கியமையின் மூலம் அவரது உண்மையான முகம் வெளிச்சத்திற்கு வந்தது. உண்மையிலேயே அவர் செய்தது என்னவென்றால் “கறுப்பு முதலாளிகளை” உருவாக்கியதும், பாட்டாளி வர்க்கத்தை மேலும் மேலும் கீழுக்குத் தள்ளியதும்தான். தென்னாபிரிக்காவின் கறுப்பினத்தவர்கள் ஆட்சி அதிகாரத்தைப் பெற்று 20 வருடங்களின் பின்னரும் அவர்கள் பெற்ற விடுதலை என்ன? முதலாளிகளின் கூட்டத்திற்கு வெள்ளையர்களுக்கு மேலதிகமாக கறுப்பினத்தவர்கள் சேர்க்கப்பட்டார்கள். இன்று உலகில் ஒரு பில்லியன் டொலரை விட அதிக சொத்துக்களையுடைய உச்சியிலிருக்கும் செல்வந்தர்களின் பட்டியலில் 14 பேர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர்கள். நாட்டின் பொருளாதாரத்தில் 80 வீதத்தை மக்கட்தொகையில் 10 வீதம் பேர் உல்லாசமாக அனுபவிக்கும்போது பாட்டாளிக்கு நரகமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நாட்டின்

> “ அவரது ஆட்சிக்காலம் தென்னாபிரிக்கா முற்றாக வல்லாதிக்கவாதிகளின் பொருளாதார - அரசியல் தேவைகளுக்கு ஏற்ப முகாமைத்துவம் செய்யப்பட்ட காலமாக இருந்தது. ”

மாத்திரமே சிகிச்சை பெறுகின்றனர். கறுப்பினத்தவர்களுக்கு மண்டேலா பெற்றுக் கொடுத்த “விடுதலை” இதுதான்.

எப்படியிருந்தாலும் நெல்சன் மண்டேலாவின் மரணம் தென்னாபிரிக்க அரசியலில் ஒரு சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. நிவ்யோர்க் டைம் பத்திரிகை மண்டேலாவின் மரணச் செய்தியில் “அவரது மரணத்தோடு தென்னாபிரிக்காவின் ஆத்மீக கேந்திரம் மறைந்து விட்டது” என குறிப்பிட்டிருந்தது. 1990இற்கு முன்னர் வெள்ளை இனவெறி ஆட்சியினால் தொடுக்கப்பட்ட தேசிய அழுத்தம் பாட்டாளி வர்க்க மக்களுக்குள் தேசியவாதத்தை வளர்த்திருந்தது. வர்க்கப் பிரிவினைகள் மறைக்கப்பட்டு வெள்ளையர் கறுப்பர் என்ற பேதம் உச்சிக்கு வந்திருந்தது. தென்னாபிரிக்க கம்யூனிஸக் கட்சி புரட்சியை இரு கட்டங்களாக பிரித்தமை, முதலாளித்துவத்துடன் கூட்டணிக்குச் சென்றமை போன்ற மாக்ஸ்-லெனின்வாதமல்லாத நிலைக்குள் வீழ்ந்தது. அடக்குமுறையின் மூலம் கம்யூனிஸத் தலைவர்கள் கொலை செய்யப்பட்டமையும், முதலாளித்துவ தேசியவாதத்தின் சித்தாந்த நடவடிக்கையும் இந்த நிலைமையை மேலும் உக்கிரமடையச் செய்தது. காலங்காலமாக கறுப்பின பாட்டாளி வர்க்கத்தின் மீது முதலாளித்துவ தேசியவாதமே ஆதிக்கம் செலுத்தியது. நெல்சன் மண்டேலா அந்தக் கருத்தியலின் ஆன்மீகக் கேந்திரமாகும். கடந்த இரு தசாப்தங்களில் கறுப்பின ஆட்சிக்குள் உண்மையான எதிரி “கறுப்பரா” “முதலாளியா” என்ற பிரச்சினை ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னால் நிறுத்தப்பட்டுள்ளது.

2012இல் மரிகானாவின் பிளட்டினம் சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு, போலி கறுப்பின விடுதலையைப் பேசும் அரசாங்கத்தின் பொலிஸ் சுட்டதில் 34பேர் உயிரிழந்தனர். தென்னாபிரிக்கா பூராவும் கறுப்பு வெள்ளை பேதமில்லாத வர்க்கப் போராட்டம் வலுப்பெற்று மக்கள் மத்தியில் கம்யூனிஸக் கட்சி நிலைபெற்றுக் கொண்டிருந்தது. ஆபிரிக்க தேசியப் போராட்டம் சோஷலிஸப் புரட்சி வரை பயணிக்கும் ஆபத்தை வெற்றி பெறக்கூடிய ஒரே ஆயுதம் மண்டேலா என்பதை உணர்ந்த ஆட்சியாளர்கள் 1985இலிருந்து மண்டேலாவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தனர். பேச்சுவார்த்தையின் பிரதிபலனாக 1990 பெப்ரவரி மாதம் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார். அதேநேரம் தென்னாபிரிக்க கம்யூனிஸ கட்சியின் பொதுச் செயலாளர் கிரிஸ் ஹானி படுகொலை செய்யப்பட்டார். கிரிஸ் ஹானியின் படுகொலையோடு மண்டேலா சம்பந்தப்பட்டிருந்ததாக பிற்காலத்தில் அவரது மனைவி குற்றஞ்சாட்டியிருந்தார். எவ்வாறாயினும் பாரிய பிரச்சாரத்தோடு நடந்த மண்டேலாவின் விடுதலையுடனும் கிரிஸ் ஹானியின் கொலையுடனும் கம்யூனிஸக் கட்சி பலவீனமடைந்து காங்கிரஸிற்குள் வலதுசாரியம் வலுப்பெற்றது.

1994 தேர்தலில் 62வீத வாக்குகளைப் பெற்று தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அவர் பதவிக்கு வந்த கையோடு சர்வதேச நாணய நிதியம் 850 பில்லியன் டொலரை கடனாக வழங்கியதுடன், வல்லாதிக்க நாடுகள் மண்டேலாவின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கு தலையீடு செய்தன. வெள்ளையர்களின் கையிலிருந்த பொருளாதாரத்தின் அடிப்படைகளை கறுப்பினத்தவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக சட்டங்களை நிறைவேற்றிய மண்டேலா, சர்வதேச நிதிச் சொத்துக்களை பாதுகாப்பதற்காக விஷேட ஒதுக்கீடுகளை மேற்கொண்டார். அவரது ஆட்சிக்காலம் தென்னாபிரிக்கா முற்றாக வல்லாதிக்கவாதிகளின் பொருளாதார - அரசியல் தேவைகளுக்கு ஏற்ப முகாமைத்துவம் செய்யப்பட்ட காலமாக இருந்தது. வெளிநாட்டு முதலீட்டாளர்களை சந்தோசப்படுத்துவதற்காக தாங்கிக் தொழிற்சட்டங்களை தளர்த்துவதை தாங்கிக் கொள்ளுமாறும், தென்னாபிரிக்காவின் “அபிவிருத்திக்காக” இடுப்புப்பட்டியை இறுக்கிக் கொள்ளுமாறும் மக்களை கேட்டுக் கொண்டார். மண்டேலாவுக்கு நிதி மோசடி சம்பந்தமான குற்றச்சாட்டுக்களும் உண்டு. தென்னாபிரிக்காவில் பாரிய ஊடக வலையமைப்பு மண்டேலாவுக்கு சொந்தமாக



சனத்தொகையில் சரிபாதி, 50 வீதம்பேர் வறுமைக் கோட்டின் கீழேயே வசிக்கின்றனர். உழைக்கும் படையணியில் 25 வீதத்திற்கு தொழில் கிடையாது. ஏற்கனவே கூறியதைப் போன்று கல்வி மற்றும் சுகாதாரச் சேவைகள் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுவதோடு, பிறப்பிலிருந்து ஆயுட்காலம் 58 வயதாகும். உலகில் அதிகமான எய்ட்ஸ் நோயாளிகளைக் கொண்ட நாடாக தென்னாபிரிக்கா இருப்பதோடு, சனத்தொகையில் 12 வீதம் பேர் எய்ட்ஸ் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். 450,000 சிறுவர்கள் எய்ட்ஸ் நோயாளிகளாக உள்ளனர். சுகாதார சேவைகள் எந்தளவு பின்தங்கியிருக்கிறதென்றால் எய்ட்ஸ் நோயாளிகளில் 28 வீதம் பேர்

வருகிறது. மண்டேலாவின் மரணத்தோடு தென்னாபிரிக்காவின் முதலாளித்துவத்துடன் பிணைக்கப்பட்டிருந்த விலங்கு கழன்று விட்டது. ஆகவே, மண்டேலாவிற்குப் பின்னர் தென்னாபிரிக்காவின் தலைவிதி, அவ்விலங்கை அகற்றக் கூடிய ஆபிரிக்க பாட்டாளிகளின் கைகளுக்கு வரவேண்டும்.

முதலாளித்துவ ஆட்சியாளர்களும், முதலாளித்துவ ஊடகங்களும் மரணத்தை பற்றிய கவனத்தில் இருக்கும்போது, தெனாபிரிக்காவின் பாட்டாளி வர்க்கம் முதலாக ஒடுக்கப்பட்டவர்களின் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்தே நாங்கள் அவதானிப்புடன் இருக்கிறோம்.

# ஒரு மக்கள் விரோதி தோற்றால் வெல்வது இன்னொரு மக்கள் விரோதியே!!!

முதலாளித்துவ பாராளுமன்ற தேர்தல்கள் பணக்காரரையும், அதிகார வர்க்கத்தையும் பதவியில் வைத்திருப்பதற்கென்றே இருப்பவை. ஒரு மக்கள் விரோதி தேர்தலில் தோற்கடிக்கப்பட்டால் அந்த இடத்தில் வெல்வது மக்கள் அல்ல இன்னொரு மக்கள் விரோதியே. காலனிய நாடுகளின் ஏழை மக்களை வரிகளின் மூலம் கசக்கிப் பிழிந்து பட்டினிச் சாவிற்குத் தள்ளிய, தேச விடுதலைக்காக போரிட்ட தேசபக்தர்களை கொலை செய்த பிரித்தானிய பிரதமர்கள் பாராளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்ற ஜனநாயகக் காவலர்களே. இவர்களினது கொலை, கொள்ளைகளிற்கு ஒப்புதலும், சட்ட அதிகாரமும் கொடுத்த இந்த நாடாளுமன்ற முறைமை தான் ஜனநாயகத்தின் தொட்டில் என்று அவர்களினது காலனிய நாடுகளில் ஆட்டி விடப்பட்டது.

தமிழ்மொழி பேசுபவர்கள் என்ற ஒரே காரணத்திற்கு இலட்சக் கணக்கான மக்களைக் கொன்றவர்கள், இலங்கை மக்களின் வறுமைக்கு விடிவு வேண்டும் என்று குரல் கொடுத்தவர்களின் குரல்வளையை அறுத்து குருதிவெள்ளம் ஓட வைத்தவர்கள் எல்லாம் இந்த மக்கள் மன்றம் என்பதில் இருந்து கொண்டு தான் மக்களைக் கொன்று குவித்தார்கள். தமிழ்மக்களின் துயரங்களையும், அவலங்களையும் சொல்லிக் கொண்டு பதவியைப் பிடித்து விட்டு அந்த அவலங்களிற்கு காரணமானவர்களினுடனேயே கூட்டு வைத்த தமிழர் பிரதிநிதிகள் இந்த மன்றத்தில் தான் இருக்கிறார்கள். நூறுபேர் சேர்ந்து ஒரு பள்ளிவாசலை இடிக்கும் போது முப்படைகளையும் வைத்திருக்கும் அரசு வேடிக்கை பார்க்கும். அந்த அரசுடன் கூடிக் குலாவி பதவிச் சுகம் அனுபவித்துக் கொண்டு இருப்பார்கள் முஸ்லீம் மக்களின் பிரதிநிதிகள் என்பவர்கள். நவநீதம்பிள்ளை என்ற வயது முதிர்ந்த பெண்ணை மிகக் கேவலமாக பாலியல் ரீதியில் வசைபாடிய மேர்வின் சில்வா என்னும் மாண்பு மிகு மந்திரி போன்றவர்கள் தான் இந்தப் நாடாளுமன்றமுறை நமக்கு வழங்கும் மக்கள் பிரதிநிதிகள்.

நாடாளுமன்ற நாற்காலிகளிற்காக இந்திய கம்யுனிஸ்ட் கட்சிகள் இந்திராகாந்தியின் அடக்கு முறைகளிற்கும், அதிகார அத்துமீறல்களிற்கும் துணைபோயினர். கேரளத்திலும், மேற்கு வங்காளத்திலும் கம்யூனிஸ்ட் கட்சி சட்டசபைத் தேர்தல்களில் வெற்றி பெற்றது. ஆனால் சிகிச்சை வெற்றி, நோயாளி மரணம் என்பது போல் தன் கொள்கைகளை கை விட்டு ஊழலும், பிற்போக்குத்தனமும், அதிகார வெறியும் கொண்ட கட்சியாக அது சிதைந்து போனது. தேர்தல்களில் ஒன்று, இரண்டு இடங்களைப் பெறுவதற்காக தமிழ்நாட்டு கம்யூனிஸ்ட்டு கட்சிகள் கருணாநிதியிடமும், ஜெயலலிதாவிடமும் கையேந்தும் நிலைக்கு போயிருக்கிறார்கள்.

புரட்சியும், சமத்துவமும் பேசிய பொதுவுடமைக் கட்சிகளே தேர்தல் பாதைக்குப் போய் சீரழிந்து போகும் போது மற்றக் கட்சிகளைப் பற்றி சொல்லவே தேவையில்லை. இந்தியாவிற்கு எதில் முதலிடம் கிடைகிறதோ இல்லையோ உலகிலேயே ஊழலிற்கு முதலிடம் என்று எடுத்துக் கொடுத்தவர்கள் இந்திய அரசியல்வாதிகள். அவர்கள் அடிக்கும் கொள்ளைகளின் எண்ணிக்கையை அளவிட எண்களே போதாது. காஸ்மீர், அசாம், நாகலாந்து என்று தேசிய இனங்களை ஒடுக்குவது. இயற்கையை அன்னிய நாடுகளிற்கும், பெருமுதலாளிகளிற்கும் விற்பதற்கு எதிராக போராடும் பழங்குடி மக்களையும், மாவோயிஸ்ட் போராளிகளையும் படுகொலை செய்வது என்று அவர்கள் செய்யும் கொலைகளும் எண்ணில் அடங்காதவை.

காங்கிஸ், பாரதிய ஜனதா கட்சி, ஜனதா கட்சி, பாராளுமன்ற பாதையை ஏற்றுக் கொண்ட கம்யூனிஸ்ட்டு கட்சிகள், திராவிட முன்னேற்றக் கழகம், அ.தி.மு.க என்று அத்தனை கட்சிகளும் நாட்டை விற்பதற்கும், நாட்டு மக்களை கொல்வதற்கும் தயங்காதவர்கள். இந்துத்துவம், மதச் சார்பின்மை, பிற்பட்ட மக்களிற்காக போராடுபவர்கள் என்று தங்களை வேறுபடுத்திக் காட்டும் இவர்கள் மக்களை ஒடுக்குவதில் எந்த விதமான வித்தியாசங்களும் இல்லாதவர்கள். இலங்கைத் தமிழ்மக்களை கொன்று குவித்த பேரினவாத அரசுகளிற்கு காங்கிரஸ் கட்சியும், பாரதிய ஜனதா கட்சியும் வழங்கிய உதவிகள் எந்த விதத்திலும் வேறுபட்டவைகள் அல்ல.

ஹிட்லர், முசோலினி போன்ற இன, மதவெறி கொலைகாரர்களை தமது வழிகாட்டிகளாக போற்றும் இந்துமத வெறிக் கட்சியான பாரதிய ஜனதா கட்சி மதக் கலவரங்களை தூண்டுவதன் மூலம் மக்களைப் பிரித்து அரசியல் லாபம் அடைகிறது. முஸ்லீம், கிறீஸ்தவ மக்களை படுகொலை செய்து விட்டு இந்து மதத்தின் பகைவரை, இந்தியாவை பிரிக்க நினைப்பவரை, முஸ்லீம் பயங்கரவாதிகளை அழிப்பதாக நியாயம் கற்பிக்கிறது. குஜராத்தில் நரேந்திரமோடியின் தலைமையில் நடந்த முஸ்லீம் மதப் படுகொலைகளிற்குப் பிறகு அம் மாநிலத்தில் மோடி மறுபடி வெற்றி பெற்றதனால் மோடியை பிரதமர் வேட்பாளராக்கி ஆட்சியை அடைய நினைக்கிறது.

ஜேர்மனியின் நாசிக்கட்சி, ஆப்கானிஸ்தானின் தலிபான்கள், இலங்கையின் பௌத்த பேரினவாதக் கட்சிகள் என்பன போன்று கொலைவெறி கொண்ட இக் கட்சியுடன் அ.தி.மு.கட்சி, தி.மு.க போன்றவை ஏற்கனவே கூட்டு வைத்திருந்தன. இம் முறையும் திராவிடம், பகுத்தறிவு, மதச் சார்பின்மை என்பவற்றிற்கு விஞ்ஞான விளக்கங்கள் கொடுத்துவிட்டு இந்த பிழைப்புவாதக் கட்சிகளில் ஒன்று கூட்டு வைக்கக் கூடும். பணத்திற்காகவும், அதிகாரத்திற்காகவும் எதையும் செய்ய ஆயத்தமாயிருக்கும் இவர்களிற்கு ஆயிரம், ஆயிரம் தோழர்கள். மதங்களிற்கு எதிராகவும், பகுத்தறிவிற்காகவும் போராடிய மண்ணில் மதவாதக் கட்சியின் கூலிப் படையாவதிற்கு எந்தவித வெட்கமும் கிடையாது.

தமிழ்த் தேசியம், பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் நலன்கள், ஈழவிடுதலை ஆதரவு என்று வாயளவில் பேசும் வை.கோபாலசாமி, ராமதாசு போன்றோரும் பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டு வைக்க துடிக்கிறார்கள். இவர்களை பின்தொடர்ந்து தமிழ் நாட்டிலும், புலம்பெயர் நாடுகளிலும் எந்த விதமான அரசியல் அறிவும் அற்ற சிலகுழுக்கள் பா.ஜ.கட்சியை ஆதரிப்பதன் மூலம், தொடர்பு வைப்பதன் மூலம் ஈழமக்களின் துயரங்களிற்கு தீர்வு காணலாம் என்று பரப்புரை செய்கிறார்கள். இவர்களது முந்தைய ஆட்சிக் காலங்களில் பேரினவாத அரசுகளுடன் வைத்திருந்த உறவுகள் தமிழ் மக்களிற்கு எதிராகவே இருந்ததை மறைத்துவிட்டு மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

தற்போது ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கட்சியின் கணக்கிட முடியாத ஊழல்கள், உணவுப் பொருட்களின் விலையேற்றம், தமக்கு கிடைக்கும் லஞ்சங்களிற்காகவும், பங்குகளிற்காகவும் உலக முதலாளிகளிற்கு இந்தியச் சந்தையை கொள்ளையடிக்கத் திறந்து விட்டமை, கனிம வளங்களை சுரண்டுவதற்காக காடுகளையும், மலைகளையும் அழிப்பது போன்றவை மூலம் மக்களிடையே ஏற்பட்டுள்ள கோபத்தையும், எதிர்ப்பையும் பயன்படுத்தி பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வரக்கூடும்.

அப்படி வந்தால் அடுத்த ஐந்து வருடங்களிற்கு காங்கிரசின் இடத்தில் பாரதிய ஜனதாக் கட்சி ஊழல் செய்யும். தேசபக்திக்கு மொத்த உரிமையாளர்கள் என்று சொல்லிக் கொண்டு அன்னிய நாட்டு முதலாளிகளிற்கு நாட்டை விற்பதும் தொடரும்.

இதில், மக்கள் தமக்கான அரசை தாமே நிறுவுவதன் மூலமே இக் கொலைகாரர்களையும், கொள்ளைக்காரர்களையும் தூக்கி எறிய முடியும். அது நடக்காதவரை வெல்வது காங்கிரஸ், பாரதிய ஜனதாக் கட்சி என்று மாறுபடலாம். ஆனால் தோற்பது என்றைக்கும் மக்களாகவே இருக்கும்.

> “புரட்சியும், சமத்துவமும் பேசிய பொதுவுடமைக் கட்சிகளே தேர்தல் பாதைக்குப் போய் சீரழிந்து போகும் போது...”



3ம் பக்கத்திலிருந்து **CHOGM மக்களுக்கு**

பொதுநலவாய நாடுகள் மாநாடு என்பது பிரித்தானியாவின் காலனி ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகள் என்ற பெருமையை நினைந்து கொண்டாடும் ஒன்றுகூடலே தவிர தேசியப் பெருமை என்பதே கிடையாது. கம்பியா போன்ற நாடுகள் கொமன்வெல்த் அமைப்பில் அங்கம் கொள்வதை மறுத்து வெளியேறியது. அதற்கான காரணமாக தங்களது நாடு காலனிய நாடாக இருந்த தாழ்மையினை அடிமைத்தனத்தைக் கொண்டாடி மகிழ விரும்பவில்லை என்பதாக அறிவித்துக் கொண்டார்கள். இந்த உண்மையினை அரசாங்கம் கொமன்வெல்த் அலங்காரங்கள் மூலம் மறைக்க முயன்றது.

மறுபுறத்தில் மாநாட்டின் மூலம் ஜனநாயகத்தினை வென்று புனரமைத்துவிடலாம் என“அப்பாவிகனவு”களில் மூழ்கியிருந்த தாராளவாதிகளின் கனவுகள் கழுவிச் செல்லப்பட்டுவிட்டன. ஓடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் என்ற பார்வையில் தாராளவாதம் என்பது ஒருநூற்றாண்டு நகைச்சுவை. தாராளவாதம் உள்ளீடான உண்மையான பிரச்சனைகளை ஒருபளபளப்புப் பூச்சு கொண்டு மறைக்க மட்டுமே முடியும். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதனையும் தந்துவிடப் போவதில்லை.

இதுவே கொமன்வெல்த்துக்கும் பொருந்தும். பொருளாதாரச் சுமைகள் அடக்குமுறை, மோசடி என்பதையே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இது வழங்கும். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை இராஜதந்திரிகளுடனான தேநீர் விருந்துகளினூடு வென்றெடுக்கலாம் என்ற கனவில் மிதந்திருப்பவர்கள் மேல் எங்களால் அனுதாபம் மட்டுமேகொள்ளமுடியும்.

ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பது என்று வரும்போது நாங்கள் இராஜதந்திரிகளிடமோ, அரசநிர்வாகிகளிமோ கேட்டுப் பெறுவதல்ல அவை. ஒருங்கிணைந்த மக்கள் பலம் மற்றும் மக்களது இயக்கம் மூலம் மட்டுமே அவை வென்றெடுக்கப்படமுடியும்.

சமுதாய உரிமைகள் இந்த அல்லது அந்த மாநாடுகள் மூலம் வென்றெடுக்கப்பட முடியாதது.

சமூகம் தானே தனது உரிமைகளுக்காக போராளிகளாக பொதுநடவடிக்கைகளில் இறங்குவதின் மூலமே வெற்றிகொள்ளப்பட முடியும். அன்றைய பிரிட்டனின் காலனி நாடுகள் இன்று பொது நலவாய உறுப்புரிமை நாடுகள் என்றாகியுள்ள இந்நாடுகள் உலக நிலப்பரம்பலில் நான்கில் ஒருபங்கை நிரப்புகின்றன. உலக சனத்தொகையில் மூன்றில் ஒருபங்கு மக்கள் வாழும் இந்நாடுகளில், மக்களது உரிமைகள் வெல்லப்படுவது ஆசிய ஆபிரிக்க அமெரிக்க கண்டங்களில் ஒடுக்கப்பட்டோராக இருக்கும் மக்களது ஐக்கியப்பட்ட ஒருங்கிணைவுகள் மூலம் மட்டும் தான் முடியுமே தவிர எந்த புதியவகை கட்சிகளாலோ தலைவர்களாலோ அல்ல.

ஒரு உண்மை வெற்றிக்கான பாதை என்பது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை கடைப்பிடிப்பதில் இருக்கின்றதேயொழிய ஆள்பவர்களின் மாநாடுகளின் மூலம் அல்ல. அத்தோடு சர்வதேச நல்லுறவுகளை மறுத்து தனிமைப்படுத்தும் கொள்கைகள் மூலமும் அல்ல.

6ம் பக்கத்திலிருந்து **மனித உரிமை தினத்திலே**

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தாலும் அப்படியான மனிதர்களுக்கு இந்த முதலாளித்துவ அரசாங்கம் பயப்படுகிறது. ஆகவேதான் அவர்களை கடத்திச் சென்று கொலை செய்யப்பார்க்கிறது. நான் ஏற்கனவே சொன்னதைப் போன்று இது ஜனநாயத்திற்கும் அப்பால் சென்ற ஒருபிரச்சினை. முதலாளித்துவமுறையில் இந்தப் பிரச்சினைக்கு பதில் கிடைக்காவிட்டால், அதற்கு ஒரே பதில்தான் இருக்கிறது. அதாவது அவர்களைக் கொன்றுவிடவேண்டும். ஆகவே, முதலாளித்துவமுறை இருக்கும் வரை இந்த அடக்குமுறை அப்படியே இருக்கும். இன்று மனித உரிமைகள் தினம், மக்களின் உரிமைகளுக்கான போராட்டமொன்று இருக்கின்றது. இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக, இராணுவ சர்வாதிகாரத்திற்கு எதிராக மக்கள் திரளாக போராடும் போது அடக்குமுறை இயந்திரத்தை கொஞ்சம் நிறுத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம். வெளிப்படையான ஜனநாயகமொன்றுகிடையாது. ஆகவே,அதைப்பற்றிநாங்கள் பேசுவோம். அப்படி பேசிக்கொண்டே இருப்பதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை. ஆனாலும் அதைப்பற்றி பேசுவதும் இந்த சிஸ்டத்திற்குள் ஒரு தொழிலாகத்தான் இருக்கிறது.

மூன்று வேளை சாப்பாட்டையும் பூர்த்திசெய்யக் கூடிய நல்ல தொழில். ஆகவே முதலாளித்துவத்தை கவிழ்க்க முயற்சி செய்யாமல், முதலாளித்துவமுறைக்குள் மனிதர்களின் உரிமைகள், பிரச்சினைகள் சம்பந்தமாக, ஜனநாயகம் சம்பந்தமாக பேசிப் பேசியே இந்த முதலாளித்துவத்திற்குள் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்க முடியும். அது வாழ்வதற்கான நல்லதொழில். பட்டினி கிடக்காமல் உண்டு குடித்து உல்லாசமாக இருக்க முடியும். அடுத்த விடயம் தான், இந்த முதலாளித்துவம் நெருக்கடிக்குள் தள்ளப்படும்போது, ராஜபக்ஷ ாக்களைப் போன்று சமாளிக்க முடியாத நிலை வரும்போது சிஸ்டத்தை நாசமாக்கும் நிலை வரும்போது இராணுவம் இதற்குள் நுழைந்து இந்த உருக்குலைந்த வண்டிக்கு வேறொரு ஓட்டுநரை தெரிவு செய்யப்பார்க்கிறது. ஆகவே ஓட்டுநரை தெரிவு செய்வதற்குப் பதிலாக சிஸ்டத்தையே மாற்றியமைக்கவேண்டும். அதற்காகத்தான் லலித் குகன் பாடுபட்டார்கள். வடக்கிற்கும் தெற்கிற்கும் இந்தச் செய்தியை எடுத்துச் செல்லும் பயணத்தின்போதே அவர்கள் கடத்தப்பட்டார்கள். அவர்கள் பயணித்த பாதை ஒடுக்கப்பட்டவர்களின் பாதை! பாட்டாளிவர்க்கத்தின் பாதை! சமத்துவத்திற்கானபாதை! சிஸ்டத்தை மாற்றியமைக்கும் பாதை! முதலாளித்து வசர்வாதிகாரத்திற்கு சாவுமணியடிக்கும் பாதை! இந்த மனித உரிமைதினத்திலே அந்தப் பயணப் பாதையில் செல்ல நாங்கள் உறுதிகொள்வோம்.

11ம் பக்கத்திலிருந்து **சிவன் விடு...**

இது தான் இயங்கியலும் கூட. இதே போல் ஆட்சி உலகெங்கும் வந்தால் பிறகு அபிசேகப் பிரச்சினைகளும் முடிந்து விடும். பால்பிரச்சினைகளும் முடிந்துவிடும்.

பக்தா... நாமெல்லாம் சும்மாய் இருக்கிறம் எண்டு மட்டும் யோசித்து விடாதே.. எத்தனை காலத்துக்குத் தான் இந்த ஒரே தேவாரங்களையும் திருவாசகங்களையும் கேட்டுக் கொண்டிருக்க முடியும். திரும்பத் திரும்பக் கேட்டு புளிச்சுப் போச்சு. ஏன் இந்தப் புலம்பெயர் தேசத்திலேயும் வந்து உந்தப் புளிச்சுப் போன அதே தேவாரங்களைத் தானே பாடுறையள். ஒரு காதுக்கினிமையாய் எங்கேயாவது பாடுறையளே... அது தான் நாங்களும், இப்படி இடைக்கிடை சண்டைகளும் ஏற்படுத்தினா தான் எங்களுக்கும் பொழுது போகும்.

இப்படிச் சண்டைகள் வருகிற போது தான் மக்களும் யார் யார் எங்கே நிக்கிறார்கள் என்பதை இனம் கண்டு கொள்ளுவார்கள். இப்ப பார்த்தையள் தானே. இந்தப் போர் என்று ஒன்று வந்ததால் எத்தனை பேர் தங்கடை வயித்தையும் வாயையும் நிரப்பி தங்கடை சொந்த வாழ்க்கையை அல்லவா மேம்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். போரெண்டு போய் தங்களுடைய வாழ்வைத் துலைத்த இளைஞர்களும் யுவதிகளும் ஒருநேர உணவுக்கே கஸ்ரப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவர்களை வைத்துக் கொண்டு இந்தப் புலம்பெயர் தேசத்திலே எத்தனை திருவிழாக்களையும் எத்தனை கூத்துக்களையும் நடாத்திக் கொண்டிருக்கினம்.

மக்கள் என்ற ஒரு விடையம் இருக்கு என்பதை மறந்தே போய் விட்டார்கள் பக்தா. பக்தா இது தான் சரியான நேரம். தமிழ் சிங்களம் என்ற பேதங்களைக் கலைந்து எல்லோரும் ஒன்று சேருங்கள்.

ஆற்றல் மிகு கரங்களிலே ஆயுதம் ஏந்துதலே மாற்றத்துக்கான வழி என்ற கொள்கையைத் தான் நாங்களும் ஏற்றுக் கொண்டவர்கள், இதோ பார் அம்மன் கையில் வாள், முருகன் கையில் வேல், பார் எங்கள் ஒவ்வொருவர் கையிலேயும் ஒவ்வொரு ஆயுதம். எங்களில் யார் கையில் ஆயுதம் இல்லை.

இந்தா ஏற்றுக் கொள் பக்தா, என்று தன் சூலாயுதத்தை எடுத்து வேகமாய் வீச படையப்பா படத்திலே ரஜனி மாட்டை நிறுத்த வேலை எறிந்தது போல் அது என் முன்னே வந்து குத்தி நின்றது.

நான் எழுந்து நின்று சூலாயுதத்தை எடுத்து உயர்த்த எல்லாத் தெய்வங்களும் எழுந்து நின்று தங்கள் தங்கள் கைகளிலே உள்ள ஆயுதங்களையெடுத்து ஆரவாரம் செய்தார்கள்.

ஒரு மிருதுவான கையொன்று முதுகிலே வந்து தட்டி பிளேன் இறங்கப் போகுது பெல்ற்றை இறுக்கிப் போட்டுக் கொள் என்று சொல்லியபடியே விலகிச் சென்றது.

பிளேன் தரைநோக்கி கீழே பறந்து கொண்டிருந்தது.

முற்றும்

5ம் பக்கத்திலிருந்து **மனித உழைப்...**

சுரண்டல் என்று கூறுகின்றோம். அதாவது உழைப்பவன் தன் உழைப்பின் பயனை அடைய முடியாத வண்ணம், உழைப்பு சுரண்டப்படுகின்றது.

உழைப்பவன் தன் உழைப்பை, தனது நுகர்வாக கொள்ள முடியாத வண்ணம் தனியுடமை காணப்படுகின்றது. அதாவது இயற்கையிலான உழைப்புச் சாதனங்களை உழைப்பவனுக்கு இல்லாதாக்குவதன் மூலம், உழைப்பின் மீதான நுகர்வை உழைப்பவனுக்கு மறுத்துவிடுகின்ற சமூக அமைப்பாக இருக்கின்றது. நிலம், நீர் தொடங்கி இயற்கையின் மூலங்கள் அனைத்தையும் தனிச் சொத்துடமையாக்கி வருகின்றது. இதன் மேல் உழைப்பை செலுத்த முடியாத வண்ணம், உழைப்பவனுக்கு உழைப்பின் சாதனைகளை மறுப்பதன் மூலம், உழைப்பை கட்டாயமாக விற்குமாறு மனிதனை நிர்பந்திக்கின்றது. உழைத்து வாழ இயற்கை இல்லாததால், உயிர் வாழ்வதற்காக உழைப்பை விற்க வேண்டிய நிலைக்கு மனித இனம் தாழ்த்தப்பட்டு இருக்கின்றது.

இயற்கையை தனிச் சொத்தாக்குகின்றதும், அதை தனித் சொத்துடமையாக்கி குவிக்கின்ற செயற்பாடுகளின் ஏற்பட்ட பாய்ச்சல்களே, வெவ்வேறு சமூக அமைப்பு முறைகளாகியது. தொடரும் தனிச் சொத்துடமையாக்கமும், சொத்துடமைக் குவிப்பின் பொதுச் சாரமும், உழைப்புச் சாதனங்களை உழைக்கும் மனிதனுக்கு கிடைக்காத வண்ணம் செய்கின்றது. இதன் மூலம் மனித உழைப்பும் விற்பனைப் பொருளாகி, தனியுடமையாக்கிவிடுகின்றது. பாலியல் ரீதியாக உடலை விற்பது போல், உழைப்பை விற்குமாறு மனித இனத்தை தனியுடமை கோருகின்றது. இதன் மூலம் மனிதன் தன் தேவைக்காக உழைப்பில் ஈடுபடுவதை அன்னியமாக்கி, உழைப்பை தனியுடமையாக்கிவிடுகின்றனர். உழைப்பு உழைப்பவனுக்கு சொந்தமல்ல, மாறாக இயற்கை சார்ந்த உழைப்பு சாதனங்களை கொண்டுள்ளவனுக்கு உழைப்பு சொந்தமாகி விடுகின்றது. அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, நவீன சாதனங்கள் ... என மனித வாழ்க்கையைச் சுற்றிய எந்த முகமூடிக்கும் பின்னும் நடந்தேறுவது, உழைப்பதற்கான இயற்கை சாதனங்களை உழைப்பவனிடம் இருந்து தனியுடமையாக்குவது தான். தொடர்ந்து தனித் சொத்துடமையாக்குகின்ற செயற்பாடுகள் மூலம், உழைப்பில் இருந்து மனிதனை அன்னியமாக்கி அவனது உழைப்பை வாங்குவது தான் தனிவுடமை அமைப்பு முறையின் சாரம். மனித உழைப்பை உறிஞ்சிக் கொழுப்பதன் மூலம், உழைப்பின் சாதனங்களை உழைப்பவனுக்கு கிடைக்காத வண்ணம், உழைப்பில் இருந்து மனிதனை அன்னியமாக்குவது தான் தனிவுடமை அமைப்பு முறை.

உழைப்பில் ஈடுபடும் மனிதனில் இருந்து உழைப்பு பிரிக்கப்பட, மனித உடல் கழிவுகளாக்கப்படுகின்றது. கழிவாகும் தன் உடல் மீதான உரிமையைக் கொண்டு வாழ்தலே, தனியுடமைச் சமூக அமைப்பு முறைமையின் உள்ளடக்கமாகும். பாலியல் ரீதியாக உடலை விற்கும் போது எப்படி உடலை பிறர் நுகருகின்றனரோ, அப்படித்தான் உழைப்பை விற்பவன் தன் உழைப்பை நுகர்வதில்லை. இங்கு இரு செயற்பாட்டிலும் விருப்பார்ந்த தன் சுய செயற்பாடாகவோ, தன் நுகர்வாகவோ இருப்பதில்லை. சந்தைப் பொருளாக, உயிர் வாழ்வதற்கான நிர்ப்பந்தமே இந்தச் செயலைத் தூண்டுகின்றது.

மறுதலையாக உழைப்புச் சாதனம் உழைத்து வாழும் மக்களுக்கு கிடைத்தால் என்ன நடக்கும். உழைப்பை யாரும் சுரண்ட முடியாது. ஆக இங்கு தனியுடமைக்கு இடமில்லை. அதாவது உழைப்புச் சாதனங்கள் பொதுவாக இருக்கும் போது, எவரும் உழைப்பைச் சுரண்ட முடியாது. அனைவரும் உழைத்து வாழவேண்டும். இதற்கு மாறாக உழைப்பு சாதனங்களை வைத்திருப்பவனிடம் உழைப்பை விற்கவேண்டிய நிர்ப்பந்தம் என்பது தனியுடமையின் விளைவாகும். இதுவே மனிதனை மனிதனின் எதிரியாக மாற்றியிருக்கின்றது.

ஆக தனியுடமை அமைப்பில் உழைப்பைச் சுரண்டும் செயற்பாடு தான், மனிதனை மனிதனின் எதிரியாக்குகின்றது. இதனால் உழைப்பு சார்ந்த மனிதனின் சமூக உணர்வு, உழைப்பை சுரண்டி வாழும் மனிதனிடம் இருப்பதில்லை. இருவேறு சமூக உணர்வு உருவாகின்றது. உழைப்பில் இருந்து உருவான மனிதனின் சமூக உணர்வாக்கத்தை பயன்படுத்திச் சுரண்டும் அதேநேரம், உழைப்பு உருவாக்கும் உணர்வை இல்லாதாக்கி விடுகின்றது. இதனால் வர்க்கம் சார்ந்த, வர்க்க உணர்வாக்கமாக இடமாறுகின்றது. அதாவது உழைக்கும் வர்க்கம், உழைப்பை சுரண்டும் வர்க்கம் என மனித குலம் இரண்டாகப் பிரிகின்றது. உழைப்பு சார்ந்த மனித உணர்வாக்கத்தை உழைப்பிலிருந்து மனிதனை பிரித்ததன் மூலம் அன்னியமாக்கிவிட, அது வர்க்க உணர்வாக மாறிவிடுகின்றது.

உழைப்பு செயற்பாடு சார்ந்த இருவேறு செயற்பாடுகளில், மனிதகுலம் முழுவதும் பிரிந்து காணப்படுகின்றது. இதை உணருதல் உணராமையில் இருந்து இதை விளங்கிக் கொள்வதற்கு அப்பால், வாழ்க்கை நடத்தும் முறைமை எங்கும் இதுவாகவே காணப்படுகின்றது. இதை தவிர்த்து யாரும் இந்த தனியுடமை சமூக அமைப்பில் வாழ முடியாது. அப்படி இருப்பதாக நம்புவது தனியுடமை சார்ந்த அறியாமையே. இதற்கு அறிவு ரீதியாக ஒளி ஊட்டுவது பொதுவுடமை சார்ந்த மார்க்சியம்.

12ம் பக்கத்திலிருந்து **வடபகுதி மீனவர்களின் ...**

1800 மரவள்ளங்கள் மற்றும் கண்ணாடி இழைப்படகுகள் மூலம் தொழில்புரியும் 6000 தொழிலாளிகளுமே.

மேற்படி தொழிலாளர்களை இரண்டுவகையில் இழுவைப்படகுகள் நேரடியாக பாதிக்கின்றன. முதலாவது, மேற்கூறிய மீன்கள் பருவகாலத்தில் கரைப்பகுதிக்கு வர முன்பே ஆயிரக்கணக்கான இந்திய இழுவைப்படகுகள் தமது பாரிய பிடிதிறன் மூலம் மீன்களைப் பிடித்து விடுகின்றனர். இதனால் கரையோரப்பகுதிக்கு வரும் மீன்களின் தொகையில் பாரிய வீட்சி ஏற்படுகிறது. அதிலிருந்தும் தப்பி வரும் மீன்களையும் இவர்கள் கரையோரம் வந்து சிங்கறால்களுக்காக மடி இழுக்கும் போது அள்ளி விடுகிறனர். இரண்டாவதாக, மீதமாக இருக்கும் மீன்களைப் பிடிக்க தொழிலாளர்களால் படுக்கப்படும் வலைகளையும் வெட்டி அழித்துவிடுகின்றன இந்திய இழுவைப்படகுகள். இவ்வகையில் இலங்கை மக்களுக்கு சொந்தமான கடல்வளங்களை களவாடுதல் மட்டுமல்லாமல் அவர்களில் பல இலட்சங்கள் பெறுமதியான படுப்புவலைகளை வெட்டுவதன் மூலமும் பொருளாதார நஷ்டத்தையும், வறுமைச் சுமையையும் இந்தியர்கள் எம் தொழிலாளிகள் மீது சுமத்துகின்றனர்.

உதாரணம் 5 .

இதே அடிப்படையில் தான் மன்னார் பகுதியில் கரைவலைத் தொழில் செய்யும் கிட்டத்தட்ட இரண்டாயிரம் தொழிலாளர்கள் இந்திய இழுவைப்படகுகளால் பாதிக்கப்படுகின்றனர். கரைவலைத் தொழிலானது வெள்ளம் நுகைக்கும் போது கரைக்கு கூட்டமாக வரும் மீன்களை வலையால் வளைந்து பின்பு அவ்வலையை கரைக்கு இழுப்பதாகும். இந்திய இழுவைப்படகுகள் அம்மீன்கள் கரைக்கு வருமுன்பே கரையிலிருந்து ஒரு கடல்மைல் தூ ரத்திலிருந்து பிடித்து விடுவதனால் கரைவலைத் தொழிலும் அது சார்ந்து வயிற்றைக் கழுவும் தொழிலாளிகளின் குடும்பங்களும் பாதிப்படைக்கின்றனர். வடபகுதியில் கரைவலைத் தொழில் செய்வோர் மிகவும் வறிய நிலையிலுள்ள தொழிலாளர்களாகும் என்பதை இங்கு நாம் நினைவிற் கொள்வது நன்று.

முடிவாக :

வட பகுதி மீனவர்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் நிலையில் இன்று உள்ளனர் . இந்திய ஆதிக்க அரசும், அதன் மூலதனமும் எம் மீனவ மக்களின் கண்ணீரைக் கணக்கில் எடுப்பதாகத் தெரியவில்லை. மாறாக, வடகடலில் தனது படகுகளின் மீன்பிடிக்கும் ”உரிமையை ” நிலைநாட்ட பலவழிகளிலும் முயல்கிறது இந்தியா. இதன் தொடர்ச்சியாக இந்தியாவில் நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தமிழ்நாட்டு பிழைப்புவாதக் கட்சிகளும், தமிழ் இனவாத சக்திகளும், நம் தேசத்து வடகடலில் மீன்பிடிக்க இந்தியர்களுக்கு உரிமை உண்டென்பதை வலியுறுத்தி போராட்டம் நடத்துகின்றன. இந்திய மத்திய அரசு, இலங்கை அரசின் கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை உடனடியாக டெல்லி வருமாறு ”அன்பான” கட்டளையிட்டுள்ளது.

இது ஒருபக்கமிருக்க, தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுவதாகக் கூறும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அது சார்ந்த கட்சிகளும், வடமாகாணசபை அமைச்சரவையும் மேற்படி இந்தியக் கொள்ளைக்கு எதிராகக் கதைப்பதற்கும், போராடுவதற்கும் தயாரில்லை. இலங்கை அரசு நடாத்தும், தமிழ் மக்களின் விவசாய - மற்றும் குடியிருப்பு நிலஅபகரிப்புக்கு எதிராக சர்வதேசம் வரை குரல் கொடுத்துப் போராட்டம் நடாத்துவோர் எவரும் மீனவர்களின் உற்பத்திக்களமான வடகடல் பறிபோவதைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. காரணம், இவர்கள் அனைவரின் அரசியல் ஆண்டையா இருப்பது இந்தியா !

இன்று எம் மீனவமக்கள் எதிர்நோக்கும் பட்டினிச்சாவைத் தடுத்து, அவர்களின் வாழ்வை மறுபடியும் உயிர்ப்பிக்க வேண்டுமானால், உடனடியாக எம்தேசத்தின் வடகடலில் நடைபெறும் எல்லை மீறிய இந்திய மீன்பிடி நிறுத்தப்பட வேண்டும். அதற்கெதிரான போராட்டங்களை- வலுவிழந்துள்ள மக்களை வலுவூட்டி, மக்கள் போராட்ட சக்திகள் முன்னெடுக்க வேண்டும். இது இன்று மிக முக்கியமான வாழ்வுக்கான போராட்டமாகும்.

போராட்டம்

185/2A எப்பிட்டி முல்லை வீதி,பிட்டகோட்டே
தொலைபேசி/தெலைநகல்: 094-112799432
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com

## 2014 மாற்றத்திற்கான ஆண்டாகட்டும்!

2004 டிசம்பர் 26ம் திகதி பொங்கி எழுந்த கடலலை ஆயிரக்கணக்கான மக்களையும் சொத்துக்களையும் அள்ளிச் சென்றதோடு, அது எடுத்துச் சென்றதை விட தந்துச் சென்றவை ஏறாளம். அந்த பேரலையினால் இறந்த மக்கள் சிங்களமா, தமிழா, முஸ்லிமா என்பது தெரியாது. பௌத்தரா, ஹிந்துவா, கிறிஸ்தவரா என்பதும் தெரியாது. எந்த இனம் எந்த குலம் என்பதுவும் தெரியாது. பாரிய குழிகள் வெட்டப்பட்டு எல்லோருமே ஒன்றாக புதைக்கப்பட்டனர். சுனாமி எல்லோரும் மனிதர்களே என்ற படிப்பினையை விட்டுச்சென்றது. சொத்து சுகம் சொந்தபந்தம் எல்லாமே அழிந்து அங்கே மனிதம் மற்றுமே எஞ்சி நின்றது. அந்த மனிதத்திற்கு என்ன ஆனது?

30 வருடங்களாக தொடரந்த யுத்தம் ஓய்ந்து விட்டது. சுனாமியைப் போன்று எல்லாமே சகஜ நிலைக்கு திரும்பிவிடுமென மக்கள் எதிர்ப்பார்த்தார்கள். ஏமாற்றம். மழை விட்டும் தூவானம் விடவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்தகால கால சூழ்நிலையே இன்றும் நிலவுகிறது. மக்கள் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை. பேருக்குத்தான் மாகாண சபை, ஆளுவது ராஜபக்ஷவின் இராணுவம். தெற்கின் இனவாதிகளை திருப்திப்படுத்த வேண்டிய தேவை ராஜபக்ஷவுக்கு. வடக்கின் இனவாதிகளை திருப்திப்படுத்த வேண்டிய தேவை தமிழ் தேசியக் கூட்டமைபிற்கு.

முஸ்லிம்களின் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். முஸ்லிம்களுடைய உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் அதற்கான மேய்ப்பர்களாகவே நாங்கள் வந்துள்ளோம் என்று முஸ்லிம் இனவாதத் தலைவர்கள் முஸ்லிம்களின் தலையில் மிளகாய் அரைத்துக் கொண்டிருக்கிறார்கள். எத்தனை கட்சிகள், எத்தனை தலைவர்கள். முஸ்லிம்களின் பிரச்சிணைகள் தீருகின்றனவோ இல்லையோ, மாறி மாறி வரும் அரசாங்கங்களுக்குள் புகுந்துக் கொண்டு உல்லாசத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்த போலித் தலைவர்களின் பிரச்சிணைகள் தீர்க்கபட்டுவிடுகின்றன. முஸ்லிம் மக்கள் சிந்தித்து செயல்பட வேண்டியது நல்லது.

அபிவிருத்தி என்ற போர்வையில் நாட்டின் வளங்கள் ஒருபக்கம் சூறையாடப்படுகின்றன. பாதுகாப்பு என்ற போர்வையில் வடக்கு கிழக்கு மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. கல்வி சீர்த்திருத்தம் என்ற போர்வையில் தனியார் கல்வி நிலையங்களை ஆரம்பப்பதற்கான சந்தர்ப்பங்கள் பணமுதலைகளுக்கு வழங்கப்படுகின்றன. வாழ்க்கைச் சூறாவளியில் சிக்கி மக்கள் விடுபடமுடியாமல் தத்தளித்துக் கொண்டு இருக்கும் நிலையில், மக்களின் அடிப்படை பிரச்சிணைகளைக்கூட தீர்க்க முடியாது அரசாங்கம் வரிக்கு மேல் வரி விதித்து மக்களை மேலும் அதள பாதாளத்திற்குள் தள்ளிக் கொண்டிருக்கிறது. கலாச்சார சீரழிவுக்கான அனைத்து வழிகளையும் திறந்துவிட்டு மனித வாழ்க்கையை, மனித நாகரிகத்தை துச்சமென மதிக்கும் நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு உலகச் சூதாடிகள் வரவழைக்கப்பட்டு நாடு சூதாடிகளுக்கான சொர்க்கபுரியாக மாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இந்த அநியாயங்களை தட்டிக் கேட்கும் மக்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றனர். ஏன் என்றால் வனவாசம், ம்... என்றால் சிறைவாசம் என்ற நிலை.

இன்றை ராஜபக்ஷ சர்வாதிகாரம் தனது நிலைத்தலை உறுதி செய்துக் கொள்வதற்காக இனவாதத்தை கையிலெடுத்திருக்கிறது. தேர்தலில் வெற்றி பெறுவதற்காக சிங்கள பௌத்த இனவாதக்குழுக்களை உருவாக்கி, போஷித்து சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் இனவெறியை வளர்த்துக் கொண்டிருக்கிறது. ஆகவே,

இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களும் பேதங்களை மறந்து இன, மத, மொழி என்பவற்றிற்கு அப்பால் நின்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த அனைத்து பிரச்சிணைகளுக்குமான தீர்வு முதலாளித்துவ சமூக பொருளாதார முறைக்குள் இல்லை என்பதை உணர வேண்டும். இந்த முறையை மாற வேண்டும், மாற்றியமைக்க வேண்டும். அதற்காக அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும் ஓரணியில் திரண்டு இந்த முறைக்கெதிராக போராட வேண்டும். அப்படி போராடினால் மாத்திரமே அனைத்துவித ஒடுக்கு முறைகளிலிருந்தும், அடக்குமுறைகளிலிருந்தும் மீள முடியும். இந்த 2014 புத்தாண்டில் அனைத்து மக்கள் மனங்களிலும் புதிய சிந்தனைகள் மலர்ந்து, சிஸ்டத்தை மாற்றி புதிய சமத்துவ சமுதாயமொன்றிற்கான பாதையில் பயணிப்பதற்காக சக்தி கிடைக்க வாழ்த்துகின்றோம்.

# புலம்பெயர் நாடுகளில் சமவுரிமை இயக்கம் நடாத்திய மனிதவுரிமை தினக் கூட்டங்கள்

டென்மார்க், பிரிட்டன், பிரான்சிலும் பொதுக் கூட்டங்களாகவும், இத்தாலி மற்றும் சுவிஸ்சில் துண்டுப்பிரசுர விநியோகங்களும் நடந்தேறியது. மனிதவுரிமையிலும், சமவுரிமையிலும் அக்கறை கொண்டவர்கள் உணர்வுபூர்வமாக சிறப்புரைகள் ஆற்றியதுடன், புதிதாக இதில் கலந்து கொண்ட ஒருசிலர் சமவுரிமை அமைப்பின் அவசியத்தை புரிந்து கொண்டதுடன், இதில் இணைந்து செயற்படுமளவுக்கு உற்சாகமான நம்பிக்கைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதில் எல்லா இனத்தையும் மதத்தையும் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டதுடன், இந்த நிகழ்வை இணைந்து முன்னெடுத்தனர். இனத்தின், மதத்தின் பெயரில் வித்திடப்படுகின்ற பிளவுக்கு எதிரான, நிகழ்வுகளாக அமைந்தது இதன் முக்கியத்துவமாகும். இதுதான், இதன் சிறப்பும் கூட. மனித உரிமையையும், சமவுரிமையையும் ஒடுக்கும் இனம் மதம் சார்ந்த மக்கள் தரப்போவதில்லை என்ற பொதுவான சிந்தனை முறையை தகர்க்கும் வண்ணம், ஒடுக்கும் இன மதம் சார்ந்த மக்கள் சமவுரிமையை கொடு என்று, ஒடுக்கப்பட்ட மக்களுடன் ஒன்றிணைந்தே மனிதவுரிமை தினத்தை முன்னின்று நடத்தினர்.

இவை வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகவும், கடந்த வரலாற்றில் இது போன்ற அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதுவொரு புதிய தொடக்கம்.

2013இல் ஆரம்பிக்கப்பட்ட சமவுரிமைக்கான செயற்பாடுகளும், தொடர்ந்து அதில் பங்கு கொண்ட ஒரு தரப்புகளுக்குள் நடந்த அரசியல் விவாதங்கள் காரணமான தொய்வுகள் காணப்பட்ட போதும், உற்சாகமான இந்த அரசியல் செயற்பாட்டின் உண்மை மற்றும் முக்கியத்துவம் முதன்மைபெற்று, மனிதவுரிமை தினம் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

இன மத பேதமின்றி அனைத்து மக்களும் ஒன்றிணைந்து தங்களைப் பிளக்கின்ற பேதங்களுக்கு எதிரான போராட்டங்களுக்கு அறைகூவல் விடுத்தனர். இது புலம்பெயர் நாட்டில் புதிய நம்பிக்கைகள் ஊட்டுகின்றனவாக, இதன் சாத்தியமான எதார்த்தத்தை உணர்ந்து கொள்ளும் போக்கு, பொது உணர்வாக கலந்து கொண்டவர்கள் மத்தியில் காணப்படுவதே இதன் முக்கியத்துவத்தையும் இதன் விரிவான செயற்பாட்டையும் கோரி நிற்கின்றது.



# கடத்தலையும், கொலைகளையும் எதிர்ப்போம் சுவிஷ்சலாந்தில் துண்டுப் பிரசுரம் விநியோகம்



““லலித் - குகனை விடுதலை செய்! என்ற தொனிப்பொருளில் முன்னிலை சோஷலிஸக் கட்சியின் சுவிஸ் உறுப்பினர்களால் சூரிச் நகரை அண்டிய பகுதிகளில் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

அத்துண்டுப் பிரசுரம் சிங்களம், தமிழ் மற்றும் ஜர்மன் மொழியில் அச்சிடப்பட்டிருந்ததோடு, அதன் தொனிப்பொருளுக்குள்,

ஆம்! நாங்கள் ஒன்று சேருவோம்! இந்த அழிவை முடிவுக்குக் கொண்டு வருவோம்!

லலித் மற்றும் குகனை உடனே விடுதலை செய்!

கடத்தல்களையும் கொலைகளையும் எதிர்ப்போம்!

காணாமல் போனவர்கள் பற்றிய தகவலை உடனடியா வெளியிடு!

அனைத்து இனவாதங்களுக்கும் எதிராக ஒடுக்கப்பட்ட மக்களின் ஒடுக்கப்பட்ட மக்களின் ஐக்கியத்திற்காக ஒடுக்கப்பட்ட மக்களின் ஒன்றிணைந்த போராட்டத்தின் மீது நம்பிக்கை வைப்போம்! ” போன்ற கோஷங்கள் உள்ளடங்கப்பட்டிருந்தன.

இதிலுள்ள ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் சிங்களவர் , தமிழர் என்ற பேதமின்றி துண்டுப் பிரசுரத்தை பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டியமைதான்.

185/2a எப்பிட்டி முல்லை வீதி,பிட்டகோட்டேயில் வசிக்கும் ஜுட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.